# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி 21 திங்கட்கிழமை (06-09-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:286


# வியாபாரப் பொருளாக இன்றைய சமாதானம்; உண்மையான அர்த்தம் தமிழருக்குத் தெரியும்



## சேது காண்பிய நிகழ்வில் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர்

யாழ்ப்பாணம்,செப்.6

சமாதானம் என்பது இன்று வெறுமனே வியாபாரப் பொருளாகவே இருக்கின்றது. சமாதானத்தின் உண்மையான அர்த்த பரிமாணத்தை போராளிகளும் தமிழ் மக்களும் நன்கு புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

- இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகளின் அரசியல் துறையின் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் தமிழினி.

யாழ். பொது நூலகத்தில் நேற்று ஆரம்பமான 'அகம் - புறம்' என்ற காண்பியக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் கலந்து பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் தமதுரையில் மேலும் கூறியதாவது:-

கடந்த காலப் போரின் கொடூரத்தை சித்திரிக்கின்ற விடயங்களை நாங்கள் இன்று நேரில் பார்க்கின்றோம். போர் பயங்கரமானது. அது எந்தளவுக்கு மனிதர்களின் மனங்களை மோசமாக - கொடூரமாகப் பாதித்துள்ளது என்பதனை இந்தக் கண்காட்சி காட்டுகிறது.

உண்மையில் தமிழ் மக்களாகிய நாங்கள் எப்பொழுதுமே போரை விரும்புபவர்கள் அல்லர். ஆனால் தவிர்க்கமுடியாமல் நிர்ப்பந்தமாக போர் எம்மீது திணிக்கப்பட்டது. தவிர்க்கமுடியாமல் காலத்தின் தேவைகருதி ஆயுதங்களை கைகளில் ஏந்தவேண்டிய நிலைக்குத் தமிழர்கள் தள்ளப்பட்டனர்.

யுத்தத்துக்குப் புறம்பாக நின்று அதனைப் பார்ப்பதனைக் காட்டிலும் யுத்தத்தின் உள்ளே நின்று காண்பவர்களுக்குத்தான் அதன் கொடூரம் அதிகமாகப் புரியும். இரத்தமும் சதையுமாக போரின் அனைத்து வதைகளுக்கும் நேரடியாக முகங்கொடுத்து தற்போது நி[illegible] சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான போராட்டத்தை நாங்கள் நடத்திக்கொண்டிருக்கின்றோம். (16ஆம் பக்கம் பார்க்க)

# மட்டு., அம்பாறை மாவட்டங்கள் நேற்று முழுமையாக ஸ்தம்பிதம்!

## தமிழின உயிர்க்கொலைத் தினத்தை மக்கள் சோகத்துடன் அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு,செப்ரெம்பர்6

**தமிழர் உயிர்க்கொலைத் தினத்தை ஒட்டி மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் நேற்று முற்றாக ஸ்தம்பித்தன. மக்கள் இத்தினத்தை, ஹர்த்தால் அனுஷ்டித்து சோகத்துடன் நினைவு கூர்ந்தனர்.**

1990ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஐந்தாம் திகதி வந்தாறுமூலை, கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் தஞ்சமடைந்திருந்த அப்பாவித் தமிழ் அகதிகள் 158 பேர் படுகொலைசெய்யப்பட்டதன் 14ஆவது ஆண்டு நிறைவையொட்டியே ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

கிழக்குப் பல்கலைக்கழக படுகொலைச் சம்பவம் மற்றும் அக்காலப்பகுதியில் தமிழ் மக்களுக்கெதிராக கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற படுகொலைகளை நினைவுகூரும் வகையில் வருடாந்தம் செப்ரெம்பர் மாதம் ஐந்தாம் திகதி 'தமிழின உயிர்க் (16ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் மூவாயிரம் பேருக்கு தமிழீழ மீட்பு நிதி மீளளிப்பு!

யாழ்ப்பாணம்,செப்.6

தமிழீழ மீட்புநிதிக்கடன் வழங்கியவர்களில் மேலும் 3 ஆயிரம் பேருக்கு அது மீளளிப்புச் செய்யப்படவுள்ளது என்று விடுதலைப் புலிகளின் நிதித்துறை நேற்று அறிவித்துள்ளது.

குலுக்கல் மூலம் ஆயிரத்து 200பேரும் - மூப்பின் அடிப்படையில் ஆயிரத்து 800 பேரும் - மீளளிப்புக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மீளளிப்பு எதிர்வரும் 17 ஆம் திகதிமுதல் இடம்பெறவுள்ளது.

மீளளிப்புப் பெறுபவர்களின் எண்ணிக்கை பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

நல்லூர் - 386, யாழ்ப்பாணம் - 194, கோப்பாய் - 325, உடுவில் - 222, மானிப்பாய் - 225, தெல்லிப்பழை - 186, சங்கானை - 235, காரைநகர், - 30, வேலணை - 104, கரவெட்டி - 246, பருத்தித்துறை - 195, வடமராட்சி கிழக்கு - 30, சாவகச்சேரி - 249, பச்சிலைப்பள்ளி - 19. (16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேச்சை அரசு ஆரம்பிக்க ஐ.தே.கட்சி முழு ஒத்துழைப்புத் தரும்!

### இ.தொ.காவின் முடிவு அக்கட்சியின் விவகாரம் என்கிறார் ராஜித

கொழும்பு,செப்.6

புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்காலத் தன்னாட்சி நிர்வாகக் கட்டமைப்பு ஆலோசனைகளின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டால் ஐ.தே.க. முழு ஆதரவையும் வழங்கும்.

சமாதானத்தை விரும்பாத ஜே.வி.பியின் 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதனை எதிர்த்து வெளிநடப்புச் செய்தாலும் இந்த விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் 64 உறுப்பினர்களும் ஒட்டுமொத்தமாக ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்துவார்கள். இது உறுதி என்கிறது ஐக்கிய தேசியக் கட்சி.

ஐ.தே.க. சிரேஷ்ட உறுப்பினரும் களுத்துறை மாவட்ட எம்.பியுமான டாக்டர் ராஜித சேனாரத்ன இதனை நேற்றுச் செய்தியாளர்களிடம் அறிவித்தார்.

இனப்பிரச்சினை தீர்வுக்கு நிரந்தர தீர்வு காணவேண்டும் என்ற தேசிய அக்கறையுடனேயே புலிகளுடன் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உடன்படிக்கை செய்தார்.

இடைக்காலத் தன்னாட்சி நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பாக அரசு புலிகளுக்கு இடையிலான ஆலோசனைகளும் பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளன.

(16ஆம் பக்கம் பார்க்க)



யாழ். நூலகத்தில் நேற்று ஆரம்பமான கண்காட்சியில் -

'பரல்' யுகத்தை சிங்களக் கலைஞர் ஒருவர் தத்ரூபமாக வெளிக்காட்டும் காண்பியல் காட்சி இது.

## வல்லைவெளியில் பற்றைக்குள் இருந்து எலும்புக்கூடு மீட்பு!

கரவெட்டி,செப்.6

வல்லைவெளி மயானத்துக்கு சமீபமாக பற்றைக்குள் இருந்து பெண் ஒருவரின் எலும்புக்கூடு நேற்றுப் பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் முயல் வேட்டையில் ஈடுபட்டிருந்த சிலர் எலும்புக்கூட்டைக் கண்டு, விடுதலைப் புலிகளுக்குத் தகவல் கொடுத்தனர்.

இதையடுத்து வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.தயா சம்பவ இடத்துக்குச் சென்று எலும்புக்கூட்டைப் பார்வையிட்டார். எலும்புக் கூட்டுக்கு அருகில் பெண்கள் அணியும் உள்ளாடை, சிறுவர்கள் அணியும் சப்பாத்துக்காலுறைகள், வெள்ளைச் சட்டை ஆகியன காணப்பட்டன. இது தொடர்பாக விடுதலைப் புலிகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனர். (எ-3-70)

## தொண்டமானின் முடிவு மன்னிக்கமுடியாத குற்றம்

### ஈழவேந்தன் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,செப்.6

அரசிற்கு நிபந்தனையற்ற வகையில் ஆதரவளிக்க இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முன்வந்துள்ளமை வரலாற்றில் மன்னிக்கமுடியாத மாபெரும் குற்றமாகும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் அரசிற்கு நிபந்தனையற்ற வகையில் ஆதரவு வழங்க முன்வந்தமை தொடர்பாக கருத்துக் கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மலையக மக்களுக்கும், ஈழத்தமிழ் மக்களுக்கும் ஆறுமுகன் தொண்டமான் உதவி செய்யாவிட்டாலும் எமக்குக் கவலையில்லை. உபத்திரவம் செய்யும் முறையில் அவரது நடவடிக்கைகள் அமைந்திருப்பது ஆழ்ந்த கவலையைத் தருகிறது.

அண்மையில் நடைபெற்ற மாகாண சபைத்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஓட்டமாவடியில் வெடிகுண்டு மீட்பு!

ஏறாவூர்,செப்.6

ஓட்டமாவடி - பஸார் பள்ளிவாசலுக்கு அருகில் சிறிய பாலமொன்றின் கீழ் வைக்கப்பட்டிருந்த குண்டொன்றை நேற்றுமுன்தினம் மாலை வாழைச்சேனைப் பொலீஸார் மீட்டுள்ளனர்.

கைவிடப்பட்ட நிலையில் குண்டொன்று காணப்படுவதாக பொதுமக்களிடமிருந்து கிடைத்த தகவ

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# இதுவரை 20 இராணுவ உளவாளிகள் புலிகளினால் கடத்தப்பட்டனராம்

கொழும்பு,செப்.6

இராணுவப் புலனாய்வுப்பிரிவைச் சேர்ந்த இருபது உறுப்பினர்களை விடுதலைப் புலிகள் கடத்திச் சென்றுள்ளனர் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாவது:-

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு மிகவும் உறுதுணையாக செயற்பட்டுவந்த அதன் இருபது உறுப்பினர்களை விடுதலைப் புலிகள் கடத்திச் சென்றுள்ளனர். அவர்களில் இருவரைத் தவிர ஏனையோர் தமிழர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வுத் துறையில் உயர் பதவி வகித்த முன்னாள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்காளான புண்ணியமூர்த்தி மற்றும் பஞ்சநாதன் போன்றோரும் இதில் அடங்குவர். ஏனையோர் ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் போன்ற இயக்கங்களில் இருந்து பின்னர் இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இருபது பேரும் திடீர் திடீரென காணாமல் போயிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படி அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் மேலும் 21 இற்கும் குறையாத இராணுவப் புலனாய்வு உளவாளிகளைப் புலிகள் படுகொலை செய்துள்ளனர் என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

(க)



கார்த்திகைத் திருவிழாவை முன்னிட்டு மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பூச்சப்பரத்தில் நல்லைக்கந்தன் நேற்றிரவு வீதியுலா வந்ததைப் படத்தில் காணலாம். *(படம் : தீபன்)*

# சிப்பாயும் காதலியும் அறைக்குள் வெடித்த குண்டில் உயிரிழப்பு!

## மாவனல்ல உல்லாச விடுதியில் சம்பவம்

கொழும்பு,செப்.6

மாவனல்லையில் உள்ள உல்லாச விடுதியில் உல்லாசமாக இருக்கச் சென்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் குண்டை வெடிக்கச் செய்து காதலியைக் கொன்று தானும் தற்கொலை செய்துகொண்டார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இளம் பெண்ணொருவருடன் வந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் மாவனல்லையில் உள்ள உல்லாச விடுதியொன்றில் வாடகைக்கு அறை எடுத்து தங்கியுள்ளார். இவர்கள் தங்கியிருந்த அறையில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் பாரிய சத்தத்துடன் குண்டொன்று வெடித்துள்ளது.

இதையடுத்து விடுதியில் ஊழியர்கள் அறையைத் திறந்து பார்த்தனர். அங்கு இராணுவச் சிப்பாயும், அவரது காதலியும் உடல் சிதறிக் கிடந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவர் கண்டியைச் சேர்ந்த நந்தசேன என்ற இராணுவச் சிப்பாய் என தெரிவிக்கப்பட்டது. இளம் பெண்ணின் விவரங்கள் நேற்று மாலைவரை கிடைக்கவில்லை. பொலீஸார் விசாரணை செய்து வருகின்றனர். காதலர்கள் இருவருக்குமிடையில் ஏற்பட்ட கருத்துமுரண்பாடே இந்தக் குண்டுவெடிப்புக்கு காரணமாகவிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

(க)

# பிரிவுபசார நிகழ்வு

தென்மராட்சி,செப்.6

சாவகச்சேரி நகரசபை செயலாளராகக் கடமையாற்றிய மு.செ.சரவணபவவுக்கு நகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தினர் பிரிவுபசார விழா நடத்தவுள்ளனர்.

நாளை செவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்கு சங்கத் தலைவரும், நகரசபை செயலாளருமான திருமதி கு.ஆறுமுகம் தலைமையில் நகரசபை பொது நூலக மண்டபத்தில் விழா நடைபெறும்.

இவ்விழாவில் சிறப்புரையாற்ற தென்மராட்சியில் உள்ள திணைக்களத் தலைவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர் என சங்கச் செயலாளர் சி. இரகுநாதன் தெரிவித்தார். (எ-117)

# இடைக்காலக் கொடுப்பனவு ; அரச ஊழியர் போராட முஸ்தீபு

கொழும்பு,செப்.6

அரச ஊழியர்களுக்கு இடைக்காலக் கொடுப்பனவு ஒன்றை வழங்குமாறு கோரி சமர்ப்பிக்கப்பட்ட சிபார்சை ஏற்க அரசு மறுத்துள்ளது.

அரசின் இந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பரவலாக ஆட்சேப நடவடிக்கைகளில் ஈடுபட அகில இலங்கை எழுதுவினைஞர் சங்கம் முடிவு செய்துள்ளது.

திடீரென வாழ்க்கைச் செலவு அதிகரித்திருப்பதால் அரச ஊழியர்களுக்கு இடைக்காலக் கொடுப்பனவு ஒன்றை வழங்கவேண்டும் என்று சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்கள் அரசைக் கோரியிருந்தன.

கடந்த 2ஆம் திகதி இவ்விடயம் குறித்து அமைச்சரவையில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட சிபார்சு ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார். எனினும் அதற்கு அனுமதி வழங்க அமைச்சரவை மறுத்துவிட்டது எனத் தெரியவருகின்றது. புதிய அரசு சமர்ப்பிக்கவிருக்கும் வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படவிருப்பதால் இடைக்காலக் கொடுப்பனவு ஒன்றை வழங்கமுடியாது என அமைச்சரவை முடிவு செய்துள்ளது என்று கூறப்பட்டது.

தற்போது அரசு பெரும் நிதி நெருக்கடிக்குள் சிக்கியிருப்பதால் இடையில் எந்தக் கொடுப்பனவுகளையும் வழங்கமுடியாது என நிதியமைச்சர் சரத் அமுனுகம திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளாராம்.

அரசின் இந்த முடிவுக்கு எதிராக அரச ஊழியர் தொழிற்சங்கங்கள் போர்க்கொடி தூக்குவதற்குத் தயராகிவருகின்றன. அகில இலங்கை எழுதுவினைஞர் சங்கத் தலைவர் ஜி.கே.பியதாச, தமது சங்கம் அரசின் முடிவுக்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடப்போகிறது என எச்சரிக்கை விடுத்துள்ளார். (க)

# ஹக்கீமை வீழ்த்துவதற்கு - குமாரி கூரே; ஆறுமுகனுக்கு - இந்தியத் தோழியா?

## அவரது 'பல்டி'யின் பின்னணி மர்மங்கள் குறித்து சர்ச்சை!

கொழும்பு,செப்.6

ஸ்ரீல.மு.காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு இலங்கை அழகி குமாரி கூரே போன்று இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கு அவரது தோழியான இந்திய அழகியால் தலையிடி ஏற்பட்டுள்ளதா?

இந்தத் தலையிடியைத் தீர்ப்பதற்காகவே இ.தொ.காவை அரசுப் பக்கத்துக்கு அடகு வைக்க அவருக்கு நேரிட்டுவிட்டதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

இந்திய அழகியுடன் தொடர்புடைய - சுமார் 700 கோடி ரூபா பெறுமதியான அரச ஒப்பந்த விடயம் சர்ச்சைக்குள்ளானதே ஆறுமுகன் தொண்டமானின் திடீர் 'பல்டிக்'குக் காரணம் என்று ஆங்கில வார இதழ்கள் பரபரப்பாக செய்திகள் வெளியிட்டிருக்கின்றன.

இதுவிடயத்தில் கழுத்துக்கு வரவிருக்கும் சுருக்குக் கயிற்றை தளர்த்திவிடுவதில் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, ஆறுமுகன் தொண்டமானுக்குக் கைகொடுத்து உதவியுள்ளாராம்.

ஆறுமுகன தொண்டமான் இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எழுதிய கடிதமும் இதனை ஊர்ஜிதப்படுத்தியுள்ளது.

இ.தொ.கா. சுயமாகவே - எந்தவிதமான நிபந்தனைகளும் இன்றி - அரசுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துவிட்டது என ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியுள்ள ஆறுமுகன, கடிதத்தின் இறுதியில் "அமைச்சர் மங்கள சமவீரவுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது ஏன்?

இ.தொ.கா. சுயமாகத் தீர்மானிக்கின்றது என்றால் இடைத்தரகராக மங்கள சமரவீர அங்கு வந்தது ஏன்? என்ற கேள்வியும் ஆறுமுகத்தின் மீது சந்தேகத்தை எழுப்பிவிட்டுள்ளது.

ஆறுமுகன் தொண்டமான் கடந்த அரசின் காலத்தில் நகர அபிவிருத்தி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சராக இருந்தபோது அவரால் வழங்கப்பட்ட ஒப்பந்தமே இப்பொழுது அவரைச் சிக்கலில் மாட்டிவிட்டிருக்கின்றது.

ஹைதராபாத்தில் தலைமை அலுவலகத்தைக் கொண்ட கொம்பியூட்டர் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு 70 லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான ஒப்பந்த அங்கீகாரம் அளித்துள்ளார் ஆறுமுகம்.

இந்த நிறுவனத்தின் ஆளாக ஓர் இந்திய அழகி இங்கு அடிக்கடி வந்துபோயுள்ளார். ஆறுமுகனும் அவரைப் பல்வேறு இடங்களுக்கு அழைத்துச் சென்று உபசரித்துள்ளார் என்றும் - தென்பகுதியில் பிரசித்திபெற்ற உல்லாச விடுதிகளிலும் அந்த இந்திய அழகியைத் தங்க வைத்திருந்தார் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஹைதராபாத் நிறுவனத்துக்கு அந்த ஒப்பந்தத்தை வழங்கி அமைச்சர் என்ற வகையில் ஆறுமுகன் அங்கீகாரம் அளித்தபோதும் அதிகாரிகள் மட்டத்தல் அதற்கு எதிர்ப்புக் கிளம்பியதால் இத்திட்டம் தடைப்பட்டது.

முன்னைய அரசின் காலத்தில் தமக்கு எதிர்த்தரப்பிலிருந்த அமைச்சர்கள் தொண்டமானின் இந்த ஒப்பந்தத் திட்டத்தை ஆட்சேபிதது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார்.

எதிர்பாராத விதமாக அரசாங்கம் கலைக்கப்பட்டதால், நீர்வழங்கல் அதிகார சபை அதிகாரிகளும், தொழிற்சங்கங்களும் அங்கு ஏற்பட்டிருந்த ஊழல் மோசடிகள் தொடர்பாக பட்டியல் ஒன்றை புதிய அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவிடம் ஒப்படைத்துவிட்டனர்.

இம்மோசடிகள் தொடர்பாக இரகசிய பொலீஸாரின் விசாரணைகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இவ்விடயங்களை ஆதாரங்களுடன் தெரிந்துகொண்ட ஆங்கில வார இதழ் ஒன்று ஆறுமுகனின் சாகசங்கள் அடுத்தவாரம் விவரமாக வெளிவரும் என்ற சிறு செய்தியை முன்னைய வாரத்தில் வெளியிட்டிருந்தது.

இந்தச் செய்தியே இ.தொ.கா. தலைவர் ஆறுமுகனைக் கதிகலங்கச் செய்துவிட்டது.

எப்படியாவது ஐ.தே.க. தலைவரின் உதவியுடன் இந்தச் செய்தியை அப்பத்திரிகையில் வெளிவராமல் தடுக்கப் பல்வேறு முயற்சிகளை கையாண்டாராம் அவர். பலன் இல்லை. நேரடியாகப் பத்திரிகை ஆசிரியருடனேயே தொடர்புகொண்டு இவ்விடயத்தை அம்பலப்படுத்தவேண்டாம் என விநயமாக அவர் கேட்டுள்ளார்.

ஆனால், ஆறுமுகனின் கோரிக்கையை அந்த ஆங்கில ஏட்டின் ஆசிரியர் நிராகரித்துவிட்டாராம்.

'சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழுவது மேல்' என்ற தனது பழைய சகாவான மங்கள சமவீரவுடன் தொடர்புகொண்டுள்ளார்.

செய்தி வெளியானால் என்ன, உம்மை சிக்கலில் இருந்து காப்பாற்றுகிறேன் என்று உத்தரவாதம் அளித்துள்ளார் மங்கள சமரவீர. இதன் அடிப்படையில் பொலீஸ் விசாரணைகளில் இருந்து தப்பும் வகையில் ஏற்கனவே ஆறுமுகன் வசமிருந்த நகர அபிவிருத்தி அதிகார சபையை உள்ளடக்கிய அமைச்சு ஒன்று இ.தொ.காவிற்கு வழங்கப்படவுள்ளதாம்.

இதனால் தடைப்பட்ட இந்திய கம்பனிக்கான ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்படலாம். விசேடமான பொலீஸ் விசாரணைகளில் இருந்தும் தப்பிக்கொள்ளலாம்.

இந்த சுயநலமான நோக்குடனேயே ஆறுமுகன் 'பல்டி' அடித்துவிட்டார் என அந்த ஆங்கில நாளிதழ் சுட்டிக்காட்டியுள்ளது.

மேற்படி ஒப்பந்தப் பிரச்சினை சிக்கலாகாமல் முடிவுக்குக் கொண்டுவந்து, நிலைமையைச் சமாளிப்பதற்காக தமது கட்சி அணிமாறி அரசுத் தரப்புக்கு ஆதரவு கொடுக்க முன்வந்துவிட்டது என்ற செய்தியை தனது இந்தியத் தோழியுடன் பகிர்ந்து கொள்வதற்காகவே மேற்படி தமது முடிவு பற்றிய அறிவிப்பை கடந்த வெள்ளியன்று பத்திரிகையாளர்களுக்கு அறிவித்த கையோடு - சூட்டோடு - ஹைதராபாத்திற்குப் பறந்தார் ஆறுமுகனார் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள். (எ-க)



சேது காண்பியக் கலைக்கான கற்கைப்புலமும், தீர்த்த சர்வதேச கலைஞர் கூட்டிணைப்பும் இணைந்து ஏற்பாடு செய்த 'அகம் - புறம்' என்ற காண்பியக் கண்காட்சி நேற்று யாழ். பொது நூலகத்தில் ஆரம்பமானது. கண்காட்சியை சிறப்புக் கலாவாரிதி சின்னத்தம்பி அமரசிங்கம் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட அகழ்வாராய்ச்சியாளர் ஜகத் வீரசிங்க, யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோரையும் காட்சிப்படுத்தப்பட்ட சித்திரம் ஒன்றையும் படங்களில் காணலாம். *(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

உதயன்

# பூச்சுற்றும் வேலை பலன் தராது

“மீண்டும் யுத்தம் வரவே வராது. யுத்தத்திற்கு வாய்ப்பு இல்லவே இல்லை.” - இப்படி அடித்துக் கூறியிருக்கின்றார் இலங்கைத் தீவின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

“இந்த இனப்பிரச்சினை விவகாரத்தோடு சுமார் இருபது வருடங்களாக நான் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளேன். முன்னர் எப்போதும் இல்லாத அளவிற்கு இப்போது அமைதிப் பேச்சுக்கள் மீளத் தொடங்கி, முன்நகர்ந்து, வெற்றி கண்டு, இறுதித் தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுள்ளது.” - என்றும் ஜனாதிபதி கூறியிருக்கின்றார்.

அவர் குறிப்பிட்டிருக்கும் விடயங்கள் உண்மையானால் மிக்க நல்லது. எல்லோருக்கும் மகிழ்ச்சி. வரவேற்கத்தக்க நிலைமை.

ஆனால், உண்மை நிலைமையைத்தான் அவர் இப்போது வெளியிடுகின்றாரா அல்லது வழமை போன்ற அவரது ‘வாய் வீச்சின்’ அங்கமா இவை என்பதே கேள்வி.

மீண்டும் போர் வராது என்பதற்கு அவர் கூறும் காரணங்கள், அவரது கூற்றின் உண்மைத்தன்மையை - நம்பக நிலைப்பாட்டை - சந்தேகத்துக்கு உள்ளாக்குகின்றன.

“புலிகளின் நடவடிக்கைகள் குறித்து ஐரோப்பியூனியன் அண்மையில் கடும் வாசகங்கள் அடங்கிய கண்டன அறிக்கையை வெளியிட்டுள்ளது. சர்வதேச சமூகத்தின் கருத்துக் குறித்துப் புலிகள் அதிகம் சிரத்தை கொண்டுள்ளார்கள். யுத்தத்தை மீளத் தொடங்கினால் சர்வதேச சமூகத்தின் எரிச்சல் தங்களுக்கு எதிராகத் திரும்பும் என்பது புலிகளுக்கு நன்கு தெரியும். ஆகவே, மீண்டும் யுத்தத்திற்குப் போய் பெரிதாகச் சாதிப்பதற்குப் புலிகளுக்கு ஏதும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எனவே, யுத்தம் வரவே வராது என நம்புகிறேன்” - இவ்வாறு தமது நம்பிக்கையையும் அதற்கான காரணத்தையும் விளக்கியிருக்கின்றார் ஜனாபதிபதி.

இங்குதான் ஜனாதிபதி தப்பிப்பிழைத்திருக்கின்றார் - தவறான நம்பிக்கை கொண்டிருக்கின்றார் - என்பது புலப்படுகின்றது.

சர்வதேச சமூகத்துக்குப் பயந்து தங்களின் போராட்டத்தைப் புலிகள் கைவிட்டு விடுவார்கள் என்ற அசாத்திய நம்பிக்கையில் ஏதேதோவெல்லாம் சொல்கிறார், செய்கிறார் ஜனாதிபதி.

கருணா மூலம் தமிழர் தரப்பைச் சீண்டிப்பார்ப்பது தொடக்கம், அமைதி முயற்சிகளைத் தொடங்காமல் இழுத்தடிப்பதுவரை ஜனாதிபதியினதும் அவரது அரசினதும் நடவடிக்கைகளுக்குத் துணிவையும் திடத்தையும் தந்திருப்பது, சர்வதேச சமூகத்துக்குப் பயந்து புலிகள் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கைதான்.

ஆனால், தமது மக்களின் நியாயமான, நீதியான அபிலாஷைகளை நிறைவு செய்யவும், அவர்களுக்குக் கௌரவமான விடுதலை வாழ்வைப் பெற்றுக்கொடுக்கவும் அவர்களின் தாயகத்தினதும் இனத்தினதும் நிலையான இருப்பை உறுதிப்படுத்தவும் எந்த மலையுடனும் மோதத் தயாரானவர்கள் புலிகள், அவர்கள் தங்கள் பற்றுறுதியில் விட்டுக்கொடுக்காத இறுக்கமுடையவர்கள் என்பதெல்லாவற்றையும் புரிந்துகொள்ளாமல் ஜனாதிபதி கற்பனை பண்ணுகின்றார்.

“ஈழத்தமிழர்களுக்கு நியாயமானதை - அவர்களின் அபிலாஷைகளை நிறைவுசெய்யக்கூடிய நியாயத் தீர்வை - வழங்குவதற்கு எனது அரசு சித்தமாக இருக்கின்றது. எனவே, யுத்தம் செய்யவேண்டிய தேவை புலிகளுக்கு இல்லை.

ஆகையால் மீண்டும் யுத்தம் ஏற்படாது என நம்புகிறேன் ” - என்று ஜனாதிபதி கூறியிருப்பாரானால் அவரது நம்பிக்கையில் அர்த்தமும் உண்மையும் அதற்கான சாத்தியமும் இருப்பதாக நம்பலாம்.

இதைவிடுத்து, “சர்வதேசத்துக்குப் பயந்து புலிகள் யுத்தத்துக்குப் போகமாட்டார்கள், ஆகவே யுத்தம் வரவே வராது” - என்று அவர் அடித்துக் கூறுவது சுத்த அபத்தம்.

கருணா குழுவுக்கு தனது அரசும் இராணுவமும் உதவிசெய்யவே இல்லை என்று மீண்டும் - இப்போது - ஜனாதிபதியும் கூறியிருக்கின்றார். இது ‘முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும்’ மூட எத்தனம்.

சிறையிலிருந்த கருணாவின் ஆளான சச்சு மாஸ்டரை சிறையிலிருந்து வெளியே எடுப்பித்து, அவர் மூலம் மட்டக்களப்பு நகரப் பகுதியில் புலிகளின் மட்டக்களப்பு அரசியல் பொறுப்பாளர் சேனாதியை நட்டநடு வீதியில் வைத்துச் சுட்டுக்கொலை செய்தமை வரை கருணா குழுவுக்கும் இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கும் உள்ள தொடர்புகள் பற்றிப் பல்வேறு விடயங்கள் அம்பலமாகி விட்டன.

கருணா தரப்பில் இயங்கி, இராணுவப் புலனாய்வுத் துறையின் வழிகாட்டலில் செயற்பட்ட பலர் இப்போது புலிகளின் வலையில். அவர்கள் இராணுவப் புலனாய்வுத்துறையின் உயிருட்டலில் கருணா குழு நின்று பிடித்த சரித்திரத்தை மகாபாரதம் போல ஒப்புவிப்பார்கள். ஹிங்குராங்கொடை நீதிமன்றத்தில் கருணா குழுவுக்கு தில்லுமுல்லு வகையில் வக்காலத்து வாங்கி, பிணை விடுவிப்பு பெற்றுக்கொடுக்கப்பட்டது வரை பல சம்பவங்களுக்குச் சாட்சியங்கள் உண்டு. இவை எல்லாம் இருக்கத் தக்கதாகத்தான் கருணா தரப்புக்கு அரசு அல்லது இராணுவம் ஆதரவு அளித்ததை ஆதாரப் படுத்தப் புலிகள் தவறிவிட்டார்கள் என்று பூச்சுற்றப் பார்க்கிறார் ஜனாதிபதி.

இந்தப்போக்கில் விடயங்களை அணுகினால் சமரசம் மூலம் தீர்வு காண்பது சாத்தியப்படாது என்பதை அவர் புரிந்துகொள்வது நல்லது.

# ஆசிரியர் வெற்றிடங்களை ஆண்டு இறுதிக்குள் நிரப்புக!

## கல்வி அமைச்சுக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு,செப்.6

324 தேசியப் பாடசாலைகள், 327 நவோதயப் பாடசாலைகள் மற்றும் 57 மத்திய மகா வித்தியாலயங்களில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை எதிர்வரும் டிசெம்பர் மாத இறுதிக்குள் பூரணமாக நிரப்புவதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கல்வி அமைச்சுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் தாரா டீ மெல் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்கள் பிரித்து வகுப்பதில் காணப்படும் முறையற்ற தன்மை மற்றும் விசேடமான துறைகளுக்குப் போதிய ஆசிரியர்கள் இல்லாமை போன்ற காரணங்களால் இந்தப் பாடசாலைகளில் ஆசிரியப் பற்றாக்குறை ஏற்படுவதாகச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

விஞ்ஞான பீடங்களிலிருந்து வெளியேறும் பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு இந்தப் பாடசாலைகளின் ஆசிரிய வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

இத்திட்டத்திற்கமைய மிகக் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு விசேட கொடுப்பனவில் ஒன்றை 2 ஆயிரத்து 500 ரூபா வழங்குவதற்கும் மற்றும் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு ஆயிரத்து 500 ரூபா கொண்ட கொடுப்பனவு ஒன்றை வழங்குவது தொடர்பாகவும் அமைச்சரவையின் அனுமதியைப் பெற ஜனாதிபதி தீர்மானித்திருப்பதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மிகக் கஷ்டமான பிரதேசங்கள் மற்றும் கஷ்டமான பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் சேவையாற்ற ஆசிரியர்களை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த விசேட கொடுப்பனவுத் திட்டத்தை முன்வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-204)

## ஆபாச விளம்பரம் பற்றி தகவல் தெரிவிக்கக் குழு

கொழும்பு,செப்.6

தரக்குறைவான திரைப்படக் காட்சிகளை விளம்பரப் பலகைகளில் ஒட்டுவது குறித்தும் சிறுவர் ஆபாசப் படங்கள் வெளியிடப்படுவது குறித்தும் முறைப்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கென கலாசார தேசிய பாரம்பரிய அமைச்சு குழு ஒன்றை அமைததுள்ளது.

நாட்டின் எந்தப் பகுதியில் இருந்தும் இத்தகைய முறைப்பாடுகளை பத்தரமுல்லையில் செத்சிறிபாய கட்டடத்தின் எட்டாவது மாடியில் இயங்கும் இக்குழுவுக்கு அனுப்பிவைக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அல்லது 0112888503 அல்லது 077 3043676 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொண்டு தெரிவிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

## ‘தூரிகைத் தூறல்கள்’ நூல் கல்வியியல் கல்லூரியில் வெளியீடு

யாழ்ப்பாணம்,செப்.6

யாழ்ப்பாணம் தேசிய கல்வியிற் கல்லூரி நுண்கலை மன்றத்தின் ‘தூரிகைத் தூறல்கள்’ நூல் நேற்றுமுன்தினம் வெளியிட்டு வைக்கப்பட்டன.

யாழ். தேசிய கல்வியில் கல்லூரி நுண்கலை மன்றம் நடத்திய ‘அழகெழல் போட்டி 2004’ பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வுகளும் கண்காட்சியும் புதிய மண்டபத்தில் நடைபெற்றன. அப்போது ‘தூரிகைத் தூறல்கள்’ நூலின் முதற்பிரதியை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் வெளியிட்டு வைக்க, வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சு.தியாகலிங்கம் பெற்றுக்கொண்டார்.

முகிழ்நிலை ஆசிரியர் சி.சிவானந்தராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆசியுரையை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதனும் வாழ்த்துரையை கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கமும் வழங்கினர்.

‘அழகெழல்’ போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் கண்காட்சியும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-7-5)

## புற்றுநோய் நிபுணர் இந்தியா பயணம்

யாழ்ப்பாணம்,செப்.6

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை புற்றுநோயியல் நிபுணர் திருமதி வாணிப் பிள்ளை மேலதிக பயற்சிகளைப் பெறுவதற்காக நாளைமறுதினம் இந்தியா செல்லவிருக்கின்றார்.

இந்தியாவில் ஒன்றரை மாதங்கள் தங்கியிருந்து புற்றுநோய் தடுப்பு தொடர் நவீன மருத்துவத் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சியை அவர் அங்கு பெறவிருக்கின்றார். (ஐ-3)





கடத்தப்பட்டு படுகொலைசெய்யப்பட்ட மக்கள் வங்கியின் மானிப்பாய்க் கிளையின் காசாளர் எஸ்.பஞ்சலிங்கத்தின் குடும்பத்துக்கு நேற்றுமுன்தினம் மக்கள் வங்கியின் யாழ். தலைமையகத்தில் வைத்து உதவுதொகை வழங்கப்பட்டது.

வங்கி ஊழியர்களால் அன்பளிப்புச் செய்யப்படும் உதவுதொகைக்கான காசோலைகளை வங்கி அதிகாரிகள், அமரரின் பிள்ளைகளிடம் கையளிப்பதை முதலாவது படத்திலும் -

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் உதவுதொகையான ஒரு லட்சம் ரூபாவுக்கான காசோலையை மக்கள் வங்கி யாழ். பிராந்தியத்தின் நலன்புரி அலுவலர் எஸ்.சுபசீலன், திருமதி பஞ்சலிங்கத்திடம் கையளிப்பதை இரண்டாவது படத்திலும் - காணலாம்.

மக்கள் வங்கியின் விசேட நிறைவேற்று அதிகாரி எஸ்.இளம்பிறைநாதன், பிராந்திய முகாமையாளர் எஸ்.சிவபாதவிருதயர், உதவிப் பிராந்திய முகாமையாளர் ரி.ரகு ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

# தீவுப்பகுதிக்கு ஒக்ரோபருக்குள் 24 மணிநேர மின்சாரம் கிடைக்கும்

## காரைநகரில் இருந்து கடலுக்கு மேலாகக் கேபிள்கள் பொருத்த நடவடிக்கை

ஊர்காவற்றுறை,செப்.6

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்தின் கீழ் (கார்ப்) 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் மின்சார வசதியைப் பெற்றுக்கொண்ட தீவகப் பிரதேசங்களுக்கு மீண்டும் 24 மணிநேர மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இதன்மூலம் மெலிஞ்சிமுனை, கரம்பன், தம்பாட்டி, பருத்தியடைப்பு, நாரந்தனை, புளியங்கூடல், வேலணை, அல்லைப்பிட்டி, புங்குடுதீவு ஆகிய பிரதேசங்கள் 24 மணிநேர மின்சார வசதியை பெற்றுக் கொள்ளவுள்ளதாக ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் கடந்த செவ்வாயன்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தெரிவித்தார்.

காரைநகர் பிரதேசத்திற்கு தற்பொழுது 24 மணிநேர மின்சாரம் வழங்கப்பட்டு வருவதால் அங்கிருந்து ஊர்காவற்றுறை ஊடாக இந்த 24 மணிநேர மின் விநியோகத்தை வழங்கும் பொருட்டு ஆரம்பக் கட்டப் பணிகள் தற்பொழுது ஆரம்பமாகியுள்ளன.

காரைநகரையும் ஊர்காவற்றுறையையும் பிரிக்கும் கடற்பகுதிக்கு மேலாக மின்சார கேபிள்களைப் பொருத்தும் பொருட்டு காரைநகர் இறங்குதுறைக்கு சமீபமாகவும், ஊர்காவற்றுறை துறைமுகத்துக்குச் சமீபமாகவும் இரண்டு கோபுரங்களை அமைக்கும் பணி இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும், எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்திற்கு முன்னர் மேற்படி மின் இணைப்பு வேலைகள் நிறைவேற்றி முடிக்கப்படவேண்டியுள்ளதாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் மேலும் தெரிவிததுள்ளார்.

மின் இணைப்பு வேலைகள் பூர்த்தியடைந்ததும் மேற்படி பகுதியிலுள்ள பாடசாலைகள், அரச மற்றும் தனியார் அமைப்புக்களை கணனி மயப்படுத்தும் வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கக்கூடியதாக இருப்பதுடன் -

வைத்தியசாலைகளில் உள்ள குளிரூட்டிகளில் 24 மணி நேரமும் மருந்து வகைகளைப் பாதுகாப்பாகப் பேணமுடிவதுடன் தீவுப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து சொந்த இடங்களில் மீளக்குடியமராத குடும்பங்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்வார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-16)

### நாளை

ஆவணி 22
செவ்வாய்க்கிழமை
(07.09.2004)
திதி : அட்டமி
முற்பகல் 11.17 வரை.
நட்சத்திரம் : மிருகசீரிடம்
முழுவதும்
சுபநேரம்: 10.34 - 12.04
ராகுகாலம்: 3.04 - 4.34
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

எந்தவொரு வேலையையும் அன்புடன் கையாளுவோமானால் அதில் உடனடி வெற்றிகிடைக்கும்.

# ரஷ்யாவில் பாடசாலை மீட்புத் தாக்குதல்: இறந்தவர் எண்ணிக்கை 360 ஆக உயர்வு!

## ஐரோப்பிய நாடுகள் கடும் கண்டனம்

பெஸ்லன்,செப்.6

ரஷ்யாவில் தீவிரவாதிகளிடம் இருந்து பாடசாலை மாணவர்களை மீட்கும் முயற்சியில் இராணுவம் அதிரடித் தாக்குதல் நடத்திய நடவடிக்கைக்கு ஐரோப்பிய நாடுகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. தாக்குதலில் பலியானவர்களின் எண்ணிக்கை 360 ஆக உயர்ந்துள்ளது. 650 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

தீவிரவாதிகளுக்கும், அதிரடிப்படையினருக்கும் இடையே நடந்த மோதலில் பலியானவர்களின் எண்ணிக்கை 360 ஆக உயர்ந்துள்ளது.

தீவிரவாதிகள் வெடிகுண்டை வெடிக்கச் செய்ததில் கட்டடங்கள் தகர்ந்து விழுந்தன. இதில் இடிபாடுகளில் சிக்கியும் குண்டு பாய்ந்தும் ஏராளமானவர்கள் பலியாகினர்.

மாணவர்கள் பணயக்கைதிகளாகப் பிடிக்கப்பட்ட விவகாரம் முடிவடைந்துவிட்டது. என்றாலும், தீவிரவாதிகள் மீது அதிரடித் தாக்குதல் நடத்தியதற்கு நெதர்லாந்து உட்பட பல்வேறு ஐரோப்பிய நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. அதிரடித்தாக்குதல் நடத்தியதால்தான் உயிர்ச் சேதம் அதிகமாகிவிட்டது என்று அந்த நாடுகள் தெரிவித்துள்ளன.

ஆனால், வேறு வழியில்லாமல்தான் இந்த நடவடிக்கை எடுக்கவேண்டியதாயிற்று என்று அதிபர் விளாடிமிர் புடின் இத்தாக்குதலுக்குப் பதிலளித்துள்ளார்.

இத்தாக்குதலில் பலியானவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் ரஷ்யா முழுவதும் 2நாள் துக்கம் கடைப் பிடிக்கப்படுகிறது. இன்றும் நாளையும் அரசப் பொது நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

பாடசாலைக் கட்டடத்தின் உள்ளே உடல்கள் இரத்த வெள்ளத்தில் சிதறிக்கிடந்தன. அவற்றை இராணுவம் சேகரித்தது. பெரும்பாலான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் முதுகில் துப்பாக்கிக் குண்டு துளைத்திருந்தது. அவர்கள் தப்பியோடும் போது தீவிரவாதிகள் வெறித்தனமாகச் சுட்டுத்தள்ளியுள்ளனர்.

வெடிகுண்டுகளில் சிக்கிய மாணவர்களின் உடல்கள் சின்னாபின்னமாகியிருந்தன. கொல்லப்பட்டவர்களில் இது வரை 97 பேரின் உடல்கள் மட்டுமே அடையாளம் காணப் பட்டுள்ளன.

இச்சம்பவத்தில் 650 பேர் காயமடைந்தனர். பெஸ்லன் நகரில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. 90 பேர் கவலைக்கிடமான நிலையில் உள்ளனர். அவர்களை எடுத்துச் சென்று மொஸ்கோவில் சிகிச்சை அளிப்பதற்காக இரண்டு சிறப்பு விமானங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

பாடசாலைக் கட்டடத்தின் இடிபாடுகளை அகற்றும் பணி நடக்கிறது. இடிபாடுகளில் மேலும் பல உடல்கள் கண்டெடுக்கப்படலாம் என்பதால் இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் உயரும் என்று அஞ்சப்படுகிறது. பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர்கள் கதறி அழுகின்றனர். பார்ப்பவர்களின் மனதில் அக்காட்சி துயரத்தை வரவழைக்கிறது.

பாடசாலையில் இருந்து தப்பியோடிய தீவிரவாதிகளை கொமாண்டோக்கள் துரத்திச் சென்று வேட்டையாடினார்கள். தீவிரவாதிகளில் 27 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் 9பேர் அரேபியாவைச் சேர்ந்தவர்கள். ஒருவர் கறுப்பினத்தைச் சேர்ந்தவர்.

தனிநாடு கோரும் செச்சினியத் தீவிரவாதிகளுடன் அல் கெய்டாத் தீவிரவாதிகளும் சேர்ந்து இந்தப் படுபாதகச் செயலைச் செய்துள்ளனர். தீவிரவாதிகளின் தாக்குதலில் கொமாண்டோப் படையினர் பத்துப்பேர் கொல்லப்பட்டனர்.

ரஷ்ய அதிபர் புடின் நேற்றுமுன்தினம் காலை யாரும் எதிர்பாராத வகையில் பெஸ்லன் நகருக்கு வந்தார். மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்களைப் பார்த்து ஆறுதல் கூறினார்.

அங்கு அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது:

மாணவர்களுக்குப் பாதிப்பில்லாமல் மீட்க முயற்சித்தோம். ஆனால் எதிர்பாராத விதமாக என்னென்னவோ நடந்து விட்டன. தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளைப் பிடித்து அவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்கப்படும். ஒஸ்டியா மாகாணத்தின் எல்லைகளை மூடி தேடுதல் வேட்டை நடத்தும்படி உத்தரவிட்டுள்ளேன் - என்றார்.

ரஷ்யப் பாடசாலையில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு அமெரிக்க அதிபர் புஷ், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், பிரிட்டன் பிரதமர் ரொனி பிளயர் உள்ளிட்ட உலகத் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதுபோன்ற தீவிரவாதச் செயல்களை எந்தக் காரணத்தைக் கூறியும் நியாயப்படுத்த முடியாது. இந்த நாகரிக உலகத்தை அச்சுறுத்த தீவிரவாதிகள் எந்தளவுக்கு துணி வர்கள் என்பது இச் சம்பவத்தின்மூலம் மீண்டும் நினைவுபடுத்தப்பட்டுள்ளது. ரஷ்ய மக்களுடன் அமெரிக்கா சேர்ந்து நிற்கும். இந்தப் பயங்கரச் சூழ்நிலையில் அவர்களுக்காக பிரார்த்திக்கின்றோம் என்று அமெரிக்க அதிபர் புஷ் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்தார்.

உலக அரங்கில்

# சீனாவில் கடும் மழை பெய்கிறது 19 பேர் பலி; 40 பேர் படுகாயம்!

## இன்னும் 13 பேரைக் காணவில்லை

சிச்சுவான்,செப்.6

சீனாவின் தென்மேற்குப் பகுதியில் மூன்று நாள்களாகத் தொடர்ந்து பெய்துவரும் பெரும் மழையால் நேற்றுவரை 19 பேர் கொல்லப்பட்டுள்ளனர். குறைந்தது 21 பேர் காணாமற் போயுள்ளனர்.

சிச்சுவான் மாகாணத்திலேயே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது. மாகாணத்தின் அநேகமான பிரதேசங்கள் நீரினால் மூழ்கியுள்ளன. சில இடங்களில் பாரிய நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

உயிரிழந்தவர்கள் வெள்ளத்தில் அகப்பட்டும், நிலச்சரிவில் சிக்கியுமே பலியானார்கள். இதுவரை 40 பேர் படுகாயமடைந்துள்ளனர் என மீட்புப் பணியில் ஈடுபடும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்பகுதியில் உள்ள பல பண்ணைகளும், நீர் நிலைகளும் சேதமடைந்துள்ளன. போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. இதனால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர். இங்கு பெய்துவரும் மழை இன்னும் சில நாள்களுக்கு தொடரும் என வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த வெள்ள அனர்த்தத்தினால் ஒரு கோடியே ஒன்பது லட்சம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான சொத்துக்கள் சேதமடைந்துள்ளன. வெள்ளப்பெருக்கினால் பல வீடுகள் மூழ்கியுள்ளன.

அங்குள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடமாற்றப்பட்டுள்ளனர். சீனாவில் அண்மைக் காலங்களில் பெரும் மழை பெய்துவருவதால் வெள்ளம் ஏற்பட்டு அதில் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகின்றது.

தற்போது பெய்துவரும் மழையினால் இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அதிகாரிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

காணாமற்போனவர்களைத் தேடி மீட்புப்பணியாளர்கள் மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ளனர். காயமடைந்தவர்கள் அவசர அவசரமாக மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (ஐ-3)

## தூதரகத்துக்கு தபாலில் வந்தது மர்மத்தூள்

மலேஷியாவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு வியாழக் கிழமை வந்த ஓர் அஞ்சல் உறையில் மர்மத் தூள் அடங்கியிருந்தது. இதையடுத்து தூதரகம் உடனடியாக மூடப்பட்டது.

தீங்கு விளைவிக்கும் பொருள்கள் ஆய்வுக்கான மலேஷிய நிபுணர்கள், மர்மத் தூளை ஆய்வுசெய்து வருகிறார்கள் என அமெரிக்கத் தூதரக செய்தித் தொடர்பாளர் பிராங்விடேகர் கூறினார்.

கடந்த இரு வாரங்களில் அமெரிக்கத் தூதரகத்துக்கு தபாலில் இந்த மர்மத்தூள் வருவது இரண்டாவது முறை.

கடந்த மாதம் ஓகஸ்ட் 18 ஆம் திகதியில் மஞ்சள் நிறத் தூளும், ஈராக்கில் இருந்து அமெரிக்கா வெளியேறா விட்டால் தூதரகத்தைத் தகர்ப்போம் என்ற மிரட்டல் கடிதமும் அனுப்பப்பட்டிருந்தன. அந்தத் தூள் அந்திராக்ஸ் அல்ல என்பது அப்போது ஆய்வில் கண்டறியப்பட்டது. (ஐ-க)

R.B.BOOKING CENTRE
ஆர்.பி.(B) பஸ்
ஆசனப் பதிவகம்

(அரச அங்கீகாரம் பெற்ற ஸ்தாபனம்)

மக்களின் கவனத்திற்கு,

எமது ஸ்தாபனத்தினூடாகச் செல்லும் சகல யாழ். ~ கொழும்பு, யாழ். ~ திருமலை வாகனங்களின் பயணக்கட்டணம் ரூபா 1000/= என்பதனை அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்:
MRS.D.Rajaratnam (36147)(43-16-18)
T.P: 021-222 3016, 021-4590219
15,கிறாண்ட் பஜார், யாழ்ப்பாணம்.

## ஈராக்கிலிருந்து வெளியேறுமாறு நேபாளப் பிரஜைகளுக்கு உத்தரவு

ஈராக்கில் தங்கியுள்ள நேபாளப் பிரஜைகள் அனைவரும் அந்நாட்டை விட்டு வெளியெற வேண்டும் என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

கடந்த வாரம் 12 நேபாள பிரஜைகள் ஈராக்கில் இஸ்லாமிய தீவிரவாதிகளால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து நேபாளத் தலைநகர் காத்மண்டுவிலும், நாட்டின் பிறநகரங்களிலும் வன்முறைமிக்க ஆர்ப்பாட்டங்கள் தூண்டப்பட்டிருந்தன.

அவற்றில் இருவர் கொல்லப்படவே, காத்மண்டுவில் அரசு ஊரடங்கு உத்தரவை அமுல்படுத்தியிருந்தது.

ஈராக்கில் ஆயிரக்கணக்கான நேபாளப் பிரஜைகள் இருக்கின்றார்கள் எனவும் ஈராக் பயணத்துக்கு நேபாள அரசு தடைவிதித்திருந்தும் நூற்றுக்கணக்கானவர்கள் அங்கு நுழைய முயன்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-க)

# மரண அறிவித்தல்கள்

## வைரவன் நாகமணி

துன்னாலை மேற்கு, தக்குச்சம்பாதியை வசிப்பிடமாகக் கொண்ட வைரவன் நாகமணி அவர்கள் 04.09.2004 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவன் - சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பூரணி, கதிராசி, வள்ளிப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் பாக்கியத்தின் அன்புக் கணவரும் மல்லிகாமணி, பாலேந்திரம் (கட்டடப்பொருள்கள் கூட்டுத்தாபனம்), லலிதா, அருமைச்செல்வம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சரசுவதி, தவயோகம் (சமாதான நீதிவான்) ஆகியோரின் மைத்துனரும் குலசிங்கம், சகாயராணி, தங்கராசா, கல்பனா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரவீந்திரன், குகதாசன் (லண்டன்), பூவிலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் மயூதரன், கஜீதரன், திவாதரன், நிலோஜினி, தயீசன் (லண்டன்), யசீதன், டெனீஷன், லோஜிதா, தர்ஷிகா, மௌனிஷா (லண்டன்), டெலிஷன் (லண்டன்), மதுஷன் (லண்டன்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2004) திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு (புதிய நேரம்) நடைபெற்று, பூதவுடல் வேரோண்டை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துன்னாலை மேற்கு,*
*தக்குச்சம்பாதி,*
*கரவெட்டி.*
(36146)(43-16-18)
தகவல்:
நா.பாலேந்திரம்.
(மகன்).

## கதிரவேலு குகதாசன்

(நல்லூர்ப் பிரதேச செயலக ஊழியர்)



கதிரவேலு குகதாசன் அவர்கள் நேற்று (05.09.2004) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு -சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்துச்சாமி-சௌபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சரோஜினியின் அன்புக் கணவரும் சொர்ணரூபா, மதுமதி (கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலாம்பிகை (கனடா), கனகசபாபதி (இலங்கை மின்சாரசபை), நல்லைநாதன் (லண்டன்), இந்திராணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பஞ்சரெத்தினம், யோகராணி, நேசராணி, சதானந்தன், பாலசிங்கம், குணேஸ்வரி, அனுசியா ஆகியோரின் அன்பு மைத்துனரும் கிருபாகரனின் அன்பு மாமனாரும் தயாபரன், ஜெயாதரன், ஜெயந்தன், யசிந்தா, ஜனுதா ஆகியோரின் அன்பு மாமனாரும் அகிலன், அசந்தன், சயந்தன், டிலன், மதுஷா, டனுசன் ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும் பிரவீனா, சஞ்சயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 20, பாரதி வீதி, கச்சேரி-நல்லூர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (06.09.2004) திங்கட்கிழமை பி.ப.3 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.20, பாரதி வீதி,*
*கச்சேரி - நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(36145)(43-16-18)
தகவல்:
க.கனகசபாபதி.

## செல்வி
## பத்மாவதி முருகேசபிள்ளை சாஸ்திரியார்

வேலணை மேற்கு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கோயில் வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பத்மாவதி முருகேசபிள்ளை சாஸ்திரியார் அவர்கள் நேற்று (05.09.2004) ஞாயிற்றுக் கிழமை காலை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோதிடசிகாமணி முருகேசபிள்ளை சாஸ்திரியார்-முத்தாச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மீனாம்பாள் சோதிடர், இலக்குமியமமா சோதிடர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற யாதவராயர் ஆசிரியர் அவர்களின் மைத்துனியும் காலஞ்சென்ற பிரபல சோதிடர் பத்மநாதன் (முன்னாள் உற்பத்தி முகாமையாளர், ரயர்கூட்டுத்தாபனம், களனியா), கமலாட்சி (பிரதம லிகிதர், பிரதேச செயலகம், தெல்லிப்பழை), இராமநாதன் (முன்னாள் கணக்குப்பதிவாளர், கடற்படை, திருகோணமலை), பாலகிருஷ்ணன் (பிரான்ஸ்), இரகுநாதன் (கனடா), சாரதாதேவி (நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, நீர்கொழும்பு), கலாதேவி (பொறியியலாளர், பிரான்ஸ்) ஆகியோரின் சிறிய தாயாரும், காலஞ்சென்ற சத்தியவதி, காலஞ்சென்ற வடிவழகி மற்றும் கிருஷ்ணேஸ்வரன் (ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்), விருத்தாம்பாள், திரியம்பகி (பிரான்ஸ்), இரதி (கனடா), நடராஜலிங்கம் (முகாமைத்துவப் பொறியியலாளர், யூனியன் கார்பைட், நீர்கொழும்பு), Dr. ஈஸ்வரகாந்தன் (விரிவுரையாளர், நான்சி பல்கலைக்கழகம், பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2004) திங்கட் கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*40/02, கோயில் வீதி,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*
*T.P.: 021-4591165* (36148)(43-16-18)
தகவல்:
யாதவராயர் இராமநாதன்.
(பெறாமகன்).

# தனித்துவத்தை இழந்துள்ள ஆசிரியத்துவம் தலைநிமிர்ந்து நிற்கும் நிலை ஏற்படுமா?

"ஆசிரியர்கள் மாணவர்களுக்குக கற்பிப்பதில்லை."

"சம்பளத்துக்காக மட்டுமே பாடசாலைக்குவந்து கூலிக்கு மாரடிக்கின்றனர்."

"ஆசிரியர்கள் மாணவர்களின் நலனில் அக்கறை கொள்வதில்லை."

"ஆசிரியர்களை மேற்பார்வை செய்பவர்கள் மட்டுமே மாணவர்களில் கூடுதலாக அக்கறை கொண்டவர்கள்."

" ஆசிரியர்கள் பாடசாலைகளில் சிறப்பாகக் கற்பிக்காதபடியால்தான் மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களை நாடுகின்றனர்."

"ஆசிரியர்களின் சம்பளப் பணத்தில் வெட்டு வேண்டும்.

"ஆசியர்களிடம் இருந்து தண்டனை வரி அறவிடுதல் வேண்டும்."

இவை இன்றைய ஆசிரியர்கள் தொடர்பான சமூகமட்டக் கணிப்பீடு (C.B.A) (Community Base Assessment) அன்று சமூகத்தின் உயர்ந்த படியில் வைத்து போற்றப்பட்ட ஆசிரியத்துவம் இன்று தலைகுனிந்து நிற்கின்றது.

அதாவது, இன்றைய ஆசிரியத்துவம் தமக்கேயுரித்தான சிறப்பான தனிததுவ நிலையை இழந்துகொண்டு வருகின்றது என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை ஆகும் விளைவு என்ன?

சமூகமும் தலைகுனிகின்றது.

காரணம் என்ன

**ஆசிரியர்களும் ஆசிரியத்துவம்**

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்."

மாதா, பிதா, குரு தெய்வம்"

ஆசிரியத்துவத்தை நேசிக்காத பலர் ஆசிரியர்களாக இன்று பாடசாலைகளுக்கு வருகின்றனர்.

"பிறர் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்ற தாரக மந்திரத்தை மறந்துவிடுகின்றனர்.

உண்மையான ஆசிரியர்கள் மனச்சாட்சிக்கும் கடவுளுக்கும் மட்டும்தான் பயப்படவேண்டும். யாழ். மாவட்ட கல்விச் சமூகத்தில் இன்று கூடுதலாக நடபது என்ன? வீதியால் போவோர் வருவோர் எல்லோருக்கும் பயந்து ஆசிரியத்துவம் தலைகுனிந்து நிற்கின்றது.

போட்டிப் பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார்படுத்துவதன் காரணமாகவோ என்னவோ ஆசிரியர்கள் மத்தியில் போட்டி, பொறாமைகள் மேலோங்கி நிற்கின்றன. மற்றைய ஆசிரியர்களை பொறிவைத்துத் தள்ளி விழுத்திவிட்டு தாம் முன்னுக்குவர முயற்சிக்கும் ஆசிரியர்களே கூடுதலாக இன்றைய பாடசாலைகளில் கடமைபுரிகின்றனர்.

வடகோவை சிவநேசராசன்

அதாவது, இன்றைய ஆசிரியர்களே ஆசிரியத்துவத்தை கூடுதலாக அவமதிக்கின்றனர். இதனால், ஆசிரியத்துவத்தின் சிறப்பான தனித்துவத்தன்மை யாழ். மாவட்ட கல்விச் சமூகத்தில் மறைந்து கொண்டு வருகின்றது. எனவே, சமூகமும் ஆசிரியர்கள் மீதான நம்பிக்கையை இழந்துகொண்டு வருகின்றது.

விளைவு என்ன?

ஆசிரியர்களின் வகுப்பறைக் கற்பித்தலை மேற்பார்வை செய்யும் ஆளணியினரின் எண்ணிக்கை கூடிக்கொண்டு வருகின்றது.

அதாவது, "ஆசிரியர்கள் ஆசிரியத்துவத்தைப் போற்றினால் மட்டுமே சமூகம் ஆசிரியர்களை நேசிக்கும்" என்ற உண்மையை இன்றைய ஆசிரிய சமூகம் மறந்துவிடுகின்றது.

**வகுப்பறைக் கற்பித்தல் மேற்பார்வை**

வெளிநாட்டுக் கடற்கப்பலில் கடமை புரிந்துவிட்டு நாடு திரும்பிய ஒருவர் கப்பலில் வேலை செய்யும்போது தான சாப்பிட்ட கோழி இறைச்சி தொடர்பாகப் பின்வருமாறு கூறினாராம்.

"கோழி உயிரோடு வாழ்ந்த காலத்தைவிட குளிர்சாதனப்பெட்டியில் இருந்த காலம் கூடுதலானது"

இதேபோன்று ஓர் ஆசிரியர் வகுப்பறையில் கற்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையைவிடக் கற்பித்தலை மேற்பார்வை செய்யும் ஆளணியினாின் எண்ணிக்கை சில சமயங்களில் கூடுதலாக இருக்கின்றது. விரைவாக மாறி வரும் உலகில் ஆசிரியர்களும் தமது கற்பித்தல் முறையை மேம்படுத்துவதற்கு சேவைக்கால ஆலோசனைகள் மிகவும் அவசியமானவை ஆகும். ஆனால், எமது யாழ். மாவட்டக் கல்விச் சமூகத்தில் இன்று நடப்பது என்ன?

வகுப்பறைக் கற்பித்தல் மேற்பார்வை என்ற போர்வையில் கள்ளன் பொலீஸ் விளையாட்டுத்தான் கூடுதலாக நடைபெறுகின்றது.

நேர்மையான ஆசிரியத்துவம் சில சமயங்களில் அவமதிக்கப்படுகின்றது. ஆசிரியத்துவத்தை மேம்படுத்துவதற்குரிய சிறந்த வழி ஆசிரியர்களை அவமதிப்பதுதான் என்ற கொள்கையே கூடுதலாகப் பின்பற்றப்படுகின்றது. கற்பித்தலை மேம்படுத்துவதற்குரிய சிறப்பான ஆலோசனைகள் வழங்கப்படுவது குறைவு.

சந்தனமரக் கடத்தல் வீரப்பனின் ஆள்களைப் பிடிப்பதற்காகத் தமிழ்நாட்டுக் காவல்துறை காட்டுக்கு இடையிடையே போகின்றது போல வகுப்பறைக் கற்பித்தல் மேற்பார்வை நடைபெற்றால் ஆசிரியத்துவம் இன்னும் பின் தள்ளப்படுமேயன்றி மேம்பாடு அடையாது.

அதாவது, ஆசிரியத்துவத்தை நேசிக்கின்ற ஆசிரியர்களின் கற்பித்தல் முறையை மேம்படுத்துவதற்கு அனுபவம் வாய்ந்த ஆளணியினரின் ஆலோசனைகள் கூடுதலாக வழங்கப்படுத்துவது காலத்தின் அவசிய தேவையாகும்.

ஆகவே, தனித்துவத்தை இழந்துள்ள இன்றைய ஆசிரியத்துவம் தலைமிர்ந்து நிற்கும் நிலை ஏற்படும்போது மட்டுமே சமூகமும் தலை நிமிரும் என்ற உண்மையை இன்றைய யாழ். மாவட்டக் கல்விச் சமூகம் உணர்ந்து கொள்வது மிகவும் அவசியம் ஆகும்.

# அடியாரது இடையூறுகளை நீக்க கடற்படையினருடன் பேச்சு

## ஆலய பரிபாலனசபை நடவடிக்கை

யாழ்ப்பாணம்,செப்.6

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்திற்குச் செல்லும் அடியார்களுக்கு ஏற்படும் இடையூறு குறித்து ஆலயப் பரிபாலன சபையினர் கடற்படையினருடன் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

இதனடிப்படையில் அடியார்கள் ஆலயத்திற்கு வருவதற்கும் வாகனங்களில் வருவதற்கும் இருந்த தடைகள் நீக்கப்பட்டுள்ளன. இதனால், அடியார்கள் இடையூறின்றி ஆலய வழிபாடுகளை மேற்கொள்ளலாம் எனத் தேவஸ்தான பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆலயத்திற்குச் செல்லும் அடியவர்கள் கடற்படையினரின் சோதனைக் கெடுபிடிகளுக்கு உள்ளாகி வருவதாகச் செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே. (ஐ-204)


இன்று நல்லைக்கந்தன் ஆலயத்தில்
பதினேழாம் திருவிழா
பகல் திருவிழா காலை 10.30 மணிக்கு
இரவுத் திருவிழா மாலை 5.30 மணிக்கு
புள்ளிமயிலேறி வரும் வள்ளிமணாளனே
துள்ளி ஓடிவந்தே வினைகள் தீர்த்திடுவீர்!



விளம்பர அனுசரணை:-
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை
பங்குச் சந்தையில் முதலிட வேண்டுமா?
தொடர்பு கொள்ளுங்கள்:
"பொஸ்கோ"
இல.252, பருத்தித்துறை வீதி,நல்லூர்.
யாழ்ப்பாணம் (நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாக)
06.10.2004 முதல் 15.10.2004வரை
காலை 9 மணியிலிருந்து இரவு 9 மணி வரை மட்டும்
தொலைபேசி 222 6549, 077 3060110


# வேல் முருகா மால் மருகா

இராகம் - கமாஸ் தாளம்;ஆதி



பல்லவி

மாமயில் ஏறிவா - வா

அனுபல்லவி

வேல் முருகா மால் மருகா (மாமயி...)

சரணம்

கோமானே குழந்தை வேலா
சீமானே திருவடி தஞ்சம்
காமந்த காரம் அகலவும்
நாமெந்த நேரமும் புகழவும் (மாமயி...)

ஏகாந்த சித்தம் பெறவும்
யோகாந்த மார்க்கம் உறவும்
தேகாந்த காலந் தன்னில்
நீபோந்து காத்திடல் வேண்டும். (மாமயி...)

- யோகர்சுவாமிகள்.

# வெரித்தாஸ் வானொலியின் யாழ்.நேயர் மன்றம் ஆரம்பம்

கொழும்புத்துறை,செப்.6

வெரித்தாஸ் வானொலியின் யாழ். நேயர் மன்றம் அண்மையில் யாழ். நகர் பாதுகாவலன் பணிமனையில் நடைபெற்ற கூட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

வெரித்தாஸ் வானொலியின் யாழ். மாவட்ட இணைப்பாளரான அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் தலைமையில் அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது.

தலைவராக த.தனதீசன் (கொக்குவில்), உபதலைவராக க.மயூரதன் (அளவெட்டி), செயலாளராக கே.சயந்தி (உரும்பிராய்), பொருளாராக என்.ஜேசுதாஸ் (கொழும்புத்துறை) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ஐ-30)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று நடப்பவை

யாழ்ப்பாணம்,செப்.6

நல்லூர்க்கந்தன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவையொட்டி இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வுகளில் இன்று திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி ஆசிரியர் தவதாசனின் பக்திமாலை இடம்பெறவுள்ளது. (ஐ-6)

▲ ▲ ▲

யாழ்ப்பாணம்,செப்.6

நல்லூர்க்கந்தன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லூர் இளம்கலைஞர் மன்றத்தினர் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு நடத்திவரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று திங்கட்கிழமை பண்ணிசை கச்சேரி இடம்பெற உள்ளது.

இதில் சுகன்ஜா சிவானந்தனின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும். வயலின் எ.ஜெயராமன், மிருதங்கம் கே.கஜன், முகர்சிங் கே.நந்தகுமார் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ஐ-6)

# நல்லூர்க்கந்தன்

## பெருந்திருவிழாக் காலச் சிறப்பிதழ்

(17ஆம் திருவிழா)



## நல்லைவாழ் நற்றமிழ்க் காவலன்

நல்லைவாழ் நாதனே!
நற்றமிழ்க் காவலனே!
கொல்லையிலே வந்து
குடிகொண்ட ~ செல்லினத்தை
எல்லைக்கு அப்பால்
ஏவித் துரத்தியெம்
அல்லல் அகற்றி யருள்

-அங்குசன்.

## கார்த்திகையின் நாதனையே கண்டு தொழுவோம்!

கார்த்திகையின் நாதனையே கண்டு தொழுவோம்
மாவிளக்குத் தொண்டுசெய்து மனம் குளிர்வோம்
நேர்த்திக்கடன் செய்யவெனப் பக்தர்கூடுவர்
வீதிதனில் அடுக்கடுக்காய் தொழுதுஉருள்வர்
பாத்திருக்கப் பெண்கள் எல்லாம் அடியழிக்கும்
தொண்டுசெய்து வணங்கிநின்று அகம்மகிழ்வர்
சேர்ந்திருந்து கலைஞர் எல்லாம் கீதம் இசைக்க
காதினிக்கக் கேட்டுநாமே மனம் மகிழ்வோம் !
கவிஞர் கந்த முருகேச தாசனார்

- ச.சிவப்பிரகாசம்

## புதுத்திருப்புகழ்கள்

நாள்தோறும் நல்லை நாதா பிஷேகம்
ஞானங்கள் அள்ளித் தருமய்யா!
நாயாய் அலைந்து நானென் றிருந்த
நாறல்கள் தீர்த்து விடுமய்யா!
வான்போன்ற உந்தன் வேல்காக்கும்;எங்கள்
வாழ்வென்று பாறி விழுமய்யா?
வாசங்கள் பூசி வா; உன் விழாவை
வர்ணிக்க இல்லை தமிழையா!

ஈராறு கையிலே ரெண்டு கைகள்
போதும் நின் தேவியரை சேர்க்க!
ஈரைந்து கையால் எம்மை அணைக்க
ஏனின்னும் ஐயம்? உனைக்கேட்க ~
நான் நாலரைக்குன்; வாசல் அமர்வேன்
ஞானங்கள் காட்டு கரைசேர!
நாதர்; நல்லூரின் ராசா! எமக்கு
நியாயங்கள் நாட்டு.... துயர் மீள!

- த.ஜெயசீலன்

## நல்லூர் மைந்தனை...

நல்லூர் மைந்தனை வைப்பேன்
என் சிந்தனையில்
அவன் ஈயும் வரந்தனை நான் பெறுவேன்
என் மனந்தனில்
அவன் மேல் கொண்ட வந்தனை நான் கண்டேன்
அடியார் புயந்தனில்
அலங்காரக் கந்தனை உருளும் உடல்களில் கண்டேன்
நல்லூர் மண்தனில்

- தாவடியூர் சுரேன்

## வெற்றி தரவே வருக!

ஆறு படைக்கும் வீடு அமைத்து
அமர்ந்த கரபூ பதியே!
கூறு படுத்திச் சூரரை அழித்துக்
கோழியும் மயிலாய் நின்றாய்
தேறு தவுக்காய் உன்னைத் தேடித்
தேடி அலையும் எவர்க்கும்
வீறு படைக்கும் நல்லூர்க் கந்தா
வெற்றி தரவே வருக!

- முருகனடியான்


## வரவேண்டும் முருகா!

அழகான மயிலில் ஏறி வரவேண்டும் முருகா
எனது மனம் உனை நாடி வரவேண்டும் கந்தா
அழகுக் காட்சி வேலுடன் தரவேண்டும் குமரா
அன்பர்கள் மகிழ்ந்து தொழவேண்டும் கந்தையா

பாடி அழைக்கும் போது ஓடி வரவேண்டும் வேலா
உள்ளத்தில் குடியிருந்தே அருள வேண்டும் சண்முகா
ஆறு முகங்களும் புன்னகை பூக்க வேண்டும் ஆறுமுகா
அழியாத பேரின்பம் பெறவேண்டும் குமரையா!

- கிருஷ்ணசாமி சுவர்ணா

## சபிண்டீகரண அழைப்பு



07.08.2004 சனிக்கிழமை அதிகாலை
சிவபதமெய்திய
எங்கள் குடும்பத் தெய்வம்
அமரர்

### தம்பு லோகநாதன்

(கண்ணன்)

வையகம் 09.10.1945 வைகுண்டம் 07.08.2004

எமது அன்புத் தெய்வத்தின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (06.09.2004) திங்கட்கிழமை காலை 10.00 மணியள வில் எமது இல்லத்தில் நடைபெறுகின்றன. இந்நிகழ்வில் கலந்துகொள்வதோடு, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் பகல் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தேவாலய வீதி,*
*சங்கானை.* (35819) (24-11) - குடும்பத்தினர்.

## ஈராண்டு நினைவலைகள்

மண்ணில் 15 - 10 - 1942



விண்ணில் 06 - 09 - 2002

### திருமதி நீற்றா ஞானானந்தராஜா

*அன்புத் தெய்வமே! எம் அம்மாவே!*
*நீ மறைந்து ஆண்டுகள் இரண்டு ஆனதோ? இன்றும்*
*ஆறவில்லையே எம் துயரம் – என்றும்*
*உன் நினைவுடனே வாழ்கின்றோம்.*

தங்களை நினைவு கூரும்:
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும்
உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

ராசன்,
*மல்லாவி.* (சி-37474) (24-11)

## பவுஸர் மூலம் குடிதண்ணீர் விநியோகம்

வட்டுக்கோட்டை,செப்.6

வலி.மேற்குப் பகுதியிலுள்ள மீள்குடியேற றக் கிராமங்களில் பவுஸர் மூலம் தினமும் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

அண்மைக்காலங்களில் மக்கள் மீளக்குடி யமர்ந்த கல்விளான், வறுத்தோலை, பாண்டு வெட்டை ஆகிய கிராம மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் பல சிரமங்களை எதிர்நோக்கி வந் தனர்.

இவர்களின் இக்குறையினை நிவர்த்தி செய்யும் பொருட்டு வலி. மேற்குப் பிரதேச செயலரின் முயற்சியால் பவுஸர் பெறப்பட்டு பிர தேச சபையிடம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த பவுஸர் மூலம் வலி. மேற்குப் பிர தேச சபையால் கடந்த முதலாம் திகதி தொடக் கம் குடிதண்ணீர் விநியோகிக்கும் பணி ஆரம் பிக்கப்பட்டுள்ளது. (ஐ-204-161)

## உணவு முத்திரை மீளாய்வு

நவாலி,செப்.6

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நிவாரணம் பெறுபவர்களின் உணவு முத்திரை கள் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவி லும் தற்போது மீளாய்வுசெய்யப்படுகின்றன.

இதேவேளை, ஆயிரம் ரூபாவுக்கு மேற் பட்ட வருமானம் பெறும் குடும்பங்களின் உணவு முத்திரைகள் ரத்துச்செய்யப்படவுள்ளன.(ஐ-100)

## பிரிவுபசார விழா

தென்மராட்சி,செப்.6

தென்மராட்சிக் கல்வி வலய அலுவலகத்தில கடமையாற்றி இளைப்பாறி இடமாற்றல் பெற் றுச் சென்ற எழுதுநர்களுக்கான பிரிவுபசார விழா கல்வி வலய நலன்புரிக்கழகத்தினரால் நடத்தப்படவுள்ளது.

செப்ரெம்பர் ஒன்பதாம் திகதி முற்பகல் 11 மணிக்கு கழகத் தலைவர் வ.செல்வராசா தலைமையில் வலய அலுவலக மண்டபத்தில் விழா நடைபெறும்.

இளைப்பாறிச் சென்ற சி.கந்தராசா, இட மாற்றலாகிச் சென்ற செ.சிவராசா, க.சந்திர சேகரம்பிள்ளை, திருமதி ஈ.தங்கராசா, செல்வி வி.க.சிவக்கொழுந்து, திருமதி சி.வித்தியானந் தன் ஆகியோருக்கே பிரிவுபசார விழா நடத் தப்படவுள்ளது. (ஐ-117)

## தேவை

- தொலைபேசி இயக்குநர்
- கணனி இயக்குநர்
- இலத்திரனியல் உதிரிப்பாக விற்பனையாளர்

உடன் தொடர்புகொள்ளவும்:
**பிரகாஷ் எலக்ரோனிக்ஸ்**
பஸ் நிலையம், பருத்தித்துறை.
(24-11) (36123)

## குருக்கள் தேவை

சாவகச்சேரி துர்க்காதேவி
தேவஸ்தானத்திற்கு நித்திய பூசைக்குக்
குருக்கள் தேவை.
மாதம் 15ஆயிரம் சம்பளம் வழங்கப்படும்.
நேரில் வரவும்.

(36131) (24-11) - தர்மகர்த்தா.



## பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

தாரண வருஷ ஆவணி மாத திவ்விய

### மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2004

**தேர்த்திருவிழா:**
ஆவணி 21ஆம் நாள் 06.09.2004 திங்கட்கிழமை பகல் 10.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை, முற்பகல் 11.30 மணிக்கு தேரில் எழுந்தருளல், பகல் 1.00 மணிக்கு உறியடி உற்சவம். கிருஸ்ன ஜெயந்தி இரவு 12.00 மணிக்கு ஸ்நபனாபிஷேகம் பூஜை. உற்சவம், தாலாட்டு பஜனை- நிகழும்.

**தீர்த்தத் திருவிழா:**
ஆவணி 22ஆம் நாள் (07.09.2004) செவ்வாய்க்கிழமை காலை 9.00மணிக்கு திருவடி நிலைக்கு எழுந்தருளல், நண்பகல் 12.00 மணிக்கு தீர்த்தோற்சவம். மாலை 7.00 மணிக்குக் கொடியிறக்கம்.

**திருக்கல்யாணம்**
**மஹாசங்காபிசேகம்** : ஆவணி மாதம் 23ஆம் நாள் 08.09.2004 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு 1008 சங்காபிஷேகம், உற்சவம் மாலை 6.00 மணிக்கு திருக்கல்யாணம், உற்சவம் பூங்காவனம்.

**ஆஞ்சநேயர் பொங்கல்**
**சங்காபிசேக உற்சவம் :**
*ஆவணி 27ஆம் நாள் 12.09.2004 ஞாயிற்றுக்கிழமை 108 சங்காபிஷேகம்*

தேவஸ்தான மஹோற்சவ பிரதமகுரு:
*வேதாகம கிரியாபூஷணம், கிரியாபாநு, கிரியாகலாமணி*
**ஸ்ரீவிஸ்ணு ஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக்குருக்கள்**
**தினமும் மாலை 7.00 மணிக்குத் தெய்வீக சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.**

குறிப்பு: தினமும் காலை 9.00 மணிக்கும் மாலை 6.00 மணிக்கும் உற்சவம் ஆரம்பமாகும்.
அடியவர்கள் உற்சவ காலங்களில் பூஜைத் திரவியங்களை உபகரித்து இஷ்ட சித்திகளைப் பெற்று உய்வீர்களாக.
அனைவரும் வருக. நாராயணன் அருள் பெறுக.
கோவிந்த நாம சங்கீர்த்தனம், கோவிந்தா! கோவிந்தா!
சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரும் சேவையில் ஈடுபடுவார்கள்.

*பொன்னாலை,*
*சுழிபுரம்.* (36108) (43-24-11) - தேவஸ்தான பரிபாலன சபை.

# தமிழீழ காவல்துறை

## பதவி வெற்றிடங்கள்

| | | | |
|---|---|---|---|
| 01) | உப பரிசோதகர் | :- | க.பொ.த. (உயர்தரம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும். வயதெல்லை 18-30 வரை ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| 02) | காவல்துறை உறுப்பினர் | :- | க.பொ.த. (சாதாரணம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும். வயதெல்லை 18-30 வரை ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| 03) | எழுதுவினைஞர் | :- | க.பொ.த. (சாதாரணம்) சித்தியுடன் 05 பாடங்களில் தமிழ்மொழி உட்பட திறமைச் சித்தியடைந்திருத்தல் வேண்டும். **அல்லது** க.பொ.த. (உயர்தரம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| 04) | தட்டெழுத்து / சுருக்கெழுத்தாளர் | :- | க.பொ.த. (சாதாரணம்) சித்தியுடன் தட்டெழுத்து / சுருக்கெழுத்தில் தகைமையுடன் நிமிடத்திற்கு 15 சொல்லுக்குக் குறையாமல் தட்டெழுத்துச் செய்தல் வேண்டும். |
| 05) | அலுவலக உதவியாளர் | :- | க.பொ.த. (சாதாரணம்) தமிழ்மொழி உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். வயதெல்லை 18-30 வரை. ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| 06) | கணனி இயக்குநர் | :- | க.பொ.த. (சாதாரணம்) சித்தியுடன் கணனி கற்கை நெறிப் பிரிவுகளில் அதிகூடிய பிரிவுகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 07) | வரவேற்பாளர் | :- | க.பொ.த. (சாதாரண தரம்) சித்தியுடன் நல்ல பேச்சு வன்மை இருத்தல் வேண்டும். வயதெல்லை 18 - 25 வரை. ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| 08) | மொழி பெயர்ப்பாளர் | :- | ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழி பெயர்த்தலில் நல்ல அனுபவம் இருத்தல் வேண்டும். ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| 09) | சாரதி | :- | இலகு / கனரக வாகனங்கள் செலுத்துவதற்குரிய அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும். சாரத்தியத்தில் நல்ல அனுபவமுள்ளவராக இருத்தல் வேண்டும். வயதெல்லை 20-30 வரை |
| 10) | மெக்கானிக் | :- | மோட்டார் சைக்கிள் / டீசன் இயந்திரங்கள் திருத்துதலில் நல்ல அனுபவம் இருத்தல் வேண்டும். |
| 11) | களஞ்சியக் காப்பாளர் | :- | க.பொ.த. (சாதாரண தரம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 12) | நிர்வாக அலுவலகர் | :- | க.பொ.த. (உயர்தரம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும். 05 வருட அனுபவமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். |

மேற்படி பதவிகளில் இணைய விரும்பும் விண்ணப்பதாரர்கள் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ காவல்துறை நடுவப் பணியகத்துக்கு எதிர்வரும் 2004.09.08ஆம் திகதி முதல் 2004.09.30ஆம் திகதி வரை காலை 08.00 மணிதொடக்கம் மாலை 05.00 மணிவரை நேரில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

பொறுப்பாளர்,
ஆளணிப் பிரிவு,
காவல்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-37476) (24-16)

# தீவிரமான தொற்று நோய் சின்னமுத்து...!

சின்னமுத்து நோயானது தீவிரமாகத் தொற்றக்கூடிய குறுகிய காலத்தில் ஏற்படும் ஒரு வைரஸ் நோயாகும். ஏழாம் நூற்றாண்டில் ரேசஸ என்பவர் இந்நோயை விபரித்துள்ளார். மற்றும் பத்தாம் நூற்றாண்டில் அரேபிய வைத்திய நிபுணர் ஒருவர் அம்மையிலும் பார்க்க கொடியது சின்னமுத்து நோய் எனக் கூறியுள்ளார். பிரான்சின் 15ஆவது அரசன் லூயிஸ் என்பவர் தான் தாய், தந்தை மற்றும் சகோதரர்களை இழந்து தனியாளாய் நின்றது சின்னமுத்து நோயினால். இன்னும் உலகில் ஒவ்வொரு வருடமும் சின்னமுத்து நோயினால் ஏற்படும் பாதிப்புக் காரணமாக இரண்டு மில்லியன் சிறுவர்களை இழக்கின்றோம் என தொற்று நோயியல பிரிவு சுகாதாரக் கணிப்பு மையங்களின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் கூட, தடுப்பு மருந்து வழங்கும் காலத்துக்கு முன்னதான காலப்பகுதியில் சின்னமுத்து நோய் பல சிறுவர்களைத் தாக்கி வந்த பொதுவான நோயாகக் காணப்பட்டது. 1980 ஆம் ஆண்டில் 13 ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறுவர்கள் சின்னமுத்து நோயின் சிக்கல் காரணமாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

**சின்னமுத்து - ருபெல்லா தடைமருந்து வழங்கலைப் பூரணப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தை தமிழீழ சுகாதார சேவையினர் இம்மாதம் 11ஆம், 12ஆம் திகதிகளில் மேற்கொள்கின்றார்கள். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

ஒரு பிள்ளையை சின்னமுத்து நோய் பீடித்தால் அந்நோயிலிருந்து விடுபட குறைந்தது 7 நாள்கள் எடுக்கும். சிறு பிள்ளையாக இருக்குமானால் அதனை தாய் அல்லது தந்தை இக்காலப்பகுதியில் கவனமாகப் பராமரிக்கவேண்டும். அநேகமாக எமது பிரதேச பெற்றோர்கள் இருவரும் நாளாந்தம் உழைத்துப் பிழைப்பவர்கள். ஆதலால் இவ்வாறான நிலைமை அவர்களது குடும்ப வருமானத்தில் கணிசமான அளவிற்குப் பாதிப்பை ஏற்படுத்தும். சிறுவர்களுக்கு நிமோனியா, வயிற்றோட்டம், மூளை அழற்சி போன்ற தொற்றுநோய் ஏற்பட்டு அதற்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவது அவர்களது வருமானத்திற்கு இன்னும் சுமையைக் கூட்டும். மேலும் வளர்ந்த சிறுவர்கள் பரீட்சைக் காலத்தில் ஏற்பட்ட இந்நோய் காரணமாக பரீட்சைக்குத் தோற்றமுடியாமல் இருந்ததாகவும் அறியப்பட்டுள்ளது.

சின்னமுத்து நோயினால் ஏற்படும் நோய் நிலைகளையும், மரணங்களையும் குறைக்கும் நோக்கத்துடன், 1984ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் விரிவுபடுத்தப்பட்ட நோய்த் தடைமருந்து வழங்கும் திட்டத்தின் சின்னமுத்து தடை மருந்து சேர்க்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து சின்னமுத்து நோய் நிலைமைகளும், மரணங்களும் குறைந்துகொண்டு வந்தன. கடந்த பத்தாண்டு காலப்பகுதியில் ஒப்பீட்டளவில் சின்னமுத்துநோய் மிகக் குறைந்தளவிலேயே காணப்பட்டது. 1999ஆம் ஆண்டு செப்ரெம்பர் தொடக்கம் 2000 ஆம் ஆண்டு ஜூன் வரையான காலப பகுதியில் இதன் எண்ணிக்கை வருடாவருடங்களாகச் சேர்ந்து பாரிய எண்ணிக்கையாகவுள்ளது. இதனால், கூடுதலான பெருக்கம் ஏற்பட்டது.

இலங்கையில் வழக்கத்திலுள்ளபடி தாயிலிருந்து பெறப்பட்ட பிறபொருள் எதிரி இருக்கும் காலத்திலேயே அதாவது பிறந்த 9ஆவது மாதத்திலேயே முதலாவது சின்னமுத்துநோய் தடைமருந்து வழங்குவதால் 90 சதவீதம் பாதுகாப்பு மட்டும் கிடைப்பதே, 1999 தொடக்கம் 2000ஆம் ஆண்டளவில் ஏற்பட்ட கட்டுக்கடங்காத நோய்ப் பெருக்கத்துக்கு காரணமாய் அமைகிறது. எனவே, தடைமருந்து பெற்றவர்களில் 10 சதவீதத்தினர் போதியளவில் நோய்த்தடையை, சக்தியை விருத்திசெய்யாத நிலையினாலேயே நோய்க்கு ஆளாகும்




ஆபத்து நிலையை அடைகின்றார்கள்.

நோய்த்தடைமருந்து பெற்றவர்களில் சிலர் நோய் எதிர்ப்புத் தன்மையை காலக்கிரமத்தில் இழக்கின்றார்கள். இதனுடன் நோய்த் தடை மருந்து வழங்கிய அளவு 100 சதவீதமாக இல்லாவிடின் சில குழந்தைகள் இம்மருந்தைப் பெற்றே இருக்கமாட்டார்கள். நோய் ஏற்படக்கூடிய ஆபத்திலுள்ளவர்களில் இக்குழந்தைகளும் சேர்ந்துகொள்வர். இவ்வாறாக நோய்த் தொற்றலுக்கு ஆளாகக்கூடியவர்களின் தொகை வருடாவருடமாக சேர்ந்து நோய் கட்டுக்கடங்காத பெருக்கம் ஏற்படும். இறுதியாக ஏற்பட்ட நோய் பெருக்கத்தின்போது 48 சதவீதமானவர்கள் 10 முதல் 28 வயதுக்குட்பட்டவர்கள்.

முதலாம்தர நோய் எதிர்ப்பு சக்தி உருவாக்கலில் தவறுகளின் காரணமாக, ஏற்படும் நோய்களாகும். எண்ணிக்கையை குறைக்கும் நோக்கத்துடன் 2001ஆம் ஆண்டு சின்னமுத்து ருபெல்லா (MR) நோய்த் தடை மருந்தும் 2001 ஏப்ரல், மே மாதத்திலிருந்தும் வழமையான அட்டவணையுடன் சேர்க்கப்பட்டது. அதன் பின்னர் இருந்து 1998 ஏப்ரல் மாதத்தின் பின் பிறந்த எல்லாக் குழந்தைகளும் மூன்று வயதை அடையும்போது சின்னமுத்து ருபெல்லா (MR) நோய்த் தடைமருந்து ஒருதடவை வழங்கப்பட்டு வருகிறது. 1999 இற்கு முன் பிறந்த எவருக்கும் இப்படியான சின்னமுத்து தடை மருந்து பெறக்கூடிய இரண்டாவது சந்தர்ப்பம் கிடைக்கப்பெறவில்லை. 1984ஆம் ஆண்டிற்கு முன்பே மற்றும் 1984ஆம் ஆண்டிற்கும் 1991ஆம் ஆண்டிற்கும் இடையில் பிறந்த எவருக்கும் சின்னமுத்து தடைமருந்து பெறக்கூடிய வாய்ப்பு ஒரு முறை கூடக் கிடைக்கவில்லை. கட்டுப்பாட்டை மீறிய நோய்ப்பெருக்கம் ஏற்படுவதை, நோய் பரவிக் கொண்டிருப்பதைத் தடுக்க நோய் தொற்றக்கூடியவர்கள் தொகையை கூடியவரை குறைவான எண்ணிக்கையாக்க வேண்டும். இந்த முதன்மையான நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே 2003ஆம் ஆண்டு 10 முதல் 14 வயது வரையுள்ள எல்லாச் சிறுவர்களையும் இலக்காகக் கொண்டு சின்னமுத்துநோய்த் தடுப்பு மருந்தேற்றலை பூரணப்படுத்தும் திட்டத்தில் முதலாம்

**தகவல்:**
**தமிழீழ சுகாதார சேவையினர்**

படிநிலைசெயற்படும். 2004ஆம் ஆண்டு 16 முதல 20 வயது வரையுள்ள பிள்ளைகள் (ஆண்/பெண) இலக்காகக் கொண்டு நடத்தப்படவுள்ளது.

**சின்னமுத்து - ருபெல்லா நோய்த் தடை மருந்தைப் பூரணப்படுத்தும் நிகழ்ச்சியின் குறிப்பிட்ட நோக்கங்கள்**

01. ஒருமுறைதானும் நோய்த்தடை மருந்தைப் பெறாத 16 தொடக்கம் 20 வயதுக்குட்பட்டவர்களுக்கு சின்னமுத்து மற்றும் ருபெல்லா நோய்த்தடை மருந்தைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பைக் கொடுத்தல்.

02. ஏற்கனவே சின்னமுத்து மற்றும் ருபெல்லா நோய்த்தடை மருந்தை ஒருமுறை மட்டும் பெற்றுள்ளோருக்கும், இரண்டாவது சந்தர்ப்பத்தைக் கொடுத்தல்.

03. நோய்க்கு ஆளாகக்கூடியவர்களுக்கு நோய்த்தடைமருந்து வழங்குவதன்மூலம் சின்னமுத்து வைரஸ் பரவுவதலையும் நோயின் கட்டுக்கு மீறிய பெருக்கத்தையும் தடுப்பது.

04. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிறப்பிலிருந்து ஏற்படும் ருபெல்லா நோய்த்தாக்கத்தை குறைப்பது. ★

# எமது சருமம்.... ②

***எமது பிரதேசத்தில் பொதுவாக ஏற்படும் தோல் நோய்கள் பற்றித் தெளிவான ஓர் அடிப்படை அறிவை ஓரளவேனும் வழங்கக் கூடியவகையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் எஸ்.கஜேந்திரன் எமது சருமம் என்னும் தலைப்பில் வரையும் கட்டுரையின் இரண்டாவது பகுதி இது.***

**முகப்பருவிற்கான சிகிச்சை**

முகப்பருவின் சிகிச்சை நோய்த் தாக்கத்தின் அளவு கவனத்தில் கொள்ளப்படும். முகப்பரு அதிகமாகக் காணப்படுவதுடன், அவை நுண்ணங்கித் தொற்றுக்கு உள்ளாகியிருப்பின் உடனடி வைத்திய சிகிச்சை அவசியம். இங்கு நுண்ணுயிர்க் கொல்லி (Antibiotics) மருந்துகளை வைத்தியரின் சிபார்சின்படி சரியான அளவின் பிரகாரம் குறிப்பிட்ட காலத்திற்கு உட்கொள்ளவேண்டும். வைத்திய சிகிச்சை பெறத் தாமதித்தால் தொற்றுக்குள்ளான முகப்பருக்கள் வீக்கமடைந்து சிவந்து பெரிய கொப்புளங்களை உருவாக்கும். அத்துடன், காய்ச்சலும் உருவாகும். மேலும், தாமதித்து சிகிச்சை பெற்றால் காய்ச்சல் குணமடையும். எனினும், இக் கொப்புளங்கள் முகத்தில் மாறாத வடுக்களை உருவாக்கிவிடலாம்.

நோய்த்தாக்கத்தின் அளவு குறைவாகவும் முகப்பருக்கள் எவையும் நுண்ணங்கித் தொற்றுதலுக்கு உள்ளாகாமலும் இருப்பின் சாதாரண முகப்பராமரிப்பு முறைகள் போதுமானவையாகும். பின்வரும் முறைகளைக் கையாள்வதன் மூலம் ஒருவர் முகப்பருவால் வடுக்கல் ஏற்படுவதனைத் தடுக்கலாம்.

காலை, மாலை இரு தடவைகள் இளஞ்சூடான நீரால் முகத்தை சுத்தம் செய்தல் வேணடும். இதனால் நெய்ச்சுரப்பு வெளியேறும் பாதைகள் திறக்கப்படும். எனவே முகப்பருவின் தாக்கம் குறையும்.

முகத்தைச் சுத்தம் செய்வதற்கு சவர்க்காரங்களைப் பயன்படுத்தலாம். இங்கு முகப்பருவிறகு எதிராகச் சில சவர்க்காரங்கள் உள்ளன. எனினும் அவற்றின் விலை சாதாரண சவர்க்காரங்களை விட சற்று அதிகமாகும். அத்துடன் சாதாரண சவர்க்காரங்களால் முகத்தைச் சுத்தப்படுத்தலே போதுமானதாகும் எனக் கருதப்படுகின்றது.


கொதிநீர் ஆவி கிழமைக்கு ஒரு தடவை முகத்துக்குப் பிடிப்பது நல்லது.

முகப்பருவை கைகளால் கிள்ளுதல் கூடாது. இது நுண்ணங்கித் தொற்றலைச் சாதகமாக்கி முகத்தில் வடுக்களை உருவாக்க ஏதுவாக அமையும்.

**சிரங்கு** (Scabies)

உலகம் முழுவதும் சுமார் 300 மில்லியன் மக்கள் தொகையினர் வருடந்தோறும் சிரங்கு நோயினால் பாதிக்கப்படுகின்றார்கள். நமது பிரதேசத்திலும் இந்நோயானது சிறுவர்களை அதிகளவில் பாதிக்கின்ற ஒரு தோல் நோயாக அமைந்திருக்கின்றது. அதுமட்டும் அல்லாது வளர்ந்தோரையும் இந்நோய் தாக்கலாம். விடுதிகள், சிறைச்சாலைகள் போன்றன இந்நோய் பரவுவதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்கின்றது. சிறுவர்களைப் பாதிக்கும் சிரங்கு நோய் அதன் தொடர்ச்சியின் ஒரு விளைவாகத் தோலில் பற்றீரியா தொற்றுக்களை ஏற்படுத்தலாம். இதன் இறுதி விளைவு சிறுநீரக பாதிப்பில் முடியும். எனவே, சிரங்கு நோய்பற்றியும் அனைவரும் தெளிவாக அறிந்திருப்பதன் மூலம் ஆரம்பத்திலேயே இந்நோயைக் குணமாக்கி பாரிய பின் விளைவுகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும்

**நோயாக்கி/நோய்க்காரணி**




சிரங்கு நோயை ஏற்படுத்தும் Sarcoptes Scabiei எனும் மைற்சின் நுணுக்குக் காட்டியினூடான தோற்றத்தைப் படத்தில் காணகிறீர்கள்.

சிரங்கானது **sarcoptes scabiei** எனப்படும் **Class Araihnida** இனைச்சார்ந்த மைற்ஸ் வகைப் பூச்சியினால் ஏற்படுத்தப்படுகின்றது. இந்த அங்கி கண்ணுக்குத் தென்படாது சிறிதாகும். இவற்றில் ஆண், பெண் என வேறுபாடு உண்டு. நுணுக்குகாட்டியின் ஊடாக இதனை அவதானிக்கமுடியும். இதன் வாழ்க்கை வட்டம் முட்டை, குடம்பி **(lorva)** அணங்குரு, நிறையுடலி ஆகிய பருவங்களைக் கொண்டது. முட்டையில் இருந்து நிறையுடலி உருவாவதற்கு சுமார் 8-15 நாள்கள் செல்லலாம் நிறையுடலி பெண் சுமார் 3 தொடக்கம் 4 வாரங்கள் வரை வாழக்கூடியது. இதன்போது சுமார் 40-50 முட்டைகள் இருக்கின்றது.

**நோயாக்கி நோயினை ஏற்படுத்தும் முறை (Pathogenisis)**

சிரங்கு நோய் உடைய ஒருவரின் கொப்புளங்களில் இருந்து வெளிப்படும் நோயாக்கி நேரடித் தொடுகை மூலம் இன்னொருவரை சென்றடைகின்றது. அவரின் மேற்றோலினை துளைத்துக் கால்வாயினை உருவாக்கிய வண்ணம் இந்நோயாக்கி நாளொன்றிக்கு சுமார் 2-3 மில்லி மீற்றர் தூரம் தோலில் நகர்கின்றது. தோலின் சில இடங்களையே இது விசேடமாக சென்றடைகின்றது. இவ்வாறன சில இடங்களாக விரல் இடுக்குகள், மணிக்கட்டு மடிப்புகள், கமக்கட்டு, முழங்கை, மார்பகங்கள், தொடைகள், பாலுறுப்பு என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

நோயாக்கி கால்வாய் ஊடாகச் செல்லும் போது கொப்புளங்களை உருவாக்கின்றது. இவ்வாறு கொப்பளங்கள் உருவாகக்காரணம் நோயாக்கியின் கழிவுகளும், நோயாக்கியின் சுரப்புகளும் தோலிற்கு எரிச்சல் ஏற்படுவதால் ஏற்படும் தாக்கங்களினால் ஆகும். பெண் நிறையுடலி கால்வாயில் முட்டைகளை இடுகின்றது. அவற்றில் இருந்து சுமார் 3 தினங்களில் குடம்பி



சிரங்கு நோயின் தாக்கம் அதிகளவு அவதானிக்கப்படும் உடற்பகுதிகள் படத்தில் நிழற்றப்பட்ட பிரதேசங்களாகக் காட்டப்பட்டுள்ளன.

வெளிப்படுகின்றது. இது புதிய கால்வாயை உருவாக்கி தோலினூடாக துளைத்துக் கொண்டு செல்கின்றது. பின்னர் அணங்கு நிலையின் ஊடாக நிறையுடலியாக மாறுகின்றது.

**நோய் தொற்றும் வழிமுறைகள்**

பிரதானமாக நீண்டநேர தொடுகை மூலமே இந்நோய் தொற்றுகின்றது. அத்துடன், நோய் உடைய ஒருவருடனான பாலியல் தொடர்புகள மூலமும் இந்நோய் தொற்றலாம்.

நோய் உடைய ஒருவரின் படுக்கைகளைப் பாவித்தல், அவரின் உடைகளைப் பயன்படுத்தல், பொதுவாகத் துவாய் போன்றவற்றைப் பயன்படுத தல். போன்றவற்றாலும் அவருடன் நீண்டநேர தொடுகை ஏற்படக்கூடிய சந்தர்ப்பத்தை வழங்குதல், அதாவது சிறுவர்கள் என்றால் ஒன்றாக விளையாடுதல் போன்றவற்றாலும் இந்நோய்த் தொற்று ஏற்படவாய்ப்பு உண்டு. சிறைச்சாலைகள், முகாம்கள், விடுதிகள் போன்றவற்றில் இடநெருக்கடி காரணமாக நோய் தொற்றும் சந்தர்ப்பங்கள் அதிகமாகும்.

**நோய் அறிகுறி**

முன்னர் குறிப்பிட்ட நோயாக்கி அதிகளவு தெரிவு செய்யும் இடங்களில் (முழங்கை, தொடை) தொடர்ச்சியான கடி பெரும்பாலும் இரவு வேளைகளில் ஏற்படும். கடிக்கும் இடங்களை நோய் உடையவர் நகங்களால் உராய்வதால் தோலில் காயங்கள ஏற்படும். அவற்றில் பற்றீரியா தொறறு ஏற்படும் சாத்தியமும் அதிகமாகும்.

உடலில் விரல் இடுக்கு போன்ற நோயாககி அதிகளவு உள்ள இடங்களில், கொப்புளங்களை அவதானிக்கலாம்.

**நோய்த்தடுப்பு**

நோய்த் தொற்று ஏற்பட்டவர் வைத்தியரின் ஆலோசனைப்படி சிபாரிசு செய்யப்பட்ட மருந்தினைத் தகுந்த முறைப்படி பயன்படுத்தல் இதனால், நோய் பரவுவது தடுக்கப்படும். இங்கு சிரங்கு நோய் உடைய சிறுவர்கள் நோய் முற்றாக மாறும்வரை ஏனைய சிறுவர்களுடன் நெருக்கமான தொடுகையைத் தவிர்ப்பதன் மூலம் (விளையாடுதல்) நோய் ஏனையவர்களுக்கு பரவுதல் தடுககலாம். சிரங்குத்தொற்று ஒருவருக்கு ஏற்படின் அவரது குடும்ப அங்கத்தவர்கள் விழிப்

**சண்முகசுந்தரம் கஜேந்திரன்**
4ஆம் வருட மாணவன், மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்.

புணர்வுடன் தொழிற்பட வேண்டும் இங்கு அவர்கள் தற்சுத்தம் பேணுவது அவசியம் அதாவது தொடர்சியாகப் பயன்படுத்தும் ஆடைகள், படுக்கை என்பவற்றை ஏனையவர்கள் பயன்படுத்துவதைத் தவிர்த்தல் நல்லது. நோயாளியின் ஆடைகளைத் தகுந்த முறையில் தொற்றுநீக்கவேண்டும். நோயாளி பூரணகுணம் அடையும் வரையில், அவருடனான நெருக்கமான தொடர்புகளைத் தவிர்ப்பது நல்லது. விடுதிகள், சிறைச்சாலைகள் போன்றவற்றில் ஒருவருக்கு இந்த நோய் ஏற்பட்டால், அவ் விடுதிக்குப் பொறுப்பானவர் உடனடியாக அவருக்குத் தகுந்த சிகிச்சை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தல்வேண்டும். இதன் மூலம் ஏனையவர்களுக்கும் பரவுவது தவிர்க்கப்படும்.

(வளரும்)

## வடமாகாண ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் சமாச ஊழியர் நலன்புரிச் சங்க அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு இல. - 3365
இரண்டாம் பரிசு இல. - 3305
மூன்றாம் பரிசு இல. - 1794
ஆறுதல் பரிசுகள் :
இல. 1899, 643, 193, 550, 3472, 1075, 1103, 2620, 1217, 3116.
பரிசில்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.
முகவரி: இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

வ.சிவகுமார் தலைவர். தொலைபேசி: 222 5072 (36081)(29-14-16) க.சண்முகம் செயலாளர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 17 - 04 - 1907



மறைவு 07 - 08 - 2004

### திருமதி தில்லைவனம் வீரவாகு

அன்போடும் பண்போடும் எம்மையெல்லாம் வளர்த்த அம்மா!
இன்றகிலத்தை விட்டகன்று முப்பத்தொரு நாள்களானாலும்
எங்கள் மனங்களிலென்றும் ஒளிரும் ஒளிச்சுடரே!
உங்கள் பொன்னடிக ளென்று மங்கா தெங்கள் மனதிலம்மா!

இன்று (06.09.2004) திங்கட்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்வதுடன், மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

வீ.செல்வராசா (மகன்), இரத்தினமணி-மகேந்திரன் (மகள்) குடும்பத்தினர்.
தாவடி தெற்கு, கொக்குவில். (36097)(39-16-14-26)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
### பார்வதி சீனிவாசக ஸ்தபதி

தோற்றம் 08.12.1922
மறைவு 20.08.2003
திதி: ஜன்மாயஸ்டமி (06.09.2004)

மறைந்த உங்கள் திருமுகம்
மறையாது எங்கள் உள்ளங்களில்
ஓராண்டு கடந்து விட்ட போதும்
ஓயாது உங்கள் நினைவலைகள.

உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கும்:

90,சிவன் கோயில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். (36069)(39-14-16-26)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 24 - 10 - 1972



உதிர்வு 06 - 09 - 1996

### செல்வன் இரத்தினம் ஜெயன்
(யாழ்.பல்கலைக்கழக மாணவன்)

அன்புடனும் பண்புடனும் ஆதரவாய் பேசியெம்மை
அகமகிழ வைக்கும் எங்கள் அன்புச் செல்வமே!
அமுதூட்டி வளர்த்த அன்னையிடம் நீர்
சென்று விட்டீர் - இங்கு
பல்கலையில் பட்டம் பெற்று
பாரினில் ஓங்குவீர் என
நாம் கனவு கண்டோம் - எம்மை
தேடிவரும் உறவுகளைக்காணும் போதும்
துன்பங்கள் எம்மை அனுகும் போதெல்லாம்
உங்கள் இருவரின் நினைவுடனே
ஊமையாய் அழுகின்றோம்
வருடங்கள் எத்தனையானாலும் - உம்
வதன முகம் எம்மைவிட்டு மறையாது
உள்ளிருந்தொளிரும் நின் நினைவுகள்
எம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும்.

கைதடி தெற்கு, கைதடி (36093)(43-29-14-16) - குடும்பத்தினர்.

## அகதிகள் 30 பேர் தலைமன்னார் வருகை

ஈழத்தமிழ் அகதிகள் 30 பேர் நேற்றுமுன் தினம் கடல் வழியாக மன்னாரை வந்தடைந்துள்ளனர்.

சுமார் 3 மாதகால இடைவெளியின் பின்னர் பாக்குநீரிணை வழியாகப் படகுகளில் இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய இவர்களை அவர்களது சொந்த இடங்களிற்கு அனுப்பி வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிபதி சிவில் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். (ஐ-6)

## MODERN STAR

NO:5, Station Lane, Chavakachcheri பிறிண்டிங்கிற்கு, Page Maker, Photo shop, Corel Draw ஆகியவற்றில் அனுபவமுள்ள பெண்ணொருவர், வீடியோ எடிட்டிங், MS Office தெரிந்த பெண்ணொருவர், வீடியோ & புகைப் படப்பிடிப்பு தெரிந்த ஆண் ஒருவர் உடன் தேவை.

(35827) தொடர்புக்கு: 0777 667209.

## தவறிவிட்டது

யோகேஸ்வரி, கவிதா, அழகரூபி ஆகியோரது தே.அ.அட்டைகள் (516662247X, 775133970V, 826512506V) அடங்கிய பேர்ஸ் சந்நிதியில் (29.08.2004) அன்று தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள்:

செல்வநாயகம் யோகேஸ்வரி,
துரை வீதி, இணுவில் தெற்கு
எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.
T.P.: 0777 593824. (36125)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர்.

சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 222 2459

## இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.6

தமிழ் மாணவர் ஒன்றியத்தின் யாழ். மாவட்டப் பணிமனைத் திறப்புவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நல்லூர் கோயில் வீதியில் நடைபெற வுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸும் சிறப்பு விருந்தினர்களாக யாழ் கல்வி வலயப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி, தமிழ் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் தபஞ்சலிங்கம், தமிழ் மாணவ ஒன்றிய ஆலோசகர் எஸ்.வரதராஜன் ஆகியோரும் கலந்துகொள்வர். (3-204)

★ ★ ★

தென்மராட்சி,செப்6

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள், கிராமிய சமுர்த்தி சிறுகுழுக்களின் தலைவிகளுக்கான எய்ட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று நண்பகல் ஒரு மணிக்குப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்.அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என நிறுவனத் தலைவர் அநல்லதம்பி தெரிவித்தார். (3-117)

## யா/வரணி மகாவித்தியாலயம்
## J/VARANY MAHAVIDYALAYAM

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

க.பொ.த.உயர்தர பரீட்சை 2004 இல் தோற்றி எமது பாடசாலைக்குப் பெருமைதேடித்தந்த மாணவர்களை மனமார வாழ்த்துவதோடு, அவர்களின் கல்விப்பயிர் செழிக்க நல்லாசி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றோம். இவர்களை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகிறோம்.

| | |
|---|---|
| 1.குலசபாநாதன் சபேசன் | - 3A |
| 2.குமாரசாமி முகுந்தன் | - A2B |
| 3.திருச்செல்வம் பிறதீபன் | - A2B |
| 4.சன்முகசுந்தரம் நஷீபா | - 2AC |
| 5.சின்னத்தம்பி வசீகரநாதன் | - 2AC |
| 6.பரமநாதன் புஷ்பரஞ்சினி | - ABC |
| 7.கனகரத்தினம் நிலானி | - ABC |
| 8.சிவானந்தன் சுதாகரன் | - ABC |
| 9.முருகேசு சர்மிளா | - ABC |
| 10.கோபாலபிள்ளை கோகிலபவான் | - ABC |
| 11.குமாரவேலு ரவிவர்ணன் | - ABC |
| 12.கருணானந்தம் குமரேசன் | - ABS |
| 13.பரமு மதிபன் | - ACC |
| 14.காந்தன் பிரியங்கா | - ACC |
| 15. சீவரத்தினம் வினோஜா | - ACC |
| 16. நடராசா திருவாணி | - ACC |
| 17. வல்லிபுரம் ஜீவானந்தம் | - ACC |
| 18.தம்பையா தர்மசீலன் | - ACC |
| 19.நடேசபிள்ளை குகப்பிரியா | - ACC |
| 20.செல்லத்துரை பாமிலா | - ACC |
| 21.ராஜதுரை ஜெயரூபன் | - ACS |
| 22.தியாகராசா திருச்செல்வி | - ACS |
| 23.கனேசலிங்கம் சோபிகா | - 2BC |
| 24.கந்தையா அஜந்தன் | - 2BC |

பாடசாலைச் சமூகம்,
யா/வரணி மகாவித்தியாலயம்.
(சி-37435)(29-14-16)




## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி
### மீனாம்பிகை இராமநாதன்

தோற்றம்: 14.09.1936
மறைவு: 20.08.2003

ஓராண்டுமாயிற்றோ உத்தமியே
உமைப்பிரிந்து
தீராத வேதனையால் தினமுமே
தவிக்கின்றோம்
ஆறாகக் கண்ணீர் பெருகுதே
பெரியம்மாவே!
இன்று உமை நினைந்து அஞ்சலி
செலுத்துகிறோம்!

அன்புடன் பெறாமகள் :
து.ஸ்ரீலவன், து.ஸ்ரீரங்கன்,
துசித்தா சிவசுரதன், து.ஸ்ரீசுடரோன்
(ASIAN COMPUTERS)

கந்தையா வீதி, சாவகச்சேரி.
தொ.பே: 0777 427175



# அளவெட்டி நாகேஸ்வரம்
# ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலய
# தேர்த்திருவிழாச் சிறப்பிதழ்
## (06.09.2004 - திங்கட்கிழமை)




## நலம் பெறுவோமாக!



ஐந்தொழிலில் மிகமுக்கியமானது காத்தல். ஒரு பரம்பொருள் காப்பதற்காக எடுத்த வடிவம் நாராயண மூர்த்தம். அவன் மாயன் எனப் பெயர் பெறுகிறான். மா = ஒடுக்கம், யா = தோற்றம், - எது தோன்றுகிறதோ - அதன் பின், ஒடுங்குகிறது. இந்தச் செயல்களுக்கு இருப்பிடமானவன் மாயன் எனப்படுகிறான். எங்கும் வியாபகனாகியிருப்பதாலே வாசுதேவன் எனப்படுகிறான். சீவகோடிகளின் செயற்பாடுகளுக்குத் தக்கதாக அவன் எடுத்த - எடுக்கும் வடிவங்கள் பல்லாயிரம். பிரசித்தமானவை பத்தவதாரங்கள். ஆவணி அட்டமி ரோகிணியில் எடுத்த அவதாரம் கிருஷ்ணாவதாரம். அத்தினமே கிருஷ்ண ஜெயந்தி எனப்படும். அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணன் கிருஷ்ணஜெயந்தியில் தேரேறிவந்து மக்களுக்குக் காட்சி தருகிறார். மக்களுக்குத் துன்பம் துடைத்து இன்பம் நல்குவதற்கு எம்பெருமான் அவதாரம் செய்கிறார். ஆகையால், மெய்யடியார்களே, மக்கள் சமாதானமாக வாழவும் - செந்தமிழ் செழிக்கவும், வறுமை நீங்கவும், நோய்கள் இன்றி வாழவும், பண்பாடான சமுதாயம் செழிக்கவும் எம்பெருமானைப் பிரார்த்திப்போம். தேரில் இருக்கும் பரம்பொருளிடம் வேண்டிய வரங்களைக் கேளுங்கள். எல்லாம் தருவார். அவர்தந்த கல்வி, செல்வம் முதலியவற்றையே நாம் அனுபவிக்கின்றோம். தந்தவனிடம் - எம்மைப் பெற்றவனிடம் - எம்மைக் காப்பவனிடம் நன்றி செலுத்துதலே எமது வழிபாடாகும். எனவே, யாவரும் தேர்க்காட்சி கண்டு நலம் பெறுவோமாக.

அரிஓம் நாராயணாயநம.

**அருட்கவி சீ.விநாசித்தம்பி M.A.**





## பிரதம குருவின் ஆசிச் செய்தி



அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீநாக வரத நாராயணப் பெருமானின் அற்புதங்கள் பற்பல. வந்து வழிபாடு செய்யும் நூற்றுக்கணக்கான மக்களையும் - அவர்கள் வேண்டுதல் செய்யும் நிலையையும் பார்க்கப் பரவசமாயிருக்கும். நாகதோஷம் - கருடதோஷமுள்ளவர்கள் வந்து வழிபட்டுச் சந்தான பாக்கியம் பெற்ற வரலாறுகள் உண்டு.

இரண்டு பாம்புகளாகக் காட்சி காட்டிக் கோயில் கொண்டவர் ஸ்ரீநாகவரத நாராயணன். அவர் தேரில் எழுந்தருளும்போது அடியார்கள் தம்மை மறந்து கண்ணீர் விடுவதையும் ஆண்டவன் வரத்தால் பெற்றபிள்ளைகளைத் தூக்கிய வண்ணம் தாய்மார் நன்றி செலுத்துவதையும் கற்பூரச்சட்டி ஏந்திநிற்கும் காட்சியையும் காணுவார்க்கு நெஞ்சம் குளிரும்.

இத்தகைய சிறப்புக்குரிய பெருமான் தேரேறி வரும் நிகழ்ச்சியை அன்படியார்கண்டு வேண்டிய வரம் பெறுவார்களாக. எல்லாருக்கும் நல்லருள் புரியுமாறு பிரார்த்திக்கின்றேன்.

**சிவத்திரு. பரம.சண்முகசுந்தரக்குருக்கள்**

# இத்தலத்தின் பூர்வ வரலாறு

தலம்: அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம்

ஸ்ரீநாகவரத நாராயணர் வீற்றிருக்கும் நாகேஸ்வரம் முன்பு பற்றைக் காடாயிருந்தது. இக்குறிச்சி தம்பளாவத்தை என அழைக்கப்பட்டது. இப்பகுதிக்கூடாக மக்கள் போக்குவரத்துக்குச் சிறியசிறிய கால்நடை வழிகளிருந்தன. ஆடு, மாடுகள் இஷ்டப்படி மேய்ந்து திரியும் பகுதி.

முற்காலத்தில் இத்தலக்குத் தெற்கேயுள்ள கிராமங்கள் வடக்கேயிருக்கும் கீரிமலை - மாவிட்டபுரம் முதலிய தலங்களுக்கு மேற்குறிப்பிட்ட கால்நடைப் பாதை வழியாகச் செல்வார்கள்.

கீரிமலை - ஆடி அமாவாசைத் தீர்த்தமாடுவதற்கு இரவிரவாக நடந்து செல்வார்கள். ஒரு தினம் கூட்டம் கூட்டமாகச் சென்றவர்களில் ஒருவரின் 9 வயதுச் சிறுவன் வழியைத் தவறவிட்டான். பிதாவும் மகன் வருகிறான் என்று மற்றவர்களுடன் போய்க்கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் மகன் தன்னைப் பிரிந்துவிட்டான் என்று தெரிந்து மக்கள் கூட்டத்துள் தேடினார். பயனளிக்கவில்லை. கண்ணீர் வடித்து நின்றார். தீர்த்தமாடவில்லை. உடன் வந்தவர்கள் அங்கும் இங்கும் தேடினார்கள்.

சிறுவன் பற்றைக் காடெல்லாம் மிகுந்த இருளில் அப்பா, அம்மா என்று கத்தித் திரிந்தான். நாவரண்டு விட்டது. சோர்ந்து ஒரு மரத்தரடியில் இருந்துவிட்டான். அது வாகை, நுணா, நாவல் மூன்று விருட்சமும் சேர்ந்த இடம். அப்போது ஒரு பெரியவர் வந்தார். "மகனே அழாதே உனது அப்பாவிடம் யான் கூட்டிச் சென்று ஒப்படைப்பேன்" என்று கொஞ்சம் அவலை உண்ணக் கொடுத்துத் தண்ணீரும் பருகவைத்தார். மெல்லமெல்லக் கூட்டிச் சென்று சிறுவனின் பிதாவிடம் ஒப்படைத்து மறைந்துவிட்டார். யாவரும் அதிசயப்பட்டனர். பின்பு சிறுவனும் பிதாவும் தீர்த்தமாடிவிட்டு வீடு திரும்பினர். வருகின்றபோது, தான் ஓடி அலைந்த இடங்கள், தங்கிய இடம், பெரியவர் அவல் கொடுத்த இடம் யாவைற்றையும் சிறுவன் பிதாவுக்குக் காட்டிய வண்ணம் வந்தான். வழக்கமான வழியிலிருந்து சுமார் 300 யார் தூரத்தில் அந்த இடங்கள் அமைந்திருந்தன. உடன் வந்தவர்கள் யாவரும் குறிப்பிட்ட இடத்தை மிக்க ஆர்வத்துடன் தேடினார்கள். பார்த்தார்கள் என்ன அற்புதம். சிறுவன் தங்கிய இடம் பெரிய பாம்புப் புற்றுள்ள இடம். அங்கேதான் பெரியவர் வந்து அவலும் தண்ணீரும் கொடுத்த நிகழ்ச்சி நடந்தது. யாவரும் காணும் படியாகப் புற்றிலிருந்து 2 பாம்புகள் வெளிப்பட்டுக் காட்சி காட்டி மறைந்துவிட்டன. எல்லோரும் இது நாகதம்பிரானின் இடமென்று வழிபட்டுச் சென்றனர்.

பிற்காலத்தில் இவ்விடத்தில் பொங்கும்காலம் மாத்திரம் பந்தலிட்டுப் பூசை செய்வார்கள். ஒரு வைரவ சூலம், ஒரு செம்பினால் செய்த பாம்பின் உருவம். ஒரு முக்கோணக்கல் இவை நிலத்திலேயே இருக்கும். இடையிடை மக்கள் வந்து கும்பிடுவார்கள். இரவு வேளையில் பெரிய தீச்சுவாலை தெரியும். இதனால் சிலர் கேணியடி முனி என்றும், சிலர் கேணியடிச் சோதி வைரவர் என்றும் சிலர் நாராயணராகிய நாகதம்பிரான் என்றும் வழிபட்டார்கள். ஆனால், கண்ணன் அவதாரம் செய்த தினமாகிய ஆவணி ரோகிணி, கிருஷ்ணஜயந்தியில் பொங்கல் செய்வார்கள். திருவருள் உத்தரவுப்படி இத்தலத்தின் பெயர் நாகேஸ்வரம் என அழைக்கப்படுகிறது.

- **தலவரலாறு** நூலிலிருந்து.

## பாதம் பணிவோம் தேரேறி வாருமையா!

கண்ணனே மணிவண்ணனே கார்முகில் வண்ணனே
நாகேஸ்வர முறையும் நாராயணனே சரணம்
மண்ணையுண்ட வாயனே மாயவா ஹரிகேசவா
கோபாலகிருஷ்ணனே கோகுலனே வா! வா!
விண்ணையளந்தவனே கண்ணனே வரமருள வேண்டும்
வேங்கடமலையானே திருப்பதி மலை வாசா!
கண்ணையிமை காப்பதுபோல் காத்திடவேண்டும்
அளவையூர்ப்பதியுறையும் அழகனே சரணம்!

நாகவரத நாராயணனே நாங்களுனைப் பணிந்தோம்
நாளும் பொழுதும் இசையால் மனம் பரப்பி
யோகவரந் தந்தே எமைக் காத்தருள்வாய் கண்ணா
நாகத்தில் துயிலும் கேசவனே மாதவனே
பாகமது பிரித்தே எமைப் பாதுகாத்தருளும் ஐயா!
பார்த்த சாரதியே பரந்தாமனே வா! வா! வா!
போகமார்த்த பூண்முலையாள் ஸ்ரீதேவி பூமிதேவி
பாதம் பணிவோம் தேரேறி வாருமையா?

- **கண்ணன் கழல் பணிவோன்**

## அற்புதங்கள்

✪ 1964ஆம் ஆண்டு வைகாசி மாதம் மானிப்பாய் வைத்தியசாலையில் 4 வயதுச் சிறுவன் இறந்துவிட்டான். ஆனால், நாராயணர் அடியாராகிய (சங்கானை) துரைச்சாமி என்பவர் இறந்த பிள்ளையின் உடலைக் கொண்டுவந்து எம்பெருமான் வாசலில் போட்டு மனைவியும், தானுமாகக் கதறி அழுதனர். என்ன அதிசயம், சுமார் 15 நிமிடத்தில் சிறுவன் கண்விழித்தான். தண்ணீர் என்றான். தீர்த்தம் கொடுக்கப்பட்டது. பிழைத்தான் சிறுவன். இன்னமும் வாழ்கிறான். அவன் பெயர் சிவசுதன்.

✪ ஆகாயத்தீர்த்தம்: கடினமான வெயிற் காலத்தில் ஸ்ரீமனோன்மணியின் தூபியிலிருந்து நான்கு திசையும் தீர்த்தம் வழிந்தது. இது ஒரு வாரமாக நடந்தது.

✪ மந்தாரை: ஒரு நெற்றிலிருந்து பல மந்தாரைக் கன்றுகளை உண்டாக்கி நட்டோம். எல்லாம் சிவத்தமலர் பூத்தன. ஸ்ரீரங்கநாதரின் பங்கில் நிற்கும் மந்தாரையைப் பார்த்து ஸ்ரீரங்காதனுக்கு நீ வெள்ளை மலர் தரக்கூடாதா என்று வேண்டினேன். மறுதினம் எல்லாம் வெள்ளை மலர்களே காணப்பட்டன.

✪ வயிற்றுவலி: அடியாரொருவருக்கு 10 வருடமாக வயிற்றுவலி நோய். எங்கும் அலைந்தார். இத்தலத்துக்கும் வந்தார். கண்ணா கண்ணா என்று கத்திக்கொண்டு தீர்த்தம் வாங்கிப் பருகினார். அதன்பின் வலியின்றி வாழ்ந்தார்.

✪ இரத்தப்போக்கு நீங்கியது: அளவெட்டி தெற்கைச் சேர்ந்த ஒரு வாலிபனுக்கு வயிற்றாலும், வாயாலும் இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. யாழ். போதனா வைத்தியசாலையில் 2 வாரமாக வைத்தியம் செய்தும் சுகமில்லை. எல்லாரும் கவலையுடன் செய்வதறியாது திகைத்தனர். ஒருநாள் அவருக்குத் துணையாக நின்ற ஓர் அன்பர் தான் சேமித்துவைத்திருந்த அம்பிகையின் தூபித்தீர்த்தம் எடுப்பித்துச் சிறிது நோயாளியின் வாயிலிட்டார். உடனே நோய் நீங்கியது. உடனே நோயாளி இரவோடிரவாக வைத்தியசாலைக்குப் பக்கத்திலிருந்த சொந்தக்காரர் வீட்டிற்குச் சென்றுவிட்டார். யாவரும் தெய்வீகத்தை வியந்தனர். ஆனந்தங்கொண்டனர். இப்படியாகப் பற்பல அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன.


## தேரேறி வரும் ஸ்ரீ நாகவரத நாராயண மூர்த்தியை பணிந்து துதிப்பவர்கள்:

**ஈஸ்வரன் ரேடர்ஸ்**
69. 115. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2813
021 222 3048, 3590

மங்கையர் நாளும்
விரும்பி நாடும் நகையகம்:
**அசோகா நகை அகம்**
இல.111. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

**விமல் போட்டோ அன் வீடியோ**
கலர்ப் படங்கள். வெளிப்புறப்பிடிப்பு. கறுப்பு. வெள்ளை. அடையாள அட்டைப் படம். பாஸ்போட் படம். படம் பெரிதாக்கல்
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.
T.P.: 077 6018803, 0777 6305183

**ரூபா பன்முக வர்த்தகம்**
104A. ஸ்ரான்லி றோட். யாழ்ப்பாணம்.

தங்க வைர நகைகளின் அழகு மாளிகை
**சாரங்கா நகை மாடம்**
157/1. 177/4. கஸ்தூரியார் வீதி. யாழ்.

விதம் விதமான அழகு நகைகளின் கலையகம்
**வினோ நகைப்பூங்கா**
185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சிறி நிதியா நகைமாளிகை**
இல. 1. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
இணை நிறுவனங்கள்: சாஜனா / சிறிரூபா நகைமாளிகை.

(சி-37457) (24-11)

**அ.ச.ஆறுமுகம் அன் சன்ஸ்**
இல. 81. ஸ்ரான்லி றோட்.
யாழ்ப்பாணம்.
**பல்பொருள் வாணிபம்**

**சிறி சிவாஞ்சனா நகையகம்**
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்.
இல. 149A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
Tel.: 021 222 5481
உரிமையாளர்: சி.சிவமூர்த்தி

என்றும் மாறா 22 கரட் ஆபரணங்களைப் பெற
**நியூ நகுலா ஜூவல்லறி**
74, கஸ்தூரியர் வீதி,
யாழ்ப்பாணம்.

எழில்மிகு ஆபரணங்களின் எழிலகம்
**சிறிநதியா நகை மாளிகை**
இல. 01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சிறிமதனா நகை மாளிகை**
தங்கப்பவுண் நகை வியாபாரம்
ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.
155/M, கஸ்தூரியர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 222 7772, 0777 300185

நவநாகரிக அடைகளின் தெரிவிற்கு
**சீமாட்டி புடைவை அகம்**
இல. 122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 24 - 09 - 1945



மறைவு 07 - 08 - 2004

## அமரர் நடராசா சந்திரசேகரம்

எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் மறைந்தது
எங்களுக்கு மறக்கமுடியவில்லை
உங்கள் மறைவினால் அன்றாடம்
வருந்துகின்றோம்.

அரசடி,
பண்டத்தரிப்பு. (36020)

பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.


கொழும்பு MOON BEAUTY CARE இன்
DIPLOMA IN BEAUTY CULTURE AND
ADVANCE DIPLOMA COURSE
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

★ தென்மராட்சி : ஏசியன் கல்வி நிறுவனம்.
புத்தூர் சந்தி, மீசாலை.
காலம்: 2004.09.08 நேரம் 4.30 (பி.நே.)

★ யாழ்ப்பாணம் : இல. 94, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி.
காலம்: 2004.09.07 நேரம் 4.00 (பு.நே.)

★ ஏற்கனவே பதிவை மேற்கொண்டவர்களும் புதிதாகச் சேர விரும்புகிறவர்களும் தொடர்புகொள்ளவும்.
★ Facials மட்டும் படிக்க விரும்புவோரும் Facials செய்யவிரும்புவோரும் தொடர்புகொள்ளவும்.
★ Hair Care (தலைமுடி சம்பந்தமான அனைத்தும்) பயிலவிரும்புவோரும், சேவை பெற விரும்புவோரும் தொடர்புகொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு:
0777 570138, 021 2263365
திருமதி B.அகிலா
(அழகுக்கலை நடன ஆசிரியை)
(36101)(33-42-16-17)


# கண்ணீர் அஞ்சலி

எமது ஆசிரியர்
## அ.யோகானந்தா

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருடன் நாமும் துயர்பகிர்வதுடன் அவரது ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியரின் மறைவால் துயருற்றிருக்கும்:
(14-16-26) A/L 2001 கணித மாணவர்கள். (36115)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 03 - 08 - 1932



இறைவன் திருவடியில் 07 - 08 - 2004

## அமரர் ஆறுமுகம் கந்தையா

திதி:06.09.2004

எமக்காகத் தம் வாழ்வை ஈந்து
எம்மையெல்லாம் உயரவைத்து
பிறருக்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்து
பிள்ளைகளுக்கு அறிவு என்ற தேனமுதூட்டி
வாழ்வின் படிகளில் உயரவைத்து
பலர்பேர் போற்ற வாழ்ந்த
எங்கள் அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வமாம் தந்தையின் மறைவுச் செய்திகேட்டு உடன்வந்து ஆறுதல்கூறி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

இன்று (06.09.2004) திங்கட்கிழமை முற்பகல் 11மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியம் ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொண்டு அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

பொற்தொழிலாளர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

- குடும்பத்தினர்.
(36058)(39-14-16-26)

# எம் மாதா, பிதா, குரு தெய்வங்களிற்கு
# எங்களது இதய அஞ்சலிகள்

31ஆம் நாள் | 88ஆம் நாள்



அமரர்
**சின்னப்பா செல்லத்துரை**
மண்ணில் 07-11-1925
விண்ணில் 07-08-2004


திருமதி
**சரஸ்வதி செல்லத்துரை**
மண்ணில் 04-06-1927
விண்ணில் 11-06-2004

நீர்த் தடாகமதில் தாமரை மலர்கள் போன்று
நிம்மதி வாழ்வுதந்து நிலைபெற வைத்தமாதே!
நிலமகள் போற்ற வாழ்ந்த நிறைகுடவிளக்கின் குன்றே!
குறைவிலா வரமும் தந்து வாழ்ந்திடும் வழியும் செய்தீர்!
ஆலமரமதுபோல் நிழல் தந்த அன்னையே! தந்தையே!
அலைமோதி கரை ஒதுங்கி கலங்கி அழுகின்றோம்
அரவணைக்க நீவிர் வரும்நாள் எந்நாளோ?

"செல்வமஹால்",
வன்னியசிங்கம் வீதி,
கைதடி வடக்கு,
கைதடி.
(36124) (26-14-16)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

# பத்தாவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## வையாபுரி முருகேசு பூபாலசிங்கம்

தோற்றம் 28~12~1940
மறைவு 29~08~1994

வையாபுரி குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து
களம் கண்ட பூமியில் சிங்கமாய் வாழ்ந்து
அன்போடும் பண்போடும் பேணி எம்மை வளர்த்து
உயர்வான நல்வாழ்வு நாம்வாழ வழி அமைத்துப்பின்
வானுறையும் தெய்வமாகி விட்ட அன்புத் தெய்வமே!
எங்கள் அப்பாவே! ஆண்டுகள் பத்து சென்றாலும்
நீங்காது உம் நினைவு!

சத்திரந்தை,
களபூமி,
காரைநகர். (36078)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(39-14-16-26)

# தமிழின அழிப்பில் ஒரேவிதம்: செயற்பாடுகள்தான் வித்தியாசம்



## தென்னிலங்கைக் கட்சிகள் பற்றி இளம்பரிதி

யாழ்ப்பாணம்,செப்.6

தென்னிலங்கைப் பேரினவாதக் கட்சிகள் தமிழின அழிப்பில் ஒரேவிதமாக நடந்து கொள்கின்றன. அதில் அவைகளின் செயற்பாடுகள் தான் சற்று வித்தியாசமாகக் காணப்படுகின்றன.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

தமிழீழ விடியல் இசைக்குழுவின் 'தாய் மடியின் தாலாட்டு' ஒலிப்பேழை வெளியீட்டு விழா யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்டு வெளியீட்டுரை நிகழ்த்தும் போதே இளம்பரிதி இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டில் மாறிமாறி ஆட்சிக்கு வருகின்ற இரண்டு அரசுகளும் தமிழின அழிப்பில் ஒன்றாகவே செயற்படுகின்றன. ஆனால், அவர்களுடைய செயற்பாடுகள்தான் சற்று வித்தியாசம். இந்தத் தமிழின அழிப்புக்கான அணுகுமுறைகளை எமது தேசியத் தலைவர் தனது மதிநுட்பத்தால் தகர்த்து எறிந்துள்ளார்.

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு இன்றைக்கு இரண்டரை வருடங்கள் கழிந்த நிலையிலும், எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் எவற்றிற்கும் தீர்வு காணப்படவில்லை. மாறாக சமாதானப் பேச்சுக்கள் என்ற போர்வையில் காலங்கள் இழுத்தடிக்கப்பட்டு தமிழர்களின் பேரம்பேசும் சக்தியை மழுங்கடிக்கும் வகையில அரசு செயற்பட்டுவருகிறது.

இந்தச் சூழ்நிலையில் ஒரு திடமான அரசியல் ரீதியான தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டிய சூழ்நிலைக்குள் எமது மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

சமாதானத்திற்கான தற்போதைய சூழ்நிலையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் பேரினவாத சக்திகளும், அவற்றுக்குத் துணைபோகும் தேசவிரோதக் குழுக்களும் ஆயுதம் இன்றி இதயசுத்தியுடன் மக்களுக்கு பணிபுரியும் எமது போராளிகளை அழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றன.

இதனை எமது மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். மட்டக்களப்புப் பகுதியில அண்மைக்காலமாக எமது போராளிகள் படுகொலை செய்யப்படுவதைப் பார்த்து எமது மக்கள் கொதிப்படைந்துள்ளனர். இத்தகைய சம்பவங்களை எமது மக்கள் கோபாவேசத்துடனேயே நோக்குகின்றனர்.

எமது மக்களுடைய தெளிவான பார்வையும், எமதுதேசிய விடுதலைப் பேராட்டத்தின் மீது கொண்ட பற்றுறுதியாலும் எமது போராட்டத்தை எவராலும் அழிக்க முடியாதுள்ளது.

எமது நிலைப்பாடு சரியானது என சர்வதேசம் இன்று ஏற்றுக்கொண்டுள்ளது. அதற்கு எமது போராட்டத்தின் மீது மக்கள் கொண்டுள்ள பற்றுறுதியே காரணம். இன்று எமது போராட்டம் சர்வதேச மயமாக்கப்பட்ட காலகட்டத்தில் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து, ஒரு தீர்க்கமான முடிவினை எடுப்பதன் மூலம் எமது இலக்குகளை இலகுவில் அடைந்து விடமுடியும்.

இன்று வெளியிடப்படும் இந்த ஒலிப் பேழையானது இந்த மண்ணின் விடுதலைக்காக வீரச்சாவைத் தழுவிக் கொண்ட எல்லைப்படை மாவீரர்களை கௌரவப்படுத்துகிறது. இது காலத்தின் தேவை கருதி எமது போராட்டக் கலைஞர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. எமது காலத்தின் பதிவுகளை எதிர்காலச் சந்ததிக்கும் எடுத்துக் கூறும் ஒரு வரலாற்றுச் சான்றாக - ஆவணமாக இதனைக் கருதுகின்றேன் - என்றார். (5-86)



# மனித சுவர்களாக நின்று போரை முறியடிப்போம்!

சந்திரிகா அம்மையார் சமாதானம் என்று சர்வதேச நாடுகளுக்குக் கூறிக்கொண்டு போர் முயற்சிக்கான நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகின்றார். அரசின் இத்தகைய கபட செயற்பாட்டை முறியடிக்க நாமும் எமது படைப்பலத்தைப் பெருக்கி மனித சுவர்களாக நின்று இப் போரை முறியடிக்கவேண்டும்.

மேற்கண்டவாறு யாழ் மாவட்ட தமிழத் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் குறிப்பிட்டார்.

தமிழீழ விடியல் இசைக்குழுவினால் எல்லைப் படை மாவீரர்களுக்கு காணிக்கையாக வெளியிடப்பட்ட தாய்மடியின் தாலாட்டு ஒலிப் பேழை மற்றும் நாடாவெளியீடு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் க.பகீரதன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய திருமதி பத்மினி சிதம்பரநாதன்:-

காலத்தின் தேவை உணர்ந்து இந்த ஒலிப் பேழை வெளியிடப்படுவது வரவேற்கத்தக்கதாகும். தமிழர்களின் வாழ்வுடன் சடங்குகளும், ஆடல் பாடல்களும் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன. இவற்றின் மூலம் அன்று மக்கள் தமது உள்ள உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடியதாகக் காணப்பட்டது.

இத்தகைய செயல்பாடுகளின் மூலம் மனத்தில் எழுந்த பிரச்சினைகளையும் கூட வெளிக்கொணர வழியேற்படுத்தப்பட்டது. அன்னியர் இம்மண்ணை ஆக்கிரமிக்கத் தொடங்கியதைத் தொடர்ந்து இச்செயற்பாடுகள் குறையத் தொடங்கின.

அன்று பறை அறைந்து செய்தி கூறுபவர் கூட பாடல்கள் மூலமே செய்திகளைக் கூறிவந்தார்கள். இவ்வாறு இசை எம்முடன் பின்னிப் பிணைந்த ஒன்றாக இருந்து வந்துள்ளது. இவை யாவும் இன்று நவநாகரிகம் காரணமாக வைப் பிலிடப்பட்டு மருவியே வருகின்றது.

இளைஞர்கள் இன்று கலாசாரச் சீரழிவுகளுகு உள்ளாகின்றார்கள். இத்தகைய செயறபாடுகளில் ஈடுபடுபவர்கள் யார் என்று பார்த்தால் போர்ச் சூலில் பிறந்து வளர்ந்தபிள்ளைகளே.

பிள்ளைகளிடையே பய உணர்வும், மன அழுத்தங்களும் காணப்படுகின்றன. பெற்றோர்களைப் பொறுத்தவரையில் பிள்ளைகளை படிப்பு என்று கூறி அழுத்தங்களைக் கொடுக்கின்றார்கள். இந்நிலையில் அவர்கள் அடக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டு கலாசாரப் பிறழ்வுகளுக்கு உளளாகின்றார்கள்.

அவர்களுடைய உணர்வுகளை வெளிக் கொண்டுவருதற்கான வழிகள் அமைக்கப்படவிலலை. இவர்களுடைய உணர்வுகள் மனநிலைமைகளை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவர்களின் உணர்வுகளை வெளிப்படுப்படுத்துவதற்கு வேண்டிய களங்களை அமைத்துக் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும் எனவும் குறிப்பிட்டார். (ப-5-86)




# யுத்தம் திணிக்கப்படும் போது நாம் தயாராக, பலமாக இருப்பது அவசியம்

## பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர்

கொழும்புத்துறை,செப்.6

சமாதானம் கிடைக்குமென்றால் நாம் யுத்தத்தில் இருந்து விலகிக்கொள்வோம். ஆனால, இன்று எம்மீது யுத்தம் திணிக்கப்பட்டுக்கொணடிருக்கிறது. எனவே, நாம் யுத்தத்திற்கு தயாராகவும் பலமாகவும் இருக்கவேண்டும். மக்கள் போராட்ட உணர்வுடன் விழிப்பாக இருக்கவேண்டும்.

- இவ்வாறு யாழ். பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.செழியன் தெரிவித்தார்.

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ். பிரதேச சங்கம நிகழ்வு அண்மையில் யாழ். பல நோ.கூ.சங்கக் கேட்போர் கூட்டத்தில் யாழ். பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சி.சிவஞானசேகரம் தலைமையில் நடைபெற்ற போது அதில்கலந்துகொண்டு உரைநிகழ்த்திய செழியன் மேலும் தமது உரையில்:-

யுத்தத்தின் கொடுமைகள், இழப்புக்களை நாம் நிறைய சந்தித்திருக்கின்றோம். அவைகளை நாம் வலிந்து மேற்கொள்ளவில்லை. போர் எம்மீது திணிக்கப்படும் போது நாம் விட்டு விட்டு ஓடப் போவதில்லை.

இராணுவத்திற்கு நிகரான பயிற்சி, பலத்தோடு இன்று நாம் இருக்கிறோம். ஓயாத அலைகளில் எமது பலத்தைவிட பொதுமக்கள் எமக்குக கொடுத்த ஆதரவுப் பின்கள உதவிகளும் அளப்பரியன.

இன்று எமக்குள்ள பலத்தை பற்றிப்பிடித்துக் காத்துக்கொள்ளவேண்டும்.

எமது தேசிய விடுதலைப் போராட்டம் சர்வதேச நாடுகளால் புரியப்பட்டு சரியான கட்டமைப்புக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

மக்களுக்காக புலிகள், மக்களோடு புலிகள என்ற நிலைமாறி இன்று மக்கள்தான் புலிகள் என்ற நிலை தோன்றியுள்ளது - என்றார்.

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சொலமன் சூ.சிறில் உரையாற்றும் போது:-

பேச்சுக்களை மீள ஆரம்பிக்க வேண்டுமென அமெரிக்கா அழுத்தம் கொடுக்கும் அதே வேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும். அதுவே பேச்சுக்களை ஆரம்பிக்க உந்துசக்தியாக அமையும் - என்றார்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு கிடைக்கும் சந்தர்ப்பத்தில் அனைத்து அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் நேர்த்தியாக முன்னெடுக்க முடியும் இந்த அதிகாரத்தைப்பெற மக்கள் ஒருமித்து வழங்கும் ஆதரவும், தேசிய எழுச்சியும்தான் அடிகோலும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

(ப-30-86)

# மொழியை இழக்கும் மக்கள் தம் அடையாளத்தை இழந்துவிடுவர்

## கலாநிதி குணராசா கருத்து

வலி.தெற்கு,செப்.6

"எங்களுடைய தமிழ் மொழியையும் அது பேணுகின்ற கலாசாரப் பண்பாட்டுப் பாரம்பரிய விழுமியங்களையும், ஒழுக்க நெறிகளையும் நாம் ஒரு தடவை மீண்டும் நினைவுபடுத்திக் கொள்வதற்கு இதுபோன்ற முத்தமிழ் விழாக்கள் அவசியமானவையாகும்"

பிரபல எழுத்தாளரும் யாழ். மாநகர ஆணையாளருமான கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்) கந்தரோடை ஸ்கந்தவரோயக் கல்லூரியில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரியின் ஒறேற்றர் சுப்பிரமணியம் மண்டபத்தில் தமிழ்மன்றத் தலைவர் செல்வன் சு.கபிலன் தலைமையில் விழா நடைபெற்றது.

கல்லூரி வாசலில் இருந்து தீச்சுடர் விளையாட்டுக்கள், பொய்க்கால் குதிரையாட்டம், கோலாட்டம், கும்மி நடனம் போன்ற பாரம்பரிய தமிழர் கலை நிகழ்வுகளோடு, தமிழ் வளர்த்த மூதாதையர்கள் , பேரறிஞர்கள் தோற்றத்தில் உடையணிந்த மாணவர்கள் முன்செல்ல பிரதம, சிறப்பு விருந்தினர்கள், கல்வியாளர்கள் பலரும் விழா மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கல்லூரி அதிபர் க.சிவாஜி ஆசியுரை வழங்கினார்.

கலாநிதிக.குணராசா அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:-

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழுக்கு அப்பால் இன்று எமக்கு அறிவியல் தமிழ் ஒன்று தேவைப்படுகிறது. கணனித் தமிழ் என்ற புதிய அறிவியல் தமிழ் இன்று உருவாகியுள்ளது. தமிழ்ப் பிரதேசங்களில் எல்லாம் கணனித் தமிழ் ஒரேவிதமாகக் கையாளப்படும் நிலை இன்றும் தோன்றவில்லை.

ஓர் இனத்தை அடையாளப்படுத்துகின்ற குறிகாட்டிகளுள் மொழி ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இந்த அடையாளத்தை இழந்த மக்கள் தமது இனத்தையும் இழந்திருக்கிறார்கள். நீர்கொழும்பு, மினிக்வேவா போன்ற இடங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் மொழியை இழந்ததனால் இன்று இனத்தையே இழந்த நிலையல் காணப்படுகின்றனர். தமிழ்பேசும் மக்கள் மொழியை மறந்ததனால் இன்னும் பல இடங்களில் தமது அடையாளத்தை இழந்துகொண்டு வருகிறார்கள்.

எங்களுடைய கலாசார பண்புகளை எவ்வளவு தூரம் பேணிவருகிறோமோ அவ்வளவுக்கு அவை அழியாமல் எமது இனத்தை அடையாளம் காட்டும் குறிகாட்டியாக விளங்கும்.

கலாசாரத்துடன் எமது பாரம்பரிய விளையாட்டுக்களான கோலாட்டம், கும்மி, கரகாட்டம் போன்றவைகள் கூட இனத்தின் குறிகாட்டிகளாக உள்ளன. உணவு முறைகள், விருந்தோம்பல் பண்பு, ஏழைகளுக்கு உதவும் பண்பு என்பன எல்லாம் ஓர் இனத்தின் குறிகாட்டிகளாகவே கொள்ளப்படுகின்றன.

இத்தகைய முத்தமிழ் விழாக்கள் மூலம் எமது இனத்தின் குறிகாட்டிகள் சிதைந்துவிடாது பாதுகாத்துக்கொள்ளவேண்டும் - எனக் கூறினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய விலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெ.இருதயநாதன் கூறியதாவது:-

எமது பாரம்பரிய பண்புகளை நாம் சிதைக்கக்கூடாது. தமிழர்களின் பாரம்ரிய பண்புகளான அன்பு, ஈகை, விருந்தோம்பல் என்பவற்றை இழந்து எம்மிடையே இன்று கொலை, களவு, கற்பழிப்பு போன்ற பண்புகள் ஏற்பட்டுவருகின்றன. தமிழர் என்ற உயர்வான எண்ணங்களுக்கு துரோகமாக உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பலர் நடந்து வருகின்றார்கள். தமிழர் தலைநிமிர்ந்து நிற்கக்கூடியதான பண்புகளோடு, மாணவர்களாகிய நீங்கள் உடை, நடையுடைகள், மூத்தோரை மதிக்கும் பண்பு, விருந்தோம்பல் என்பவற்றில் சிறந்து விளங்கவேண்டும் என்றார்.

வாழ்த்துரை வழங்கிய செஞ்சொற் செல்வா ஆறு.திருமுகன் கூறியதாவது:-

உலக அரங்கில் தமிழர் பல சாதனைகள் படைத்தாலும் மொழிபற்றிய அச்சம் ஏற்பட்டுக் கொண்டேயுள்ளது. சுத்தமான தமிழைப் பேசுகின்ற மக்களை காண்பது மிக அரிதாகவே உள்ளது. எழுத்தாளர்கள், கலைஞர்கள் தமது ஆக்கங்களில் ஏனையமொழிகளை கலந்துவருகின்றாகள். தமிழ் சொற்களை தேடி எடுக்கவேண்டிய நிலைக்குத் தமிழ்ச்சொற்களுக்கு பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத் தமிழுக்கு ஒரு தனித்துவம் உண்டு. வானொலி அறிவிப்பாளர்கள், வர்ணனையாளர்கள் முன்பெல்லாம் சுத்தமான தமிழ் உச்சரிப்போடு அவற்றைச்செய்து வந்தனர். ஆனால், இன்று வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றில் நடைபெறும் கலப்பு மொழியுடன் கூடிய தமிழ் உரையாடல்கள் 'இது தான் தமிழ்' என்று புதிய ஒரு தமிழை உருவாக்கிவருகின்றன. நடிப்புச் சுதேசிகளாக நாங்களே தமிழைக் கொலை செய்கின்ற பரிதாபநிலை தோன்றியுள்ளது. எங்கள் சாம்பலிலும் தமிழ்மணமே கமழவேண்டும் என்று பாடியவர்கள் இன்றும் நம்மத்தியில் வாழ்கின்றார்கள். அவர்கள் கனவு குலையாமல் நாமும் தமிழைக் குலைத்துவிடாமல் வாழவேண்டும் - எனக் கூறினார். (ப)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

HI 6 XXX தொடர் இலக்கமுடைய குவாட்டா லான்மாஸ்ரர் விற்பனைக்குண்டு. தொடர்பு: K.பத்மநாதன், டச் றோட், மானிப்பாய். (36102)

பாவித்த தையல் மெஷின் (வெள்ளை - நிக்கி), பால்கறக்கும் சணல் ஆடு - 2, கடைக்குரிய இறாக்கைகள், தாரசு என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.44, அத்தியடி புது வீதி, யாழ்ப்பாணம். (36119)

## வீடு விற்பனைக்கு

பணடத்தரிப்புச் சந்தையிலிருந்து யாழ். வீதியில் 200M தொலைவில் சகல வசதிகளுமுள்ள வீட்டுடன் கூடிய 4பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: க.உதயபுத்திரன், 41/2, ஞானவைரவர் லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (36085)

## காணி தேவை

நல்லூர்க் கோயிலுக்கு மிக அண்மையில் நல்ல சுற்றாடலில் ஒன்று முதல் ஒன்றரைப் பரப்புக் காணி விலைக்குத் தேவை. தொடர்பு: 071 - 4078976, 0777 - 355061. (சி-37477)

## அறை வாடகைக்கு

இரண்டு அறைகள், குசினியுடன் கல்வியங்காட்டில் வாடகைக்குண்டு. (சங்கீதம்/வயலின் சிறார்களுக்குக் கற்பிக்கக் கூடியவர்களுக்கு முன்னுரிமை). தொடர்பு: மாலை 4.00 மணி. திரு. தி. ரவீந்திரநாதன் (ஆசிரியர்), கலைமணி லேன், கட்டப்பிராய், யாழ்ப்பாணம். T.P.: 021 - 222 6902. (36127)

## திருமண சேவை

73ஆம் ஆண்டு, செவ்வாய்க்குற்றமுள்ள, 42பாவமுடைய, கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு, படித்த, அழகான மணமகள் தேவை. மற்றும் லண்டன், கனடா, சுவிஸ், ஆஸ்திரேலியா, பிரான்ஸ், நோர்வே பிரஜாவுரிமை பெற்ற மணமக்கள் எம்மிடம் உள்ளனர். தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை, இல.361, கோயில் வீதி, நல்லூர். (36129)

## மணமக்கள் தேவை

71ஆம், 77ஆம் ஆண்டு எஞ்சினியர், கத்தோலிக்க, கனடா பிரஜாவுரிமைபெற்ற மணமக்களுக்கு டாக்டர், எஞ்சினியர் மணமக்கள் தேவை. தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை, இல.361, கோயில் வீதி, நல்லூர். (36130)

## வாடகைக்குத் தேவை

பிரபல நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் உத்தியோகத்தருக்கு கந்தர்மடம், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் வசதியான வீடு அல்லது அறை வாடகைக்கு உடன்தேவை. தொடர்பு: 0777 - 251269. (36122)

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட அல்லது அதற்கு அண்டிய பகுதிகளில் ஒரு சிறிய வீடு வாடகைக்கு உடனடியாகத் தேவை. தொடர்பு: இல.09 (கலட்டிச்சந்தி), இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 077 6359201. (36135)

## தவறிவிட்டது

கடந்த மூன்று வாரங்களுக்கு முதல் **Dr. Jaganathan, Govt. Hospital P.Town Hatton** என்பவருடைய வாகன சாரதிப் பத்திரம் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து **Mr. M. MARIYANAYAGAM, FOOD AND LODGE, NEW REST HOUSE, 19, SOMASUNDRAM AVENUE, CHUNDUKKULI, JAFFNA** எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (36133)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, மகம் 2ஆம் பாதம், செவ்வாய் 4இல் உள்ள, கிரகபாவம் 39 உடைய 46வயது கொழும்பில் தனியார் நிறுவனம் ஒன்றில் முகாமையாளராகப் பணியாற்றும் மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை. ஜாதகக் குறிப்பு, புகைப்படத்துடன் தொடர்புகொள்ளவும். தொடர்பு: விளம்பர இல. 2367, மே/பா, உதயன். (36136)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, செவ்வாய்க் குற்றமற்ற, பாவம் 39, அழகிய, பட்டதாரி, அரச பதவி வகிக்கும் மணப்பெண்ணிற்கு நற்பண்புள்ள, 33-38 வயதுக்கு இடைப்பட்ட மணமகன் தேவை. தொடர்பு: 0777 288822. (36104)

## பட்டதாரிகளின் கோரிக்கை

புதுக்குடியிருப்பு,செப்.6

முல்லைத்தீவு மாவட்டத்தில் நியமனம் கிடைத்த பட்டதாரிகளுக்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் பயிற்சி வழங்க ஏற்பாடு செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது விடயமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருடனும் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது. (எ-6-353)

## வழிகாட்டல் கருத்தரங்கு

கொழும்பு,செப்.6

சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 8ஆம், 9ஆம், 10ஆம் திகதிகளில் தினமும் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை கொழும்பில் உள்ள அகில இலங்கை இந்து மன்றத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கைச் சட்டக் கல்லூரி சட்ட மாணவர்கள், இந்து மகாசபை நடத்தும் இக் கருத்தரங்கில் கலந்து பயன்பெறுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (எ-6)

## ஓய்வூதியத் திட்டத்தில்சேர மீண்டும் வாய்ப்பு

அச்சுவேலி,செப்.6

விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து கொள்ளாத பெண் அரச ஊழியர்கள் மீண்டும் இந்தத் திட்டத்தில் இணைந்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

1983 ஓகஸ்ட் முதலாம் திகதிக்கு முன்னர் அரச சேவையால் நியமனம் பெற்ற பெண் அரச ஊழியர்கள் இந்தவருடம் டிசெம்பர் 31ஆம் திகதுக்கு முன்னர் தமது விருப்பத்தைத் தெரிவித்து ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

### சேவை நிறைவில் எமது வாழ்த்துக்கள்



**திருமதி வசுந்திராதேவி பரமேஸ்வரநாதன்**

(ஆங்கில ஆசிரியர்)

16.01.1970ஆம் திகதி முதல் ஆசிரியப் பணியை ஆரம்பித்து, எமது வித்தியாலயத்தில் இருபத்தைந்து ஆண்டுகள் கடமையாற்றி இன்று (06.09.2004) ஓய்வுபெறும் ஆசிரியர் அவர்களை மனம் நிறைந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர் கழகம்,
**யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம், கோண்டாவில்.**
(36113)(39-14-16-26)

### ஓராண்டு நினைவஞ்சலி

**அமரர் செல்லையா யோகேஸ்வரன்**

(அதிபர், யா/புத்தூர் மெ.மி.த.க. பாடசாலை)

**அவனியில்:** 25-06-1950
**இறைவனடியில்:** 06-09-2003

ஓராண்டு சென்றாலும் எமது இதயங்களில் நீங்காது நிலைத்திருக்கும் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/புத்தூர் மெ.மி.த.க. பாடசாலை, புத்தூர். (36139) (26-14-16)
**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

## மோட்டார் சைக்கிள்மோதி சிறுவன் காயம்!

தென்மராட்சி,செப்.6

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வீதியில் நடந்து சென்ற சிறுவனை மோதித் தள்ளியது. இதனால் சிறுவனுக்கு கால் முறிந்தது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மீசாலையில் இடம்பெற்றது.

மீசாலை மேற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பிரதீபன் (வயது15) என்ற சிறுவனுக்கே கால் முறிந்தது. இவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஐ-117)

### 24ஸ்ரீ 5123 இலக்க பாரவூர்தி
### பகிரங்க ஏலவிற்பனை - 09-09-2004

வடமராட்சி கிழக்கு ப.நோ. கூ. சங்கத்திற்குச் சொந்தமான 24 ஸ்ரீ5123 இல. (911 பென்ஸ்) பாரவூர்தி பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளது. பாரவூர்தியை 06-09-2004 தொடக்கம் 09-09-2004 காலை 10.00 மணிவரை உபயகதிர்காமத்திலுள்ள வடமராட்சி கிழக்கு புனரமைப்பு நிறுவனத்தின் காரியாலய வளவில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். 09-09-2004 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்துப் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும்.

01. மீளளிக்கும் பணமாக ரூபா 1000/- செலுத்திக் கேள்வியில் பங்குபற்றலாம்.
02. தெரிவுசெய்யப்படுபவர் மூன்று நாள்களுக்குள் முழுப் பணத்தினையும் செலுத்திப் பாரவூர்தியைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

வடமராட்சி கிழக்குப் ப.நோ.கூ.சங்கம், மருதங்கேணி, தாளையடி. (சி-37472) (26-14-16)
**பொ.ஸ்ரீராமச்சந்திரன்,** பொதுமுகாமையாளர்.

### இந்துமன்ற அறிவித்தல்

*இந்துமன்ற செயற்குழுவினர்களுக்கான படம் எடுத்தல் நிகழ்வு இன்று (06-09-2004) திங்கட்கிழமை பி.ப. 5.00 மணியளவில் இராமநாதன் மண்டபத்திற்கு முன்பாக இடம்பெறவுள்ளதால் அனைத்துப்பீட செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது சமுகந்தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.*

**- செயலாளர்.**
யாழ்.பல்கலைக்கழகம். (36132)

### வீடு தேவை

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு காரியாலய உபயோகத்திற்காக உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலை வீதி அல்லது அதன் சுற்றாடலில் ஒரு வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்குத் தேவையாக உள்ளது. இது சம்பந்தமாகத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி : இணைப்பாளர், மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு, அறை எண். 30, யாழ்.போதனா வைத்தியசாலை. தொ.பே.இல: 2225657.
(சி-37431)

### இணையத் தளம் ஊடாக
### 24 மணி நேரமும் உலகெங்கும் ஒலிக்கிறது

**WORLD TAMILAR**
உலகத் தமிழர் வானொலி

**இணைய முகவரி: WWW.Wtrfm.com**
அதன் ஒரு வருட பூர்த்தியைச் சிறப்பிக்க நல்லூர் திருவிழாக்கால நேரடி ஒலிபரப்பு
**26 உற்சவ நாள்களிலும்**
(ஓகஸ்ட் 21 முதல் செப்ரெம்பர் 16 வரை)
உலகின் எந்த மூலையிலிருந்தும் இணையத்தளம் மூலம் செவிமடுத்து மகிழலாம்).

**உலகத் தமிழர் வானொலியுடன்**
நேரடியாக இணைய
MSN messenger chat மூலம்: live @ wtrtm.com
தொலைபேசி மூலம்: 2673969
(சி-36863)

**உலகத் தமிழர் உறவுப் பாலமாக உலகத் தமிழர் வானொலி**

ஊடக அனுசரணை:- 'உதயன்'

### வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி
### வெளிமாவட்டத்திலிருந்து சங்கத்திற்குப் பொருள்களை ஏற்றி, இறக்குவதற்கான லொறி உரிமையாளர்களின்
### கேள்விக் கோரிக்கை

வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கத்திற்குத் தேவைப்படும நுகர்ச்சிப்பொருள் கொள்வனவுகளை கொழும்பு போன்ற வெளிமாவட்டங்களில் ஏற்றி, இறக்குவதற்கான கூலிக் கோரிக்கை லொறிச் சொந்தக்காரரிடமிருந்து 30.09.2004 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளப் படும். விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்துடன் லொறி உரிமைச் சான்றிதழின் போட்டோப் பிரதி, வாகனத்தின் உட் பரிமாணம் முதலியன உள்ளடங்கியதாக விண்ணப்பத்தில் குறிப்பிடல் வேண்டும். தெரிவுசெய்யப்படும் லொறி உரிமையாளர், சங்கத்துடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வதுடன் சங்கத்தினால் தீர்மானிக்கப்படும் பிணைப் பணத்தையும் செலுத்தக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். மேலதிக விவரங்களுககுத் தலைமைக் கந்தோருடன் தொடர்புகொள்ளவும்.

நீர்வேலி. (சி-37428)(26-14-16)
**- பொது முகாமையாளர்.**

இதோ யாழ்.மக்களுக்கோர் புத்துணர்வூட்டும் செய்தி!
புதுப்பொலிவுடன் திகழும்

**பவர் செலூலர் ரேடிங் கம்பனி** நிறுவனத்தினர்

இப்பொழுது வடமராட்சி மக்களுக்காகத் தொலைத்தொடர்பு கோபுரம் அமைக்கப்பெற்று, மிகத்துல்லியமான முறையில் உங்கள் அன்புச் செல்வங்களுடன் பேசி மகிழ வகை செய்துள்ளனர்.

இன்றே விரையுங்கள்:
**பவர் செலூலர் ரேடிங் கம்பனிக்கு!**

மேசைத் தொலைபேசி விற்பனையில் முன்னோடியாகத் திகழும் **பவர் செலூலர் ரேடிங் கம்பனி** நிறுவனத்தினர்

குறிப்பு : இம்மேசைத் தொலைபேசிகள் யாவும் அன்ரனா இணைப்புகள் மூலமும் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு இணைப்புகள் யாவும் 24 மணி நேரத்தில் பெற்றுத்தரப்படும்.

எமது சேவை ஸ்ரீலங்கா ரெலிக்கொமின் துணை நிறுவனமாகிய
**மொபிட்டல் பவர் செலூலர் ரேடிங் கம்பனி**



185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை நிறுவனம் : 205/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (ராஜா தியேட்டர் அருகில்).
அலுவலக T.P. 021-222-7070, 0712-399220, **Hot Line : 0777-281521.**
(C/36890)




**சாவகச்சேரி பிரதேச சபையின் கொடிகாமம் உப அலுவலகம் நடத்திய உலக சுற்றாடல் தினவிழா அண்மையில் பருத்தித்துறை வீதியில் உள்ள மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. அந்நிகழ்வில் கொடிகாமம் பிரதேச சுகாதாரப் பரிசோதகர் நிர்மலன் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர் திருமதி எஸ்.சந்திரகுமார், பிரதேச சபையின் செயலாளர் ந.பாலச்சந்திரன், வைத்திய அதிகாரி எஸ்.ஜெபநாபகணேசன் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.** *(படம்: கொடிகாமம் செய்தியாளர்)*

# தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தலைமைச் செயலகம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம்,செப்.6

யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தலைமைச் செயலகம் இன்று முற்பகல் 10 மணிக்கு கோவில் வீதி நல்லூரில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இத்தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தலைமைச் செயலகமானது தமிழர் தாயகப்பிரதேசத்தில் முதன்முறையாக யாழ். மாவட்டத்தில் திறந்துவைக்கப்படுகின்றது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் கல்விமான்கள், மாணவர்கள் எனப பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இது தொடர்பாக அந்த ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ் மாணவர் ஒன்றியமானது இராணுவ ஆக்கிரமிப்புக்குள் எமது தாயகப் பிரதேசங்கள் அகப்பட்டபோது தமிழ் மாணவர்கள் எதிர்நோககிய அடிப்படை உரிமைப்பிரச்சினைகளை தீர்ப்பதற்காக தமிழ் மாணவர்களால் தமக்கென உருவாக்கப்பட்ட மாணவர் கட்டமைப்பாகும்.

இவ்வமைப்பானது இராணுவ ஆக்கிரமிப்பால் நிர்க்கதியாக்கப்பட்டு அடிப்படை வாழ்வியல் உரிமை மறுக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நலன்பேணும் திட்டங்களை முன்னடுத்துவருகின்றது.

தமிழர் தாயகப் பிரதேசமான தமிழீழத்திலே வறுமையினால் கல்வி நிலைபாதிப்படையாமல் இருப்பதற்காகவும் வறிய மாணவர்களினது அடிப படைப்பிரச்சினைகளை கேட்டறிந்து அவற்றைத் தீர்த்து வைப்பதற்காகவும் இந்த அமைப்பு பல செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

தமிழ் மாணவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக உருவாக்கப்பட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தலைமைச் செயலகமானது தமிழர் தாயகப்பிரதேசத்திலே முதன் முறையாக யாழ். மாவட்டத்திலேயே திறந்துவைககப்படவுள்ளது.

இத்தலைமைச்செயலகமானது தமிழ் மாணவர்களின பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதுடன் மாணவர்கள் எதிர்நோக்கும் உரிமை மீறல் பிரச்சினைகளை சர்வதேச சமூகத்திற்கு வெளிக்கொணரும் ஓர் அமைப்பாக தமிழ் மாணவர் ஒன்றியம் இனிவரும் காலங்களில் செயற்படும் - என்று உள்ளது. (ஐ-6)

# ஆயிரம் பேருக்கு மூக்குக் கண்ணாடி

யாழ்ப்பாணம்,செப்.6

"லயன்ஸ் நோக்கு - தெளிவான பார்வை" என்ற திட்டத்தின் கீழ் சுன்னாகம் லயன்ஸ் கழகம் வறுமைக்கோட்டுக்குக் கீழ்வாழும் ஏழை மக்களுக்கு இலவசமாக ஆயிரம் கண்ணாடிகளை வழங்கவுள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக 5 கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்.

பார்வைக் குறைபாடுடையவர்களை இனங்கண்டு அவர்களுக்கு இலவசமாக கண்ணாடிகளை வழங்கவுள்ளோம் என்று சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் த.அரியரத்தினம் தெரிவித்தார். (ஐ-15)

# இந்து சமயமும் உயிர்ப்பலியும் அவரவர் நம்பிக்கையைப் பொறுத்தது

நமது புராதன இந்து சமயம் இயற்கையை வணங்கும் சமயம் அதில் சைவ சமயம் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டது. அண்ட சராசரங்களையும் ஆக்கி அசைத்துக் கொண்டிருக்கும் பரந்த சக்தியை நாம் பராசக்தி என்று வணங்குகின்றோம். சென்ற யுகங்களில் வாழ்ந்த ஞானிகள் பராசக்திக்கு பெண்ணுருவம கொடுத்தனர்.

அண்ட சராசரங்களை நாம் சிவனெனவும், அதை ஆக்கி அசைத்துக்கொண்டிருக்கும் சக்தியை பராசக்தியென்றும் கொண்டோம். சிவனும் சக்தியும் ஒன்றுபட்டதாலே உயிர்ப்புள்ள அண்டசராசரம் உருவாயிற்று. அந்த அண்ட சராசரத்தையே நாம் அடியும் முடியும் இல்லாத சிவனென்றோம். அதாவது தொடக்கமும் முடிவும் இல்லாத சிவனென்றோம்.

இயற்கையில் ஆக்கமும் அழிவும் நியதி ஆக்கப்பட்டவை. அழிந்து, அந்த அழிவிலிருந்து மீண்டும் ஆக்கங்கள் உருவாகின்றன. அதாவது அந்த பரந்த சக்தி - பராசக்தி - ஆக்கங்களை உண்டுபண்ணி, அவற்றை பாதுகாத்து, பின் அவற்றை அழித்து அந்த அழிவிலிருந்து மீண்டும் ஆக்கங்களை உண்டு பண்ணி இயற்கையின் வட்டத்தை - நியதியை - பராமரிக்கிறது.

ஆக்கும்போது அந்த பராசக்தி சாந்தமான அம்மனாகவும், அதுவே அழிக்கும் சக்தியாக உருவெடுக்கும் போது இரத்தப்பசி கொண்டு ஆக்கியவற்றை அழித்து உயிர்பலியெடுக்கும பத்திரகாளியாகவும் மாறுகிறது. இதையே நாம் இரத்தம் கக்கும் பேயுருக்கொண்ட பெண்ணுருவாகக்கொண்டோம்.

இந்த அழிக்கும் சக்தி பூலோகத்தில் எரிமலையாகவும், சூறாவளியாகவும், கடல் கொந்தளிப்பாகவும், வெள்ளப்பெருக்காகவும் உருவெடுத்து உயிர்ப்பலியெடுக்கும் அழிவுச் சக்தியாக மாறுகிறது. இதுவும் இயற்கையின் நியதியே! அந்தப் பத்திரகாளியையும் நாம்




கோயிலெடுத்து வணங்குகின்றோம். அதுவும் இயற்கையின் நியதியில் அந்த ஆதிபராசக்தியின் தவிர்க்கமுடியாத ஒரு கோலமே.

இரத்தப் பசியெடுத்துப் பேயாக வரும் இந்த அழிக்கும் சக்திக்கு உயிர்ப்பலி கொடுத்தால் அதன் ஆக்ரோசம் குறைந்து சாந்தமாகிவிடும் என்ற நம்பிக்கை எம் முன்னோரிடம் இருந்தது. அதுவே இந்த அழிக்கும் சக்தி கோயில் கொண்டிருக்கும் இடங்களில் உயிர்ப்பலி கொடுக்கும் முறையாயிற்று அது சரியா பிழையா என்பது அவரவர் நம்பிக்கையைப் பொறுததது.

ஆனால், காலங்களும் கருத்துக்களும் முறைகளும் மாறுகின்றன. அத்துடன், நாமும் காலத்துக்கும் அழிவுக்கும் ஏற்றமாதிரி மாறிக் கொள்வது நல்லது.

**- பரமன் சுன்னாகம்.**

# வாசகர் திருமுகம்

## வீதி ஒழுங்கு வேண்டும்

பருத்தித்துறை ஓராம் கட்டைக்கும் கிராமக்கோட்டுச் சந்திக்கும் இடையேயுள்ள பிரதான வீதியின் இரு பக்கங்களிலும் வாகனங்கனை நிறுத்திவைத்துப் பழுது பார்ப்பதால் வாகனப் போக்குவரத்துக்கும் பாதசாரிகளுக்கும் இடையூறு ஏற்பட்டுள்ளது என்பதைத் தங்களது 'உதயன்' பத்திரிகையில் சில வாரங்களுக்கு முன் ஒரு செய்தி வெளியிடப்பட்டிருந்ததை வாசித்த இவ்வூர் மாணவர்களின் பெற்றோரும் மக்களும் மிகச் சந்தோசப்பட்டார்கள். ஏன் என்றால், இந்த முறைகேட்டை உடனடியாகப் பொலீஸ் திணைக்களமோ மற்றைய தொடர்புள்ள திணைக்களங்களோ தடைசெய்வதற்கு ஆவண செய்யும் என்று.

ஆனால், நடந்தது என்ன? ஒன்றுமே அசைய்வில்லை. வாகனங்களைப் பழுது பார்ப்பவர்களுமே அசட்டையுடன் தங்கள் பணிகளைத் தொடர்ந்து நடத்துகின்றனர்.

இப்பகுதியில் கிராமக்கோட்டுச்சந்தியிலிருந்து சுமார் நூறு மீற்றர் தூரத்தில் - மருதங்கேணி வீதியில் - ஒரு பாடசாலை இயங்கிவருகின்றது. மேலும் ஓராம் கட்டைச் சந்தியிலிருந்து நூற்றியம்பது மீற்றர் தூரத்தில் வட. இந்து மகளிர் கல்லூரி இயங்கிவருகின்றது. ஐந்து வயதில் இருந்து பதினெட்டு வயது வரையான மாணவர்கள் இப்பாடசாலையில் கல்வி கற்கின்றனர். அவர்களில் ஐம்பது சதவீதத்தினர் பிரதான வீதியைப் பாவிக்கின்றனர். அதிலும் சிறார்கள் வீதியைக் கடக்க உயிரைப் பிடித்துக்கொண்டே கடக்கவேண்டியிருக்கின்றது. இப்பிரச்சினையைப் பொலீஸாரே தீர்த்துவைக்கமுடியும். ஆனால், அவர்களும் ஒன்றும [illegible] இருக்கின்றனர்.

மோட்டார் சைக்கிளில் கவசம் அணியாது செல்வோரைப் பிடித்துத்தண்டப்பணம் அறவிடும் பணியில் ஈடுபடும் அவர்கள், பிரதான வீதியில் வாகனங்களை வைத்துத் திருத்துவோரையும் அதே பாணியில் முழு மூச்சுடன் செயற்பட்டு ஏனைய பாதசாரி, மாணவர்களையும் நிம்மதியாகப் பிரயாணம் செய்ய உதவி, வாகன விபத்துக்களையும் உயிர்ப்பலிகளையும் தடுத்தால் என்ன?

மோட்டார் சைக்கிளில் செல்வோரின் உயிரைப் பாதுகாக்கக் கவசம் அணியும்படி கண்டிப்பாயுள்ளவர்கள் ஏன் பாதசாரிகளையும் மற்றைய வாகனம் செலுத்துவோரையும் விபத்துக்களிலிருந்து பாதுகாக்க முயற்சிக்கக் கூடாது?

ஒன்று தண்டப்பணம் உடனடியாகத் திணைக்கத்துக்குச் சேருகின்றது. அதனால் வருமானம் அதிகரிக்கின்றது. இதையும் கருத்திற்கொண்டு பதவி உயர்வு கிடைக்க வழி ஏற்படும். மற்றதில் தலையிட்டால் வீணாகக் கோடு, வீடு என்று திரியவேண்டும் என்ற களைப்போ.

**- வீதி விபத்தை வெறுப்போன்**

## கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளருக்கு வேலைவாய்ப்பு எப்போது கிட்டும்

யாழ். தொழில்நுட்பக்கல்லூரியில் கணக்கியல் சார் **(Accounting)** பட்டச்சான்றிதழ் பெற்றுக்கொண்டோருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித்தரப்படல் வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

மேலும், **N.C.A.T.** போன்ற வர்த்தக/கணக்கியல் சார் கற்கை நெறிகளில் பட்டச்சான்றிதழ் உள்ளோருக்கும் அவர்களின் தகுதியடிப்படையிலும், முன்னுரிமை அடிப்படையிலும் வேலைவாய்ப்புப் பெற்றுத்தர ஆவன செய்யப்படல்வேண்டும்.

தொழில்நுட்பக்கல்லூரியில் பயின்று தொழிற்பயிற்சி முடித்து **(JOB TRAINING)** சான்றிதழ் பெற்று வெளியேறியவர்கள், தொழில்சார் தகைமை **(PROFESSIONAL QUALIFIED)** உடையவர்கள் ஆவர். எனவே, இத்தகுதி உடையவர்களை அரச, கூட்டுத்தாபன, திணைக்களங்கள் மற்றும் தனியார்துறைகள் ஆகிய பொருத்தமான பதவிகளின் வெற்றிடங்களுக்கு உள்வாங்கப்பட நடவடிக்கை எடுக்கவேண்டுமென எதிர்பார்த்து நிற்கின்றோம்.

எனவே, இவ்விடயம் தொடர்பாக யா/தொழில்நுட்பக்கல்லூரி அதிபர், தொழில்நுட்பக்கல்வி பிரதிப் பிராந்தியப்பணிப்பாளர் - வலயம் 4 (வடக்கு - கிழக்கு) மற்றும் இது தொடர்பான ஏனைய அதிகாரிகள் ஆகியோர் விரைந்து நடவடிக்கை எடுத்து வேலைவாய்ப்பு வழங்க ஆவனசெய்யவேண்டும் என பாதிக்கப்பட்டோர் சார்பாக எதிர்பார்த்து வேண்டி நிற்கின்றோம்.

**- பாதிக்கப்பட்டோர்.**

## நல்லூரின் பக்திச் சூழலில் சினிமா இசையா?

திருகோணமலையைச் சேர்ந்த நான், யாழ்ப்பாணத்துக்கு பல தடவைகள் வந்துள்ளேன். இருந்தாலும் இம்முறைதான் முதன் முதலாக நல்லூர்த் திருவிழாவின்போது வரும் பாக்கியம் கிடைத்தது.

நல்லூர்த் திருவிழாவின்போது ஆலயத்தைச் சுற்றி ஒரு மைல் விஸ்தீரணம் பக்திச் சூழலாகவே இருக்கும். பக்தி இசைகள் முழங்கும். தெருவெல்லாம் பக்திமயமாக இருக்கும் எனக் கேள்விப்பட்டிருந்தேன். இரண்டு தினங்களுக்கு முன்பு சிநேகிதியுடன் காலையில் கோவிலுக்குச் சென்றேன். கேள்விப்பட்டது போலவே பக்திச் சூழல் வீடுகள் கடைகளில் எல்லாம் ரேப்றெக்கோடர்களில் பக்திப்பாடல்கள். பாதையெல்லாம் பக்தர் கூட்டம் மெய்சிலிர்க்க கோவிலை நெருங்கிக்கொண்டிருந்தேன். மெய்சிலிர்க்கப் பெற்ற என் மெய்கொதித்தது. சைக்கிள் பாதுகாப்பு நிலையம் ஒன்றில் பெரிய சத்தமாக தற்கால "தும் தும்" இசையுடன் சேர்ந்த சினிமாப்பாடல்கள் ஒலித்தன. இப்படியும் நடக்குதா என ஏங்கினேன், வேதனைப்பட்டேன் சிநேகிதியுடன் வேதனையைப் பகிர்ந்துகொண்டேன். மிகவும் கேவலமான வெட்கக்கேடான வேலை. இதனை யார் தடுப்பார்?

சம்பந்தப்பட்டவர்களை சினிமாப் பாடல்களைப் போடாதீர்கள் என்று வாசகர் திருமுகம் மூலம் மிகவும் மன்றாட்டமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

***- க.கலையரசி, மத்திய வீதி, திருகோணமலை.***

## ஒரு வீதிக்கு இரண்டு பெயர்களா?

யாழ். பல்கலைக்கழகம் அமைந்துள்ள வீதி பழைய காலம் தொடக்கம் நாச்சிமார் கோயில் வீதி என அழைக்கப்பட்டு வந்தது. யாழ். மாநகர சபையால் போடப்பட்ட பெயர்ப் பலகையும் அப்படித்தான் இருந்தது. பல்கலைக்கழகம் அமைத்ததன் பின்னர் 'சேர் பொன். இராமநாதன் வீதி' என மாற்றப்பட்டு மாநகர சபைப் பெயர்ப்பலகையும் அப்படியே போடப்பட்டிருந்தது. பின்னர் பலகை இற்றுப்போகத் தனியே 'இராமநாதன் வீதி' எனப் போடப்பட்டிருந்தது. தற்போதும் நாச்சிமார் கோயிலடியில் இருக்கிறது.

இப்படியிருக்க, பலாலி வீதியில் மிகவும் அண்மையில் "பரமேஸ்வரா வீதி" எனப் பெயர்ப்பலகை மாட்டப்பட்டுள்ளது. இராமநாதன் வீதி என்றே மாநகர சபைப் பதிவேட்டில் இருக்கின்றது. சோலை வரி நடுக்கட்டல் அறிவித்தலிலும் போடப்படுகிறது.

பெயர்ப்பலகை போட்ட நிறுவனம் புதுப்பெயரை எங்கிருந்து பெற்றது. மாநகர சபைக்குத் தெரியாமல் இப்பெயர் மாற்றப்பட்டதா?

இதற்கு உரிய நடவடிக்கை மாநகர சபையால் எடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**- வ.தேவேந்திரன்**

# சமய சந்நிதிகளில்

யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயப் பெருவிழா நவநாள் வழிபாடுகள் நடைபெற்றுவருகின்றன.

நாளை செவ்வாய்க்கிழமை மாலை நற்கருணைப் பெருவிழாவும் 8 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் திருவிழாத் திருப்பலியும் நிறைவேற்றப்படும்.

மாலையில் அன்னையின் திருச்சொரூப ரதப்பவனியும் ஆசீரும் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை,செப்.6

குடத்தனை வடக்கு புனித வேளாங்கண்ணி ஆலய வருடாந்தத் திருவிழா நடைபெற்றுவருகின்றது.

நாளை மாலை நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் 8 ஆம் திகதி காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூபப் பவனியும் ஆசீரும் இடம்பெறும். திருப்பலி நிகழ்வுகள இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் யாழ். சேவையில் நேரடியாக ஒலிபரப்பப்படவுள்ளன என்று பங்குத்தந்தை றோய் பேடினன் அடிகள் தெரிவித்துள்ளார். (ஐ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.6

கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தில கிருஸ்ணஜெயந்தியை ஒட்டி இன்றுகாலை 8.30 மணிக்கு சுதர்ஸன ஹோம, அபிஷேக ஆராதனைகள் நடைபெறவுள்ளன. (3-202)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.6

சாவகச்சேரி சப்பச்சி மாவடி ஸ்ரீசக்கர ஆழ்வார் தேவஸ்தானத்தில் கிருஸ்ண ஜெயந்தி விழா இன்று திங்கட்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. நள்ளிரவு கண்ணன் பிறப்பும் விசேட அபிஷேகப் பூசைகளும் நடைபெறும். (ஐ-202)

### வலுவிழந்தோருக்கான கணனிப் பயிற்சி

தென்மராட்சி,செப்.6

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஊனமுற்றோர், வலுவிழந்தோர் ஆகியோருக்கான கணனிப் பயிறசிநெறியினை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

சர்வதேச லயன்ஸ் கழக அனுசரணையுடன் நடத்தப்படவுள்ள இப்பயிற்சி நெறிகளில் பங்குபற்ற விரும்புவோர் தமது விவரங்களை சாவகச்சேரி நவீன சந்தையில் உள்ள விமலாஸ் வர்த்தக நிலையத்தில் பதிவுசெய்யுமாறு கழகத் தலைவர் லயன் செ.கா.நவரத்தினம் கேட்டுள்ளார். (ஐ-117)

### வேம்படி மாணவிகளின் இசைநாடகம

யாழ்ப்பாணம்,செப்.6

யாழ்.சேவையில் நடைபெற்றுவரும் நாட்டாரியல் இசைமாலையில் இன்று திங்கட்கிழமை இரவு 8.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் வழங்கும் 'பவளக்கொடி' என்னும் இசைநாடகம் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சி பாரம்பரியக்கலைகள் மேமபாட்டுக் கழகத்தினால் ஒன்றுவிட்ட ஒரு திங்கள் தோறும் நடதப்பட்டு வருகின்றது. (ஐ-204).


**தவறிவிட்டது**

கைதடி மேற்கைச் சேர்ந்த வேலு மோகனதாஸ் என்பவருடைய கைத்தொலைபேசி (நொக்கியா–077 619 2258) 01.09.2004 புதன் கிழமை கைதடிச் சந்திக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்: **வேலு மோகனதாஸ்,**

உதயநகர், கைதடி மேற்கு, கைதடி.

**T.P.No: 077 6623741.**

(மனிதாபிமானத்துக்குச் சன்மானம்) (36144)

**The Royal College Of Jaffna**

6 மாதங்களில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில By.விக்னேஸ்வரன் ஆச்சாரி, மாதாந்தக் கட்டணம் 150/=. 426(302), K.K.S. வீதி, யாழ். பிளாக் வீதி, சங்கானை. (36143)

**தெய்வீக இசையரங்கு**

நல்லைக்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறும் தெய்வீக இசையரங்கில,

**நாளை 07.09.2004**

**செவ்வாய்க்கிழமை மாலை**

**6.30மணிக்கு**

பாட்டு: S.சண்முகராகவன்
வயலின்: S.திபாகரன்
மிருதங்கம்: K.அனந்தகோபன்
முகர்சிங்: K.நந்தகுமார்

நல்லூர். - இளங்கலைஞர் மன்றத்தினர். (36141)

**கண்ணீர் அஞ்சலி**



எமது சக அலுவலரான

**கதிரவேலு குகதாசன்**

**(குகன்)**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அவரது பிரிவால் வருந்திநிற்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் கண்ணீர் அஞ்சலியைக் காணக்கையாக்கி ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
நல்லூர். (சி37481)(34-16-14)

- நலன்புரிச் சங்க அங்கத்தவர்கள்.

**படிவம்**

தேசிய கல்விக் கல்லூரிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

படிவம் ஒன்றின் சில்லறை விலை (கடித உறை உட்பட) ரூ 7/-(ஏழு ரூபா மட்டும்)

**BHARATHI PATHIPPAKAM**

430, K.K.S. Road, Jaffna. (சி37482)


# புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு கனடாவிலிருந்து உபகரணங்கள்

தெல்லிப்பழையில் அமையவிருக்கும் புற்றுநோய் வைத்தியசாலைக்கு கனடாவில் இருந்து நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய இயந்திர சாதனங்கள் கிடைக்கவிருக்கின்றன.

இந்த வைத்தியசாலையை மீள இயக்குவதற்காக உலகவங்கியின் நிதி உதவியுடன் புதிய இயந்திரங்களைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதற்காக சர்வதேச ரீதியாக கேள்விப் பத்திரங்களை புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சுக் கோரியிருந்தது. இது விடயமாக பத்துக்கு மேற்பட்ட கேள்விகள கிடைத்திருந்தன. இக்கேள்விகள் கடந்த வாரம் திருகோணமலையில் கூடிய கேள்விச் சபைக் குழுவால் விரிவாக ஆராயப்பட்டன.

பிந்திய தொழில்நுட்பங்களுடன் கூடிய 'கோபால' பிரிவு மற்றும் நோய்களைக் கண்டுபிடிக்கும் கருவிகள் கனடாவில் இருந்து இறக்குமதிசெய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த இயந்திர சாதனங்கள ஒக்ரோபர் மாதத்துக்கு முன் இங்கு எடுத்து வரப்பட்டு பொருத்தப்படும். (ஐ-3)


**ஸ்ரீ சதாபிஷேக வாழ்த்து**



இன்று மாலைசந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயத்தில் அட்டமி திதியும், ரோகிணி நட்சத்திரமும் கூடிய கிருஸ்ண ஜயந்தி தினத்தில் காலை 9 மணிமுதல் உள்ள சுபமுகூர்த்தத்தில் அல்வாய் பிரம்மஸ்ரீ சபாரத்தினக்குருக்களின் புத்திரனும், சுழிபுரம் குடியிருப்பு சிவசுப்பிரமணியக்குருக்கள் அவர்களின் மருமகனும் மாலைசந்தை வரதராஜ விநாயகர் ஆலயப் பிரதமகுருவுமாகிய,

**கிரியா கலாப முக்தாமணி, அகோர சிவாச்சாரியார்,**

**செந்தமிழ் வித்தகர்**

பிரம்மஸ்ரீ **தேவராஜக்குருக்கள்** - ஸ்ரீமதி **தவளாம்பிகை**

தம்பதிகள்

சதாபிஷேக விழாக் காண்கிறார்கள். சதாபிஷேகம் காணும் தம்பதிகளை எல்லாம்வல்ல மாலைசந்தை வரதராஜ விநாயகப்பெருமான் அருள்பெற்று மேன்மேலும் சீருஞ்சிறப்பும் பெற்று வாழ எம்பெருமானை வேண்டிநின்று வாழ்த்துகின்றோம்.

"தொண்டர் சபை",
மாலைசந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம்,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

அல்வாய்,
மாலை சந்தை வரதராஜ விநாயகர் ஆலய
தொண்டர் சபையினர்.

'நன்றே செய் அதை இன்றே செய்'

(36142)(34-16-14)

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3754440 இலிருந்து 3771552 வரை

சீட்டிழுப்பு இல. 1536
திகதி 04.09.2004

வெற்றி எண்கள்

**05 06 16 27 48**

போனஸ் எண் **34**

ஜக்பொட் பரிசு ரூபா.**66,36,550/-** வெல்லப்பட்டுள்ளது

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 66,36,550/- | 66,36,550/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 1,00,000/- | 2,00,000- |
| 4 | 106 | 10,000/- | 10,60,000/- |
| 3 | 5,333 | 500/- | 26,66,500/- |
| 2 | 89,412 | 20/- | 17,88,240/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 05ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 109,873 | 10/- | 10,98,730/- |

இந்த புதன்கிழமை ஜக்பொட் **Rs. 15,00,000/-**

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. **1,39,50,020/-**

தொடர் இல. 2821855 க்கு மேற்பட்ட ஜாதா நிற டிக்கட்டுக்கள் 2004 செப்டம்பர் 08 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

சனிக்கிழமை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிளை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**3760502-7-98**
**3758205-9-79**
**3765755-2-59**
**3756992-4-67**
**3768118-6-34**

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

உ

ஹரி ஓம் நாராயணாய நம

**அளவெட்டி, நாகேஸ்வரம்**

**ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்**

**மஹோற்சவ விஞ்ஞாபனம்**



**28.08.2004 - 08.09.2004**



உலகம் யாவையும் தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலாவிளை யாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே.

தேர் இன்று (06.09.2004) திங்கட்கிழமை மு.ப.11.30 மணி
உறியடி இன்று (06.09.2004) திங்கட்கிழமை பி.ப.6.30 மணி
ஸ்ரீ ரங்கநாதர் பாதபூசை
07.09.2004 செவ்வாய்க்கிழமை மு.ப.9.30 மணி
தீர்த்தம் 07.09.2004 செவ்வாய்க்கிழமை மு.ப.11.00 மணி
ஆஞ்சநேயர் - வைரவர் பொங்கல் அபிஷேகம்
08.09.2004 புதன்கிழமை மு.ப.8.30 மணி
திருக்கல்யாணம்
08.09.2004 புதன்கிழமை பி.ப.3.00 மணி

நாகேஸ்வரம், அளவெட்டி. - பொறுப்புரிமைப் பரிபாலன சபை.

விழா சிறப்புற வாழ்த்துவோர்: **லிங்கன் கிறீம் ஹவுஸ்**
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-37478)(34-16-14)

# தமிழீழ மீட்புநிதி மீளப்பெறுவோர் விவரம் - 2004

### யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பிரிவு

யா/ 136 திருமதி. நஞ்சினிதேவி சற்குணராஜா
யா/ 264 திரு. நடராசா சுவர்ணராசா
யா/ 272 திரு. சிவஞானம் வெற்றிவேலாயுதம்
யா/ 301 திருமதி. ஜெயமணி டேவிட்
யா/ 349 திருமதி. சீதேவிப்பிள்ளை சுப்பிரமணியம்
யா/ 362 திரு. இராசையா லோகநாதன்
யா/ 445 திரு. நாகலிங்கம் கந்தையா
யா/ 518 திரு. சூசையோன் மனுவற்பிள்ளை
யா/ 561 செல்வி. புனிதவதி சிவஞானம்
யா/ 612 திருமதி. மகேஸ்வரி குமாரசுவாமி
யா/ 727 திருமதி. அருளானந்ததேவி மேகநாதன்
யா/ 739 திரு. வேலுப்பிள்ளை சிவஞானம்
யா/ 779 செல்வி. வணஜா மார்க்கண்டு
யா/ 850 திரு. முருகேசு சிறீபத்மநாதன்
யா/ 873 திரு. சுப்பர் கந்தையா
யா/ 995 திரு. சூசைப்பிள்ளை அலெக்சாண்டர்
யா/ 1029 திரு. அன்ரனிபிரான்சிஸ் கிளரன்ஸ்பெனடிற்
யா/ 1069 திரு. பிலிப் வேதநாயகம்
யா/ 1094 திரு. ஜோச் இராசரத்தினம் தோமஸ்
யா/ 1109 திரு. சுவாம்பிள்ளை கிறிஸ்தோப்பர்
யா/ 1153 திரு. யுவக்கீம்பிள்ளை அருள்நாயகம் டோமினிக்
யா/ 1177 திரு. ஆசீர்வாதம் மத்தியூஸ்
யா/ 1241 திரு. ஐயம்பிள்ளை சின்னராசா
யா/ 1245 திரு. பிலிப் யோசப்
யா/ 1260 திருமதி. விக்ரோறியா செபஸ்தியாம்பிள்ளை
யா/ 1322 திரு. சுப்பையா திருக்கேஸ்வரன்
யா/ 1379 திரு. வின்செனற் அன்ரனி எமில் பாலசிங்கம்
யா/ 1407 திரு. சின்னையா செல்லத்துரை
யா/ 1409 திரு. தாமோதரம்பிள்ளை இரத்தினசபாபதி
யா/ 1419 திருமதி. நல்லம்மா சந்திரசேகரம்
யா/ 1449 திருமதி. சுவானுப்பிள்ளை சிங்கராயர்
யா/ 1475 திரு. பசுபதிப்பிள்ளை கதிரவேலு
யா/ 1503 திருமதி. ஜேட்ரூட் சொர்ணம்மா ஜோசப்
யா/ 1506 திரு. சின்னட்டியர் பரமலிங்கம்
யா/ 1553 திருமதி. ஞானேஸ்வரி ஜெயதேவன்
யா/ 1576 திரு. அந்தோனிபிள்ளை ஞானப்பிரகாசம்
யா/ 1626 திருமதி. சவுதாமினி குணசீலன்
யா/ 1662 திரு. ஆறுமுகம்பிள்ளை தட்சணாமூர்த்தி
யா/ 1663 திரு. துரையப்பாசெட்டி சீனிவாசகம்
யா/ 1669 திரு. நாராயணன் ஆனந்தன்
யா/ 1708 திருமதி. அன்னம்மா பொன்னையா
யா/ 1721 திரு. ஆழ்வார் செல்லையா
யா/ 1791 திரு. இராமனாதன் சாமுவேல் அரியரெத்தினம்
யா/ 1877 திரு. செல்லத்துரை ஸ்ரீபதி கந்தராசா
யா/ 1926 திருமதி. சிசிலியா மைக்கல்
யா/ 1955 திரு. பொன்னம்பலம் செல்லத்துரை
யா/ 1982 திரு. நல்லையா மூத்ததம்பி
யா/ 1983 திரு. நல்லதம்பி விசுவலிங்கம் சரவணமுத்து
யா/ 2051 திரு. பத்திநாதர் டேவிற்சற்குணராஜா
யா/ 2054 திரு. இராயப்பு வேதநாயகம்
யா/ 2055 திருமதி. நவமணி சண்முகம்
யா/ 2091 திரு. அந்தோணிப்பிள்ளை இம்மனுவேல்
யா/ 2145 திரு. கபிரியேல் மாட்டீன்
யா/ 2154 திரு. அருளப்பு ஸ்ரனிஸ்லோஸ்
யா/ 2250 திரு. கனகரெத்தினம் சிவபாதசுந்தரம்
யா/ 2251 திரு. சாமுவேல் செல்லையா
யா/ 2354 திரு. செபஸ்ரியாம்பிள்ளை கனியூட்
யா/ 2459 திரு. யுவானிஸ் அருள்ஞானசீலன்
யா/ 2476 செல்வி. புஸ்பதேவி லோறன்ஸ் சேனாதிராசா
யா/ 2607 திரு. சின்னத்தம்பி தர்மலிங்கம்
யா/ 2617 திருமதி. திரேசம்மா ஸ்ரனிஸ்லாஸ்
யா/ 2661 திரு. ஜோர்ஜ் இராஜரட்ணம் தோமஸ்
யா/ 2701 திருமதி. சசிதரா சிறீகணேஷ் நடராஜா
யா/ 2735 திருமதி. சிவானந்தம் சரவணமுத்து
யா/ 2744 திரு. முருகப்பர் கந்தப்பன் கந்தையா அருள்பிரகாசம்
யா/ 2747 திருமதி. ஞானப்பூ இராமநாதன்
யா/ 2755 திருமதி. விஜயகுமாரி கமலநாதன்
யா/ 3042 திரு. யோசேப்பு ஞானப்பிரகாசம்
யா/ 3130 செல்வி. விக்ரறின்செல்வி இராஜரட்ணம்
யா/ 3172 திருமதி. மனோன்மணி சிவசுப்பிரமணியம்
யா/ 3179 திருமதி. மேரிறோசலின் டேவிற்
யா/ 3183 திருமதி. கசில்டா மங்களநாயகி மரியாம்பிள்ளை
யா/ 3192 திருமதி. அந்தோனியா சாமிநாதர்
யா/ 3193 திருமதி. அந்தோனியா சாமிநாதர்
யா/ 3262 திருமதி. கத்தரீன் அருளானந்தம்
யா/ 3269 திருமதி. திரேசா லில்லிமலர் சாமுவேல்
யா/ 3295 திரு. கார்த்திகேசு ஆறுமுகம்
யா/ 3338 திரு. சந்தியோ டொமினிக் லோறன்ஸ்
யா/ 3591 திரு. மனவல் அருளப்பு
யா/ 3600 திருமதி. அமலறாணி ஜோக்கிம்பிள்ளை
யா/ 3619 திரு. நமசிவாயம் நடேசன்
யா/ 3652 திருமதி. மணி சின்னராசா
யா/ 3721 திரு. சித்திவினாயகர் ஆறுமுகம் நவரெட்ணம்
யா/ 3829 திரு. வல்லிபுரம் திரவியம்
யா/ 3840 திருமதி. அன்னம்மா நீக்கிலாஸ்
யா/ 3859 திருமதி. தயாமணி நவரத்தினம்
யா/ 3873 திருமதி. இராசம்மா சோமசேகரம்
யா/ 4003 திரு. சிவஞானசுந்தரக்குருக்கள் கிருபானந்தசர்மா
யா/ 4009 திரு. ஆறுமுகம் செல்லையாபிள்ளை
யா/ 4052 திரு. சவிரிமுத்து நீக்கிலாம்பிள்ளை
யா/ 4094 திரு. சந்தியாப்பிள்ளை லூக்கேஸ்பிள்ளை
யா/ 4180 திருமதி. நவமணி இராசரத்தினம்
யா/ 4193 திரு. சேவியர் மரியோ செபஸ்ரியன் தங்கராசா சிற்றம்பலம்
யா/ 4273 திருமதி. பிரியதர்ஷினி மகேந்திரராஜா
யா/ 4316 திரு. யோசேப் இம்மனுவல்
யா/ 4382 திருமதி. மேரிபிலிப்பா வில்லியம்
யா/ 4430 திருமதி. இமெல்டா இராஜசிங்கம்
யா/ 4523 திரு. சின்னையா துரைராசா
யா/ 4563 திரு. சூசைப்பிள்ளை பிரான்சிஸ்பிள்ளை அல்போன்ஸ்
யா/ 4581 திருமதி. சரஸ்வதி சிவகுருநாதன்
யா/ 4592 திருமதி. இளையபிள்ளை வேலாயுதம்
யா/ 4649 திரு. சின்னப்பு பொன்னம்பலம்
யா/ 4698 திரு. சாமுவேல் பென்சமின்
யா/ 4718 திரு. சிவப்பிரகாசம் இராசசூரியர்
யா/ 4750 திருமதி. பரமேஸ்வரி ஜேசுதாசன்
யா/ 4780 செல்வி. தனபாலசரஸ்வதி சபாரெத்தினம்
யா/ 4811 திரு. ஆறுமுகம் அருளம்பலம்
யா/ 4836 திரு. அருணாசலம் பற்குணம்
யா/ 4848 திரு. கணபதிப்பிள்ளை பூவிலிங்கம்
யா/ 4867 செல்வி. விக்டோறியா ஞானம்மா சொலமன்
யா/ 4869 திரு. இராமு வினாசித்தம்பி
யா/ 4881 திரு. நாகலிங்கம் தம்பிராசா
யா/ 4928 திரு. அருணாசலம் கனகேந்திரன்
யா/ 4941 திரு. யோவாம்பிள்ளை ஏபிரகாம் மூத்ததம்பி
யா/ 4945 திருமதி. சிசிலியா தேவதாஸ்
யா/ 4993 திருமதி. கமலாம்பிகை நடராசா
யா/ 5015 திருமதி. புளோறன்றி வல்லிபுரம்
யா/ 5020 திரு. மருசலீன் இன்பநாதன்
யா/ 5057 திரு. யோசேப் யேசுதாசன்
யா/ 5061 திரு. யோசுவா சிங்கரட்ணம்
யா/ 5069 திரு. கஸ்பார் வஸ்தியாம்பிள்ளை
யா/ 5118 திரு. சண்முகம் நாராயணசுவாமி
யா/ 5135 திரு. நாகநாதர் சுப்பையா
யா/ 5138 திருமதி. தங்கரெத்தினம் சிவஞானம்
யா/ 5144 திரு. வெற்றிவேலு நடராசா
யா/ 5154 திரு. கந்தையா இராசரத்தினம்
யா/ 5189 திரு. திருஞானசம்பந்தர் சண்முகசுந்தரம்
யா/ 5206 திருமதி. சத்தியபாமா விவேகானந்தா
யா/ 5208 திரு. செல்லத்துரை லோகேஸ்வரன்
யா/ 5210 திரு. கணபதிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை
யா/ 5236 திரு. முருகேசு செல்லையா
யா/ 5243 திருமதி. இராசமணி நாகரத்தினம்
யா/ 5250 செல்வி. தங்கமுத்து குழந்தை
யா/ 5290 திரு. வெள்ளைச்சாமி முத்தையா
யா/ 5302 திரு. யோசப் அந்தோனிப்பிள்ளை
யா/ 5303 திரு. மாணிக்கம் சண்முகநாதன்
யா/ 5304 திருமதி. யேற்றூட் ஆசைப்பர்னாந்து
யா/ 5326 திரு. அருளப்பர் மரியாம்பிள்ளை
யா/ 5333 திரு. கண்ணப்பன் சின்னப்பூச்சி
யா/ 5340 திரு. பிற்றர் அல்பேட் அலோசியஸ்
யா/ 5341 திரு. சுப்பையா ஐயாத்துரை
யா/ 5352 செல்வி. எஸ்தர் சூசைப்பிள்ளை
யா/ 5361 திருமதி. பொன்னம்மா கந்தையா
யா/ 5375 திரு. முருகேசு வேலுப்பிள்ளை நவரத்தினம்
யா/ 5378 திரு. தம்பிராசா யேமிசிங்கம்
யா/ 5402 திரு. மருசலீன் ஜோசேப்
யா/ 5425 திருமதி. கொறற்றி நஞ்சினி வென்சஸ்லாஸ்
யா/ 5446 திரு. மரியான் சூசைப்பிள்ளை
யா/ 5449 திருமதி. டொறத்தி வலன்ரைன்
யா/ 5519 திரு. வெங்கட்ராமன் நாராயணசாமி
யா/ 5523 செல்வி. றூபி அக்கினஸ் ஜோன்பிள்ளை
யா/ 5530 திருமதி. ரூபி அரியரத்தினம்
யா/ 5535 திரு. பொன்னு கந்தையா
யா/ 5583 திரு. கபிரியல் பப்ரிஸ்ற்
யா/ 5638 திருமதி. மாகிறெட் யோண்
யா/ 5671 திருமதி. மங்கையற்கரசி அம்பாள் மயில்வாகனம்
யா/ 5679 திரு. சுந்தரம் ஞானசுந்தரம்
யா/ 5841 திருமதி. போலின் சின்னையா
யா/ 5865 செல்வி. உதயவர்ணி தங்கராஜா
யா/ 5878 திருமதி. நேசம்மா இளையதம்பி
யா/ 5920 திருமதி. மாகிறேற் இமானுவேல்
யா/ 5938 திரு. கந்தையா மகேஸ்வரன்
யா/ 5952 திருமதி. யோன்சி டொனிசியஸ்
யா/ 5956 திருமதி. மேரியோசேப்பின் இரத்தினம் பிரான்சிஸ்
யா/ 6025 திரு. தம்பிமுத்து பரராசசிங்கம்
யா/ 6039 திருமதி. பாக்கியம் வேலுப்பிள்ளை
யா/ 6044 திருமதி. பொன்னம்மா பாலசுப்பிரமணியம்
யா/ 6051 திரு. எமிலியஃஸ் பிளேவியன்
யா/ 6090 திரு. செல்வரத்தினம் சிறீஸ்கந்தரத்தினம்
யா/ 6168 திருமதி. பிலோமினா டேவிற்
யா/ 6216 செல்வி. மதிவதனி சின்னத்தம்பி
யா/ 6218 திரு. சுப்பையா மாணிக்கம்
யா/ 6225 திரு. யோசப் இம்மானுவேல் துரைசிங்கம்கிறிஸ்தோபர்
யா/ 6249 திருமதி. செல்லம் சின்னத்தம்பி
யா/ 6255 திரு. ஆறுமுகம் நடேசு
யா/ 6263 திரு. ஆறுமுகம் இராசையா
யா/ 6270 திருமதி. அன்னம்மா முத்துத்தம்பி
யா/ 6289 திருமதி. பாக்கியம் துரையப்பா
யா/ 6312 திரு. சுந்தரம்பிள்ளை சிவராசா
யா/ 6325 திரு. மயில்வாகனம் பொன்னுத்துரை
யா/ 6411 திரு. இராமநாதர் சம்பந்தநாதன்
யா/ 6420 திருமதி. மரியம்மா அலேஸ்
யா/ 6444 திரு. ஜேக்கப் விக்ரர் பெஞ்சமின்
யா/ 6460 திரு. ஏபிரகாம்பற்றிக்ஸ் பிரின்ஸ் எதிர்மனசிங்கி
யா/ 6478 திரு. சந்தியாப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை
யா/ 6488 திருமதி. ஆச்சிமுத்து கனகரத்தினம்
யா/ 6501 திரு. ஆறுமுகம் செல்லையா (அருளப்பு )
யா/ 6541 திரு. சவரிமுத்து சின்னப்புநாயகம்
யா/ 6577 திரு. அம்பலம் முத்துக்குமார்
யா/ 6587 திருமதி. செல்லம்மா விஸ்வலிங்கம்
யா/ 6593 திரு. ஆனந்தகுமார் யூலியன்
யா/ 6599 திருமதி. சாரதா கனகசுந்தரம்
யா/ 6604 திருமதி. லில்லி றெஜினா பிரான்சிஸ்ஒவ்மேரி
யா/ 6608 திரு. சுப்பிரமணியம் கதிர்காமநாதன்

(வளரும்)


## காரியாலய உத்தியோகத்தர் தேவை

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் காரியாலய பணிகளை மேற்கொள்வதற்கு காரியாலய உத்தியோகத்தர் தேவை.

**தகைமைகள்:-**

1. க.பொ.த.உயர்தரம் சித்தி.
2. தமிழ், ஆங்கில தட்டச்சு இயக்கத் தெரிந்தவராக இருத்தல் அவசியம்.
3. கணனி பயிற்சி பெற்றவர் விரும்பத்தக்கது.
4. யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக் கது.

தங்களது விண்ணப்பம் எதிர்வரும் 10.09.2004இற்குப் பிந்தாமல் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம்,
31/1பி, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (36154) (33-13-18)

- செயலாளர்.

## கைச்சங்கிலி தவறிவிட்டது

நேற்று (05.09.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 - 12 மணிக்கிடையில் சண்டிலிப்பாயிலிருந்து யாழ்ப்பாணம் வரும்வழியில் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் கீழுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

T.P.: 0777 283589 (36193)

நிறஞ்சனாஸ் சங்கானை
ஷொக்
பிரசாந். மீனா. அப்பாஸ் நடித்த
தினசரி: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி. சனி. ஞாயிறு.
(ரீமல்) STRIKE FORCE (இரவு 8.45பு.நே)
(C/36805) (33-13-18)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த மதுர

பு.நே.:10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நாகம்ஸ் சுன்னாகம்

கமலஹாசன். சிநேகா. பிரபு. பிரகாஸ்ராஜ் நடிப்பில்
வசூல்ராஜா MBBS
(சி-36415)(33-13-18) காட்சிநேரம்: 11.00,3.00, 7.00 (பு.நே.)
07ஆம் திகதி முதல் கள்ளரன்


## மரண அறிவித்தல்கள்

### திருமதி இரகுநாதன் சிவயோகமணி

(வட்டுக்கோட்டை)

சுண்டுக்குழியைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும், தற்போது கொழும்பு, பம்பலப்பிட்டி தொடர்மாடியில் வசித்தவருமாகிய திருமதி இரகுநாதன் சிவயோகமணி நேற்று (05.09.2004) ஞாயிறு காலை கொழும்பில் காலமானார்.

அன்னார் அமரர் இரகுநாதனின் அன்பு மனைவியும் தில்லைநாதன் (Chemanex), இராகினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் மதிவதனி (பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு - 12), சிவசிதம்பரம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் வினோத், ஷரங்கா, அபித்திரா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரது பூதவுடல் பொறளை A.F. றேமன்ஸ் மலர்ச்சாலையில் இன்று (06.09.2004) திங்கட்கிழமை காலை 9 மணியிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (07.09.2004) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பி.ப. 1.30 மணிக்கு பொறளை பொதுமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பம்பலப்பிட்டி,*
*கொழும்பு.* (36106) (33-13-18)

தகவல்:
இ.தில்லைநாதன்
(மகன்)

### சவரிமுத்து அன்ரனி

(இளைப்பாறிய புகையிரத ஊழியர்)



இராஜசிங்கம் வீதி, திருநகரைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து அன்ரனி (அந்தோனி) 4.9.2004 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மீனாட்சியின் அன்புக் கணவர் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2004) திங்கட்கிழமை காலை 10மணிக்கு (பு.நே.) அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வீடமைப்புத்திட்டம்,*
*நாவற்குழி.* (36138) (33-13-18)

தகவல்:
அ.சவரிமுத்து
(மகன்).

# சுதந்திரக்கட்சி அலுவலக கட்டட அடிக்கல்லைக் காணவில்லை!

## நட்டு இரண்டே நாள்களுக்குள் சம்பவம்

சுதந்திரக்கட்சியின் தலைமையகக் கட்டடத் திறப்பு விழாவின்போது திரைநீக்கம் செய்து வைக்கப்பட்ட நினைவுக்கல் காணாமற போயுள்ளது.

பத்தரமுல்லவில் கட்சித் தலைமையகக் கட்டடத்திற்கான அடிக்கல்லைக் கடந்த வியாழனன்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நட்டார். நினைவுக்கல்லையும் அவரே திரைநீக்கம் செய்தார். எனினும் அடிக்கல்லில் அவரின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கவில்லை.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அவரின் தகப்பன் பண்டாரநாயக்க, தாய் சிறிமா ஆகியோரின் பெயர்களே அதில் இடம்பெற்றிருந்தன.

திரைநீக்கம் செய்து இரண்டு தினங்களுள் அக்கல் காணாமற்போயுள்ளது. உட்கட்சிக் குழப்பமே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திரக்கட்சியின் தலைமையகக் கட்டடத்திற்கான அடிக்கல்லை ஜனாதிபதியே நடவிருந்தார். அவரே நினைவுக்கல்லையும் திரைநீக்கம் செய்ய ஏற்பாடாகியிருந்தது.

எனினும், நேரம் பொருத்தமில்லை, சகுனம் ஒத்துவரவில்லை எனக்கூறி இறுதி நேரத்தில் நிகழ்வை ஒத்திப்போடுமாறு ஜனாதிபதி கோரியிருந்தார்.

இருப்பினும், நிகழ்வுகள் திட்டமிட்டபடி நடந்தன. ஜனாதிபதி அதில் சமுகமளித்திருக்கவில்லை.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அடிக்கல்லை நட்டு, நினைவுக்கல்லையும் திரைநீக்கம் செய்துவைத்தார். வெண்கலத்தினாலான அக்கல் காணாமற்போயுள்ளது. (க-3)

## பம்பலப்பிட்டியில் சிறுவனின் சடலம் மீட்பு!

கொழும்பு,செப்.6

பம்பலப்பிட்டியில் சென்.பீற்றர்ஸ் வீதியிலுள்ள வீடு ஒன்றிலிருந்து சிறுவன் ஒருவனின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

பல் வைத்தியர் ஒருவரின் பதினாறு வயதுடைய மகனே சடலமாக மீட்கப்பட்டார்.

தூக்கில் தொங்கியவாறு சடலம் காணப்பட்டது. சிறுவனது மரணம் கொலையா, தற்கொலையா என்பது தெரியவில்லை என பம்பலப்பிட்டிப் பொலீஸார் தெரிவித்தனர். விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (க-3)

## இந்தியாவுக்கு ரணில் விஜயம்

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அடுத்தமாதம் இந்தியாவிற்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்தியாவின் முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்துவதற்காகவே இவர் அங்கு செல்கின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தற்போது இந்தியாவில் தங்கியுள்ள ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (3-13)

## 'காஸ்' விலை நள்ளிரவு உயர்ந்தது

வீட்டுப்பாவனைக்கான ஷெல்காஸ சிலிண்டரின் விலை நேற்று நள்ளிரவுக்குப் பின் 99 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று ஷெல காஸ் சிலிண்டர் நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்தப் புதிய அதிகரிப்பின்படி கொழும்புப் பகுதியில் மீள் நிரப்பப்பட்ட 12.5 கிலோகிராம் எடையுள்ள வீட்டுப் பாவனைக்கான காஸ் சிலிண்டரின் விலை 789 ரூபாவாக இருக்கும்.

கொழும்பைச் சூழவுள்ள பகுதிகளில் 690 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட சிலிண்டர் ஒன்றின் விலை 14.35 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் -

உலக சந்தையில் ஏற்பட்ட எரிபொருளின் விலையேற்றம் காரணமாகவே இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (3-13)

## மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய மாவட்டங்களின் விவரம் வருமாறு:- கிளிநொச்சி - 191, வவுனியா - 41, முல்லைத்தீவு - 82, மன்னார் - 40.

*(யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் தமிழீழ மீட்பு நிதி மீளப் பெறுவோர் விவரம் 15ஆம் பக்கத்தில்.)* (எ-3)

# புலிகளுடன் பேச்சை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்பொழுது பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும். ஆனால் ஜனாதிபதி ஜே.வி.பியினரால் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

இதனால் தேசிய நலனில் அக்கறையுடன் அரசுக்கு உதவமுன்வந்துள்ளோம். இந்தச் சந்தர்ப்பத்தை ஜனாதிபதி பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அரசியல் இலாபம் தேடமுனையாமல் திறந்த மனதுடன் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உரிய முறைப்படி அழைப்பு விடுக்கவேண்டும். யதார்த்தம் புரிந்து செயற்படவேண்டும். அப்போது எந்த விதமான நிபந்தனைகளும் இன்றி இவ் விடயத்தில் அரசுக்கு உதவுவோம் என்றும் டாக்டர் ராஜித சேனாரத்ன கூறினார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தன்னிச்சையாகவே முடிவெடுத்து அரசுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளது. இது நாங்கள் எதிர்பார்த்த ஒன்றுதான். சுயமாக தீர்மானிக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு.

சௌமியமூர்த்தி தொண்டமான் தனது சகாக்களை எதிர்க்கட்சியில் விட்டு தான் மட்டும் சந்திரிகாவுடன் இணைந்து அமைச்சரானார். அதே போன்று ஆறுமுகன் தொண்டமான் எம்முடன் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு சகாக்களை அரசுப்பக்கம் அனுப்பவுள்ளார். சிலர் அமைச்சர்களாகலாம். எதையும் பொறுத்திருந்து பார்ப்போம் என்றும் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

# வியாபாரப் பொருளாக..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ச் சமூகத்தின் கல்வி நிமிர்வுக்கு முக்கிய காரணமான - ஒப்புயர்வற்ற - எரிந்துபோன - இந்த நூலகத்தில் இந்தக் காண்பியக் காட்சியை இன்று நிகழ்த்திக்கொண்டிருக்கின்றோம். சுருங்கக்கூறின் வெள்ளையடிக்கப்பட்ட வெறும் கட்டடத்தில் நாங்கள் கூடியிருக்கின்றோம். உண்மையில் இங்கு இருப்பது கற்கள் மட்டும்தான்.

எங்களுடைய நூலகம் என்றோ எரிந்துபோய்விட்டது. இந்த நூலகத்தைப் பார்க்கின்ற போது சுடுகாட்டின் மத்தியிலே இருக்கின்ற கல்லறைக்கு முன்னால் நிற்கின்ற மனநிலையே ஏற்படுகின்றது. வெளியே வெள்ளையடிக்கப்பட்டும் உள்ளே சிதைக்கப்பட்டிருக்கும் இந்த நூலகத்தைப் போலவே தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவும் மாறவேண்டும் என்று சிங்கள பேரினவாத வன்முறை நோக்கம் கொண்ட ஆட்சியாளர்கள் இன்று நினைக்கின்றார்கள்.

இன்று சமாதானம் என்பது வெறுமனே வியாபாரப் பொருளாக இருக்கின்றது. சமாதானத்தின் உண்மையான அர்த்த பரிமாணத்தை போராளிகளாகிய, தமிழ் மக்களாகிய நாம் புரிந்துகொண்டிருக்கின்றோம். எங்களுடைய விடுதலைப் போராட்டம் ஓர் உன்னதமான நிலையை அடைந்து தமிழ் மக்களை தமிழ் மக்களுக்கே உணர்த்தியிருக்கிறது. இந்த விடுதலைப் போராட்டம் இல்லாது போயிருந்தால் தமிழ் மக்கள் ஏதோ ஒன்றுக்குள் தம்மைக் கரைத்துக்கொண்டிருப்பார்கள். எங்களை நாங்களே அடையாளங் காண்பதற்கும் எங்களை நாங்களே நிலைநிறுத்திக் கொள்வதற்கும் இந்தப் போராட்டம் வழியமைத்துத் தந்தது.

போர் வீரனுக்கும் போராளிக்கும் நிறையவே வித்தியாசம் உண்டு. ஓர் இயந்திரத்தைப் போன்று யுத்தத்துக்கும் கொலைக்கும் மட்டுமே போர் வீரன் பயிற்றுவிக்கப்பட்டவன்.

ஆனால், போராளி என்பவன் தனது இலட்சிய ஆத்மாவைக் காப்பதற்காக தன்னையே அர்ப்பணிப்பவன்.

இன்றைய நிகழ்வில் கலந்துகொண்டுள்ள சிங்கள சகோதர சகோதரிகளே, நீங்கள் இந்தக் காண்பியக் கலை நிகழ்ச்சியில் கலந்துகொள்வதன் ஊடாக தமிழ் மக்களுடைய மனங்களையும் தரிசித்துச் செல்கின்றீர்கள். இன்றைய காண்பியக் காட்சிகள் எமது வெளிப்பாடுகளின் ஒரு சிறுபகுதி மட்டுந்தான்.

இந்தக் காண்பியக் கலைகளை வளர்த்தெடுப்பதிலும், காண்பியக் கலைகளின் ஊடாக உணர்வுகளை வெற்றிகரமாக வெளிப்படுத்த முடியும் என்பதிலும் எமது தேசியத்தலைவர் மிகுந்த நம்பிக்கை கொண்டவர். நாங்கள் போர்க்களங்களிலே நிற்கின்றபோது கூட எமது போராளிகள் எத்தனையோ காண்பியக் கலை வெளிபாடுகளை வடித்திருக்கின்றார்கள். காயப்பட்டும் கைகளையும், கண்களையும் இழந்த போராளிகள் கூட இந்தக் காண்பியக் கலை வெளிப்பாடுகளை வடிக்கும் வல்லமையோடு உள்ளார்கள்.

ஓர் உன்னதமான கலை, நெருக்கடியான வாழ்க்கையிலிருந்தே உருவாகும் என்பதனை நாங்கள், எங்களது நடைமுறை வாழ்க்கைக்கு ஊடாக கண்டுகொண்டிருக்கின்றோம். இக்கலை வெளிப்பாடுகள் கூர்மையான - முழுமையான - வடிவத்தைப் பெற்றிருக்காது விட்டாலும் கூட அவை கருப்பொருளில் அர்த்தம் செறிந்ததாகவே உள்ளன. எதிர்காலத்தில் இக்கலை வெளிப்பாடுகளில் முதன்மையான நிலையை எமது மக்கள் வகிப்பார்கள். குறிப்பாக, எமது போராளிகள் உன்னதமான பங்கை வெளிப்படுத்துவார்கள் என்பதில் நிறைந்த நம்பிக்கை எமக்கு உண்டு.

இந்நிகழ்வுக்கு சிங்களச் சகோதரர்களும் வருகைதந்து இரு இன மக்களும் சேர்ந்து தமது மனங்களை வெளிப்படுத்துவதையிட்டு நாங்கள் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றோம். உங்களிடம் விடுதலைப் போராளியாக நான் ஒரு விடயத்தைக் கேட்டுக்கொள்கிறேன். தெற்கிலுள்ள எங்களுடைய சகோதர சகோதரிகள் பலர் எங்களுடைய போராட்டத்தின் உண்மையை இன்னும் புரியாமல் இருக்கலாம். அவர்களுக்கு நீங்கள், எங்களது ஆன்மாவின் உண்மைத் தன்மையை நீங்கள் போய்ச் சொல்லவேண்டும். எப்போதுமே நாங்கள், சிங்கள பேரினவாத மனோபாவம் கொண்ட ஆட்சியாளர்களை மட்டுமே எதிர்க்கின்றோம். சிங்கள மக்களை எங்களுடைய நல்ல நண்பர்களாகவே நாங்கள் பார்க்கின்றோம். உண்மையான - நிரந்தரமான - சமாதானம் ஏற்படவேண்டும் என்பதில் நாங்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் ஈடுபட்டிருக்கின்றோம்.

சமாதானத்தை முன்னெடுப்பதற்கான நிகழ்வுகள் என்று கூறிக்கொள்பவற்றில் பல, உண்மையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக நடத்தப்படுபவை அல்ல.

சமாதானத்தை வெறுமனே பேச்சளவில் தலைப்பாகக் கொண்டிராமல், ஆன்மாவின் வெளிப்பாடாக்கக் கொண்டுள்ள இந்த நிகழ்வில் நிரந்தரமான சமாதானத்துக்காக நாங்கள் அனைவரும் இணைந்து உழைக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். - என்று தமிழினி மேலும் கூறினார்.

இந்நிகழ்வில், மங்கள விளக்கினை சிற்பாச்சாரியார் சி.அமரசிங்கம், கலாநிதி சிதம்பரநாதன், தீர்த்த சர்வதேச கலைஞர் கூட்டிணைப்பின் பெண் ஓவியர் அனோலி பெரேரா மற்றும் குடாநாட்டுக் கலைஞர் செல்வி குமுதா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி மற்றும் அகழ்வாராய்ச்சியாளரும், விரிவுரையாளருமான ஜெகத் வீரசிங்க உட்படப் பலர் கலந்துகொண்டனர். (எ-3-5-9)

# தொண்டமானின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலின்போது ஆறுமுகன் தொண்டமானைப் பார்த்து 'ஆறுமுகம் ஆனபொருள் முருகன் தருவானா? என்று கேட்டேன். அதுமட்டுமல்ல எந்த முகத்துடன் தமிழ் மக்களின் பிரச்சினையை அணுகப் போகிறீர்கள் என்று வினவினேன்.

அதுமட்டுமல்ல பிந்துனுவெவ முகாம் படுகொலை மற்றும் கந்தப்பொல படுகொலை போன்ற சம்பவங்களைப் பார்த்து நாம் கொதித்தெழுந்து அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கறுத்தப்பட்டிப் போராட்டங்களை நடத்தியதுடன், அதனைக் கண்டித்து நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தினோம். ஆனால், அதில் பங்கேற்கவேண்டிய தொண்டமான் சபையில் வாய் திறக்காமல் பேசாமல் இருந்தார்.

இந்தச் சம்பவங்கள் ஆறுமுகம் தொண்டமானை எந்த நிலையிலும் நம்பமுடியாது என்பதனைத் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. இவருடைய பாட்டனாரும் ஆளும் கட்சியுடன் ஒட்டி உறவாடி உறவுகொண்டபோதும் காலம் கடந்து ஞானம் பெற்ற நிலையில் விடுதலைப் புலிகளை ஆதரித்ததுடன் தமிழ் மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தார்.

இதனை நாம் மறுக்கவோ மறைக்கவோ இல்லை.

ஆனால், அவரது பேரனான ஆறுமுகன் தொண்டமான் அரசியலில் காலடி எடுத்து வைத்த நாள்முதல் குழப்ப அரசியல் நடத்தி குதர்க்கவாதம் செய்து ஈழத்தமிழ் மக்களையும், மலையக மக்களையும் நடுக்கடலில் தத்தளிக்கவிட்டுள்ளார்.

ஆறுமுகன தொண்டமான் தமிழ்மக்களுக்கு உதவிசெய்யாவிட்டாலும், உபத்திரவம் செய்யாமலாவது இருக்கலாம். மாறாக நிபந்தனையற்ற நிலையில் மலையக மற்றும் ஈழத் தமிழ் மக்களை கொன்றொழிக்கும் செயலில் ஈடுபட்டிருக்கும் அரசிற்கு நிபந்தனையற்ற வகையில் ஆதரவு வழங்க முன்வந்துள்ளமை எமக்கு வியப்பைத் தருகிறது. வரலாறு இவரை ஒரு போதும் மன்னிக்காது.

ஆறுமுகன் தொண்டமானை நாம் திருப்பி ஆட்கொள்வது கடினம். வரலாறு அவருக்கு உரிய தீர்ப்பை வழங்குவது உறுதி என்றார். (எ-5)

# மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலை நாளாக' பிரகடனப்படுத்தப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டுவருகின்றது.

நேற்று மட்டு. - அம்பாறை மாவட்டங்களில் இடம்பெற்ற ஹர்த்தால் காரணமாக இப்பகுதிகளில் இயல்பு நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது. உள்ளூர் மற்றும் தூர இடங்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் எவையும் இடம்பெறவில்லை.

வர்த்தக நிலையங்கள், கடைகள் மற்றும் பொதுச் சந்தைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. தனியார் கல்வி நிலையங்களில் வகுப்புக்கள் இடம்பெறவில்லை. வீதிகள் யாவும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்கள் ஞாபகார்த்தமாக இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன.

நேற்று கல்முனை நகரில் தமிழ், முஸ்லிம் வர்த்தகர்களின் அனைத்துக் கடைகளும் மூடப்பட்டிருந்தன. கல்முனை பஸ் நிலையத்திலிருந்து மட்டக்களப்பு, அம்பாறை, அக்கரைப்பற்று ஆகிய பிரதேசங்களுக்கு கிழக்குப் போக்குவரத்து சபையின் பஸ்களோ தனியார் போக்குவரத்து சபையின் பஸ்களோ எவையும் சேவையில் ஈடுபடவில்லை.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கல்முனை நகரில் வியாபாரம் மும்முரமாக நடைபெறும் நாளாகும். இந்நாளில் முஸ்லிம் வர்த்தகர்களும் தமது வர்த்தக நிலையங்களை மூடி தமிழின உயிர்க்கொலை நாளை கரிநாளாகக் கருதி அதற்கு ஆதரவு வழங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்முனை நகரின் முக்கிய கேந்திர நிலையங்களில் விசேட அதிரடிப்படையினரும் பொலீஸாரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு, திருக்கோவில், சம்மாந்துறை, நாவிதன்வெளி, பொத்துவில், பாண்டிருப்பு, நீலாவணை ஆகிய இடங்களிலும் ஹர்த்தால் காரணமாக வழமையான நடவடிக்கைகள் முடங்கியிருந்தன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேசங்களிலும் வர்த்தக நிலையங்கள் மற்றும் கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. மட்டக்களப்பு நகர்ப் பகுதியில் பொலீஸாரும், இராணுவத்தினரும் கூட்டாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

புறநகர்ப் பகுதிகளான ஆரையம்பதி, புதுக்குடியிருப்பு, களுவாஞ்சிக்குடி, பட்டிருப்பு, களுதாவளை, தேற்றாத்தீவு, செட்டிபாளையம் ஆகிய இடங்களிலும் விசேட அதிரடிப்படையினர் தீவிர ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். (எ-க-9-13)

# ஓட்டமாவடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லொன்றையடுத்து அங்கு விரைந்த வாழைச்சேனைப் பொலீஸார் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டனர். இதனால் சிறிது நேரம் ஓட்டமாவடி பிரதான வீதியில் வாகனப் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

இதனையடுத்து, குண்டு செயலிழக்கச் செய்யும் படைப்பிரிவைச் சேர்ந்த விசேட இராணுவ நிபுணர்களின் உதவியுடன் குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டதாக வாழைச்சேனைப் பொலீஸார் தெரிவித்தனர்.

ஓட்டமாவடி, வாழைச்சேனைப் பிரதேசங்களில் அண்மைக்காலமாக வெடிகுண்டுத் தாக்குதல் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன. கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஓட்டமாவடி பிரதான வீதியில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றின் மீது இனம் தெரியாத நபர்கள் கைக்குண்டுகளை வீசித் தாக்குதலை மேற்கொண்டனர். சம்பவத்தின்போது பயன்படுத்தப்பட்ட குண்டொன்றே கைவிடப்பட்டிருக்கலாம் என்று வாழைச்சேனைப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர். (க)


**இந்திய பரம்பரை ஜோதிடர்**



அருள்வாக்கு
**அம்பிகா அம்மா**
மீண்டும் யாழ்.புண்ணிய பூமிக்கு வருகை.
**கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும்.**
உங்களுக்கு எந்தவகையான பிரச்சினைகள் ஆனாலும் ஜாதக ரீதியாக கிரகதோசம் நீக்கி, நீங்கள் வாழ்க்கையில் வெற்றி பெறவும் வியாழமாற்றம் உங்களுக்கு எப்படி? என்பதை அறிந்து கொள்ளவும இன்றே அருள்வாக்கு அம்பிகா அம்மாவை நேரில சந்திக்கவும். சந்திக்கும் இடம்:
**அருள்வாக்கு அம்பிகா அம்மா**
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீ முருகன் ஜுவல்லர்ஸ் / லிங்கன கூல்பார் அருகில்
H.P.No. 077 6127444, 077 6172644
(35821)(17-18-32)

**வாடகைக்கு வீடு தேவை**
யாழ்.மாநகர சபை எல்லைக்குள் கைத்தொழில் நிறுவனம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு தேவை.
தொடர்பு: T.P.: 0777536108
(ச-37473) (32-17-18)

சில கெடுபிடிகள் காரணமாக யாழ்.நகரில் தடைப்பட்ட எனது பொருளியல் வகுப்பு மீண்டும் நகரில் ஆரம்பமாகின்றது.
**A/L Day Class**
பொருளியல்: S.ஜெயகுமார்
B.A. (Hons) Eco. Spl.
ஆரம்பம்: 07.09.2004
செவ்வாய் 8.00 மணி (ப.நே.)
**BEACON**
யாழ்நகர். (ச-36140)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.09.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.